www.tamilarangam.net
தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்

THAYAGAM
75¢
29 . 7 . 94
உண்மை:6
தேடல்:3+4

# தாயகம்

# தொடர்ந்தும் ஜனாதிபதி ஆட்சிமுறையே அமுல்

## ஐ.தே.கட்சியின் புதிய முடிவு

**கிழக்கில் கூட்டணிக்கு செல்வாக்கு**

**காமினி, சந்திரிகாவுக்கு கமாண்டோ பாதுகாப்பு**

**தேர்தல் வன்முறையால் எண்மர் பலி**

**ரொறன்ரோ சர்வதேச திரைப்படவிழாவில் மணி ரத்தினம் கௌரவிக்கப்படுகிறார்**
கலந்து கொள்ள கனடா வருகிறார்

நகரின் மத்தியில்
துரித பணமாற்றுச் சேவை
CDவிற்பனையாளர்
SENDURAN & CO
584 A, PARLIAMENT ST, TORONTO
(416) 962 7397

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# தரத்தின் சின்னம்

## நிரு பிராண்ட்®

## Niru Brand®

**நிரு பிராண்ட் தயாரிப்புகளுக்கு நிகர்**
*Niru Brand*® **தயாரிப்புகளே.**

**போலிகளை வாங்கி ஏமாறுதீர்கள்**

நிரு பிராண்ட் தயாரிப்புகளின் தரம்
பாவித்தவர்களுக்கு மட்டுமே புரியும்.

**உங்கள் கைகளில் கிடைப்பது தரமான**
**நிரு பிராண்ட் தயாரிப்புகளா?**
**என்பதை உறுதிப்படுத்துங்கள்**

*Niru Enterprises Inc,*

**Tel:(416) 299-4202**

நிரு பிராண்ட் தயாரிப்புக்கள் எல்லா
இலங்கை வர்த்தக நிலையங்களிலும் விற்பனையாகின்றன.
உங்கள் ஏமாற்றத்தைத் தவிர்ப்பதற்கு எம்முடன் தொடர்பு கொண்டு
எமது தயாரிப்புகள் எப்பொழுதும் கிடைக்கக் கூடிய வர்த்தக நிலையங்களை அறியலாம்

www.tamilarangam.net தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்

Second class mail Registration No:8435

R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323

# தாயகம்
'உண்மையைத் தேடி'

## முக்கிய தலைவர்களுக்கு கமாண்டோ பாதுகாப்பு

முக்கிய தலைவர்களைப் பாதுகாக்க இராணுவ கமாண்டோக்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். பாதுகாப்பு அமைச்சு இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. சந்திரிகா, காமினி திசநாயக்க, தினேஷ் குணவர்த்தன ஆகியோருக்கே இந்தப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. வழமையில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமே இந்த வகையான பாதுகாப்பு வழங்கப்படுகிறது. இவர்கள் மூவரின் பாதுகாப்பு குறித்தும் அச்சம் தெரிவிக்கப்பட்டதை அடுத்தே இந்த பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## தேர்தலைக் கண்காணிக்க இளைப்பாறிய தளபதிகள்

அடுத்த தேர்தலை கண்காணிக்க இளைப்பாறிய சிரேட்ட இராணுவ, பொலிஸ் அதிகாரிகள் சம்மதம் தெரிவித்துள்ளனர். இவர்களில் நான்கு இராணுவத் தளபதிகள் அடங்குவர். தேர்தல் நீதியாக நடைபெற வேண்டும் என்பதை உறுதி செய்வதே தமது நோக்கம் என்று இவர்களின் சார்பில் முன்னாள் விமானப் படைத் தளபதி ஹரி குணதிலக தெரிவித்திருக்கிறார். 'இரு தரப்பிலும் வேட்பாளர்கள், அவர்களின் பிரதிநிதிகளால் எந்த இடையூறும் வராமல் உறுதி செய்வதே தமது நோக்கம்' என்றும் அவர் தெரிவித்தார்.

முப்பது இளைப்பாறிய இராணுவ, பொலிஸ், படை அதிகாரிகள் நாடெங்கும் அடுத்த வாரம் விஜயம் செய்து நிலைமையை அவதானிப்பார்கள்.

## தேர்தல் வன்முறையில் எண்மர் கொலை

தேர்தல் அன்றும் அதன் பின்பும் வன்முறைகள் நடைபெறலாம் என்று பொலிசார் எதிர்பார்த்த வண்ணம் உள்ளனர். வேட்பு மனுத்தாக்கல் செய்து இதுவரை எட்டுப் பேர் தேர்தல் வன்முறைகளில் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இதுவரை அறுநூறுக்கும் மேற்பட்ட முறைப்பாடுகளை பொலிசார் பதிவு செய்துள்ளனர். பல கட்சித் தலைவர்கள் வெளிப்படையாகவே மிரட்டலில் ஈடுபடுவதாக பொலிசார் கூறினர். வென்னப்புவவில் அரசியல்வாதி ஒருவர் கொல்லப்பட்டது தொடர்பாக பொலிசார் விசாரித்த போது பிரபல அரசியல்வாதி ஒருவர் பொலிஸ் அதிகாரிகளை மிரட்டியதாக கூறப்பட்டுள்ளது.

தற்போது தேர்தல் சம்பந்தமான சகல முறைப்பாடுகளையும் விசாரிக்கும்படி பொலிஸ் மா அதிபர் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவித்துள்ளார். ஆனால் வென்னப்புவவில் அரசியல்வாதியினதும் அவரது ஆதரவாளர்களினதும் தலையீடு காரணமாக தங்களால் சுதந்திரமாக விசாரிக்க முடியவில்லை என்று பொலிஸ் அதிகாரிகள் தலைமையகத்துக்கு அறிவித்துள்ளனர். நாட்டின் பல பகுதிகளிலும் அரசியல்வாதிகளின் தலையீடு காரணமாக பலரை கைது செய்ய முடியவில்லை என்றும் பொலிசார் கூறியுள்ளனர்.

## தொடர்ந்தும் ஜனாதிபதி ஆட்சிமுறையே!

ஐ.தே.கட்சி வெளியிட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் தொடர்ந்தும் ஜனாதிபதி ஆட்சிமுறையை ஆதரிக்கப் போவதாகக் கூறியுள்ளது. 48 பக்கம் கொண்ட இந்த விஞ்ஞாபனத்தில் ஐ.தே.கட்சி தனது நிலைப்பாடுகள் பற்றி விபரம் தெரிவித்துள்ளது. சமீப காலங்களில் ஐ.தே.கட்சி ஜனாதிபதி ஆட்சி முறையைக் கைவிட்டு பாராளுமன்ற ஆட்சி முறைக்கு திரும்பக் கூடும் என்று பத்திரிகைகள் ஹேஸ்யம் தெரிவித்திருந்தன. ஆனால் தற்போது தொடர்ந்தும் ஜனாதிபதி ஆட்சிமுறையையே பேணப் போவதாக ஐ.தே.கட்சி தெரிவித்திருக்கிறது. அத்துடன் தொடர்ந்தும் திறந்த பொருளாதாரம் பேணப்படும் என்றும் வட கிழக்கு பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணப்படும் என்றும் அந்த விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதற்கு முன்னதாகவும் கட்சி செயலாளர் காமினி விஜேசேகர ஜனாதிபதி முறை கைவிடப்படும் என வெளிவந்த தகவல்கள் பொய்யானவை என்று மறுத்திருந்தார். ஜனாதிபதி முறையினால் பயன்கள் விளைந்ததாகவும் பதினைந்து வருடங்களின் பின்னர் சில மாற்றங்கள் செய்யப்பட வேண்டியிருக்கிறது ஆயினும் ஜனாதிபதியே அதிகாரம் கொண்டவராக விளங்குவார் என்றும் அரசியலமைப்பு அமைச்சர் சொக்ஸி தெரிவித்துள்ளார்.

அத்துடன் படையிலிருந்து இளைப்பாறுவோருக்கு இரண்டு முதல் ஐந்து ஏக்கர் நிலம் வழங்கப்படும் என்றும் உறுதியளிக்கப்பட்டிருக்கிறது. வேலையில்லாதவர்களுக்கு 1200 ரூபா மாதாந்தம் வழங்கப்படும் என்றும் இதற்காக ஆயிரம் கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றும் இதனால் இரண்டு லட்சம் இளைஞர்கள் பயனடைவார்கள் என்றும் ஜனாதிபதியின் ஆலோசகர் விக்கிரம வீரசூரிய தெரிவித்திருக்கிறார்.

முன்பு இரு வாரங்களுக்கு முன்னர் வெளியிட்ட விஞ்ஞாபனத்தின் திருத்தங்களுடன் புதிய விஞ்ஞாபனம் வெளியிடப்பட்டிருக்கிறது.

ம.ப.பார்க்க..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# கிழக்கில் கூட்டணிக்கு ஆதரவு

## இண்டர்பிரஸ் நிருபர் செய்தி

யுத்த பிரதேசத்தில் வாழும் கிழக்கு மாகாண மீனவர்கள் அடுத்த தேர்தலுக்கு பின்னர் நிலைமை வழமைக்கு திரும்பாதா என்ற ஏக்கத்துடன் உள்ளனர். புலிகளை கிழக்கில் அழித்து விட்டோம் என்று இராணுவம் கூறினாலும் இரவுகளிலும் ஆழக்கடல்களிலும் மீன்பிடிப்பதை இராணுவம் தடை செய்திருக்கிறது. தனது அன்றைய உழைப்பான இரு டசின் மீன்களைக் காட்டிக் கொண்டு 'நானும் என் குடும்பமும் இதை விற்று எப்படி வாழலாம் என்று நினைக்கிறீர்கள்' என்று கேட்கிறார் வடிவேலு பொன்னுத்தம்பி என்ற மீனவர். முப்பது வயதான இவர் மட்டுநகர் வாவியில் மட்டும் மீன் பிடிக்க அனுமதிக்கப்பட்டிருப்பது குறித்து ஆத்திரம் கொள்கிறார். 'தேர்தலுடன் இது முடியும் என்று நான் நினைக்கிறேன். நான் போய் கூட்டணிக்கு வாக்களிக்கப் போகிறேன். அவர்கள் தான் பாராளுமன்றத்தில் போய் எங்களுக்காக போராடுவார்கள்' என்கிறார் அவர்.

எழுபத்தைந்து வீதம் தமிழர்களைக் கொண்ட இப்பகுதியில் கூட்டணிக்கே ஆதரவு இருப்பதாக தெரிகிறது. பலர் ஆயுதக்குழுக்களை வெறுக்கின்றனர்.

தேர்தலில் கூட்டணி தனியாகவே நிற்கிறது. தமிழர் ஐக்கிய தேசிய முன்னணியின் சிறிகாந்தா தனது வெறுப்பை நேரடியாகவே கூறுகிறார். 'இந்த சுயநல முடிவினால். .. தமிழர்கள் தங்கள் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை இழக்கும் அபாயம் உள்ளது'.

ஆனால் கூட்டணி தான் சுயநலத்துடன் இயங்குவதாக கூறப்படுவதை மறுக்கிறது. கூட்டணியின் ஜோசப் பரராஜசிங்கம் 'மக்களின் விருப்புக்கேற்பவே தாங்கள் தனித்து போட்டியிடுவதாக' கூறுகிறார். 'ஆயுதங்களை கொண்டு திரிபவர்களுக்கு வாக்களிக்க முடியுமா' என்று கேட்கிறார் இரண்டு வயதுக் குழந்தையின் தாயார் ஒருவர். கூட்டணி நின்று போராடாமல் இந்தியாவுக்கு ஓடிப் போனது என்ற வாதத்தை ஏற்க இவர் மறுக்கிறார்.

நாங்கள் இந்தியா சென்று எமது பிரச்சனையை சர்வதேசமயப்படுத்தினோம், தமிழர் போராட்டத்திற்காக ஆதரவு சேர்த்தோம் என்கிறார் சிவசிதம்பரம்.

கொழும்பில் உள்ள தமிழ் அரசியல் ஆய்வாளர் ஒருவர் கூட்டணியின் முடிவை ஆதரிக்கிறார். 'துப்பாக்கிக் கலாசாரம் முடிவுக்கு வர வேண்டும்' என்கிறார்.

ஆனால் மட்டக்களப்பில் சூழ உள்ள கிராமங்களில் மக்களை ஆயுதம் தாங்கிய தமிழ் குழுக்கள் தங்களுக்கே வாக்களிக்கும்படி மிரட்டுவதாக கூறப்படுகிறது. ஆனால் இதை உறுதி செய்ய முடியவில்லை. காரணம் பலர் பயத்தில் பேச மறுக்கிறார்கள்.

முன்னாள் மாநகரசபை ஊழியர் ஒருவர் கூட்டணிக்கே தனது வாக்கு என்கிறார். தங்களுக்காக ஜோசப் பரராஜசிங்கம் போராடினார் என்கிறார் அவர். கொக்கட்டிச்சோலை படுகொலையின் போது விசாரணை செய்து இராணுவத்தினரை தண்டிக்கச் செய்ததில் இவர் பங்குண்டு.

இதற்குள் தமிழ் குழுக்கள் தேர்தல் ஆணையாளரிடம் தங்களுக்கு அதிகம் பாதுகாப்பு தேவை என்றிருக்கின்றன. ஒரு அரசியல்வாதி தமிழ் குழுக்களே தங்களுக்குள் மற்றக் குழுக்களை பயமுறுத்துகின்றன என்கிறார்.

இந்த செய்திக்குறிப்பு இன்ரர் பிரஸ் நிருபரால் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

# தமிழ் அகதிமுகாம் தீவிபத்துக்குள்ளானது

ஜேர்மனியின் றைன்லாண்ட் பகுதியில் உள்ள பாட் மரியன்பேர்க் என்ற நகரத்தில் இலங்கைத் தமிழ் அகதிகள் வசித்து வந்த கட்டம் ஒன்று தீப்பற்றி எரிந்த போது பயம் காரணமாக பாகிஸ்தானிய அகதி ஒருவர் பாய்ந்து காயங்களுக்கு உள்ளானார். கடந்த செவ்வாய் அதிகாலை இந்தச் சம்பவம் நடைபெற்றது. தீயணைக்கும் படையினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இது குறித்து பொலிசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மின்னொழுக்கே இந்த தீக்கு காரணம் என்று கூறப்படுகிறது. சலவை இயந்திரத்திலிருந்தே தீ வந்ததாக கூறப்படுகிறது. இந்த தீவிபத்தில் ஏற்பட்ட சேதம் சுமார் ஒரு லட்சம் மார்க் இருக்கலாம் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்த முகாமில் இலஙகையர், பங்களாதேஷிகள், அல்பேனியர்கள், ஆப்கானியர்கள் வசித்து வந்தனர்.

### தேர்தல் வன்முறை...

இதற்குள் எதிர்கட்சி ஆதரவாளர்களை பொலிசார் துன்புறுத்துவது பற்றி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுஜன ஐக்கிய முன்னணி கேட்டுள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை புத்த பிக்கு ஒருவரும் இன்னொருவரும் கொல்லப்பட்டது தங்கள் ஆதரவாளர்களே என பொது ஜன ஐக்கிய முன்னணியின் செயலாளர் தர்மசிறி சேனநாயக்க தெரிவித்திருக்கிறார். வேட்பு மனுத் தாக்கல் தினத்தன்று றம்படகல்ல உப்ரத்தின தேரோ கல்லால் எறிந்து கொல்லப்பட்டார். ஆதரவாளரான ஜெயசிங்க கடந்த திங்கள் ஐ.தே.க ஆதரவாளர்களால் கொல்லப்பட்டார்.

# மட்டக்களப்பில் இருவர் பலி

மட்டக்களப்பில் தற்செயலாக கிரனெட் வெடித்ததில் இருவர் கொல்லப்பட்டனர். கடந்த திங்கட்கிழமை ஐ.தே.கட்சி வேட்பாளரின் உறவினரின் வீட்டில் இந்த விபத்து நடைபெற்றது. கிரனெட் ஒன்றின் கிளிப்பை சிறுவன் ஒருவன் தற்செயலாக இழுத்த போது அதை வெளியே வீசி எறிய முயன்ற வேட்பாளரின் பொலிஸ் மெய்பாதுகாவலர் ஒருவரும் அந்த சிறுவனும் ஸ்தலத்திலேயே மரணமாகினர். அந்த வீட்டில் ஏன் கிரனெட் வந்தது என்பது பற்றி தெரியவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## காவலூரில் நுழைய புலிகள் முயற்சி

தேர்தல் நடத்தப்படும் பகுதியான ஊர்காவற்றுறைக்குள் புலிகள் நுழைய முயன்றதாகவும் அந்த முயற்சியை முறியடித்து விட்டதாகவும் இராணுவம் கூறியுள்ளது. திரும்பித் தாக்கியதில் ஒரு புலி உறுப்பினரைக் கொன்றதாகவும் மற்றவர்கள் தப்பியோடியதாகவும் இராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## காஷ்மீரில் கற்பழித்த இந்திய இராணுவத்தினருக்கு தண்டனை

காஷ்மீர் பெண்ணொருத்தியை கற்பழித்த குற்றச்சாட்டில் இந்திய இராணுவத்தினர் இருவருக்கு பன்னிரண்டு வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. காஷ்மீரில் கடந்த யூன் மாதம் ஒருவரைக் கற்பழித்து இன்னொருவரை பலவந்தப்படுத்தியதாக இவர்கள் இருவர் மீதும் துரித விசாரணை பதினேழு நாட்களுக்குள் நடத்தப்பட்டது. இருவரும் பதவி நீக்கம் செய்யப்பட்டதுடன் சிறைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

வழமையில் இந்த குற்றங்கள் பகிரங்கப்படுத்தப்படுவதில்லை எனினும் சமீப காலங்களில் மனித உரிமை அமைப்புகளும் மேற்கு அரசுகளும் இந்தியப் படைகளின் அத்துமீறல்கள் பற்றி கண்டனம் தெரிவிப்பதை அடுத்தே இது பகிரங்கப்படுத்தப்பட்டிருக்கிறது.

கடந்த டிசம்பரில் 150 படைவீரர்கள் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களில் தண்டிக்கப்பட்டதாக இந்தியா தெரிவித்ததுடன் தேசிய மனித உரிமை ஆணைக்குழு ஒன்றும் உருவாக்கப்பட்டது. தண்டிக்கப்பட்ட இராணுவத்தினரில் சிலர் ஒன்பது ஆண்டு சிறைத் தண்டனையும் பெற்றுள்ளார்கள்.

இதற்குள் பத்து வயதுச் சிறுமியைக் கற்பழித்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கல்லால் எறிந்து கொல்லப்பட்டு எரிக்கப்பட்டிருக்கிறார். குழந்தையின் குரல் கேட்டு உதவிக்கு வந்த போது இவர் அகப்பட்ட போது ஆத்திரம் கொண்ட கூட்டம் இவரைக் கல்லால் அடித்து எரித்த போது, தப்ப நதியில் பாய்ந்தார்.

## ஜனாதிபதி இருந்த மேடை சரிந்தது

ஜனாதிபதி உரையாற்றிய மேடையொன்றின் கூரை சரிந்து விழுந்ததை அடுத்து பொலிசார் விசாரணை ஒன்றை மேற்கொண்டுள்ளனர். கடந்த வியாழக்கிழமை கொலன்னாவையில் நடைபெற்ற கூட்டத்தில் ஜனாதிபதி உரையாற்றிய போதே இந்த கூரை சரிந்து விழுந்தது. ஆயினும் ஜனாதிபதி காயங்களுக்கு உள்ளாகவில்லை. இது குறிதது சி.ஐ.டி திணைக்கள அதிகாரிகள் அந்த மேடை அமைப்பை அங்கீகரித்த இயந்திரவியலாளர், அந்த மேடையை அமைத்த கொந்தராத்துக்காரர், எட்டு தொழிலாளர்கள் ஆகியோரை விசாரணை செய்துள்ளனர். எந்திரவியலாளர் தான் பல தவறுகளைக் கண்டு அவற்றை திருத்துமாறு தொழிலாளரிடம் கூறியதாக சொல்லியுள்ளார். கொந்தராத்துக்காரரோ தான் 24 மணி நேரத்திற்குள்ளேயே அந்த மேடையை அமைத்ததாக தெரிவித்திருக்கிறார்.

இசை நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்த போதே மேடை சரிந்தது. சுமார் பத்து அரசியல்வாதிகள் அப்போது மேடையில் இருந்தனர்.

மேடை சரிந்த பின்னர் ஜனாதிபதி தெரணியகலவிற்கு சென்று பிரசாரம் செய்தார்.

## பொலிசார் நடுநிலையுடன் செயற்பட அறிவிப்பு

வருகின்ற தேர்தலில் பொலிசார் எந்த கட்சியையும் ஆதரிக்காது நடுநிலையாக செயற்பட வேண்டும் என்று பொலிஸ் மா அதிபர் கேட்டுள்ளார். பொலிஸ் அதிகாரிகள் பக்கம் சார்ந்து செயற்படுகிறார்கள் என்று அரச தரப்பினரும் எதிர்க்கட்சியினரும் குற்றம் சாட்டிக்கொண்டதை அடுத்தே சுற்றுநிருபம் மூலம் பொலிஸ் மாஅதிபர் இந்த அறிவித்தலை விடுத்திருக்கிறார்.

## பண்பாட்டுக் கழக கூட்டம்

கனடா தமிழ் பண்பாட்டு கழகம் பகிரங்க கூட்டம் ஒன்றை விளக்கம் அளிக்கும் நோக்குடன் தமிழர் கூட்டுறவு இல்ல மண்டபத்தில் 31.7.94 அன்று காலை 9.45க்கு நடத்துகிறது. பல்வேறு குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கும் நோக்குடனேயே இக்கூட்டம் நடத்தப்படுகிறது. இது சம்பந்தமாக 531 1650 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு விபரங்கள் பெறலாம்.

## குழந்தைகளின் பாலை அறியத் தடை

ஆண் குழந்தைகளைப் பெற வேண்டும் என்ற ஆவலில் பிறப்பதற்கு முன்பாக குழந்தைகளின் பாலை அறிந்து பெண்ணுயின் கருச்சிதைவு செய்வது இந்தியாவில் அதிகரிப்பதால் பிறப்பிற்கு முன்பாக பால் அறிந்து கொள்ளல் இந்தியாவில் சட்டமூலம் தடை செய்யப்பட்டிருக்கிறது. லோகசபையில் நிறைவேற்றப்பட்ட இந்த சட்டம் ராஜ்யசபாவில் அங்கீகரிக்கப்பட்டதும் சட்டமாகும். கருவின் பாலை அறிந்து பெற்றோருக்கு சொல்லுவது தற்போது குற்றமாகும். அத்துடன் மின்காந்த அலைகள் மூலம் அதைப் பரிசோதிப்பதும் குற்றமாகும். இது சம்பந்தமான விளம்பரங்களும் தடை செய்யப்பட்டுள்ளன. மீறுவோருக்கு மூன்றாண்டு சிறையும் ஐம்பதாயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்படும். டாக்டர்கள் இந்தச் சட்டத்தை மீறினால் முதல் குற்றத்திற்கு இரண்டு வருடங்கள் பணியாற்றுவது தடுக்கப்படும். இரண்டாம் குற்றத்தில் நிரந்தரமாக மருத்துவ தொழிலிலிருந்து விலக்கப்படுவார்.

தமிழ் நாட்டில் குறிப்பிட்ட ஒரு இனத்தினர் பெண் குழந்தைகள் பிறந்தால் பிறந்தவுடன் கொன்று விடுகின்றனர். கூலித்தொழில் செய்யும் இனம் ஒன்றில் எண்பது வீதமான பெண் குழந்தைகள் நச்சுக்காய் ஊட்டப்பட்டு கொல்லப்படுகின்றனர்.

புதிய சட்டமூலத்தை சமூகநல தாபனங்கள் வரவேற்றுள்ளன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்

சென்றவாரத்தொடர்

# நிழல் நிஜமாகியது

## மூர்த்தி

நியூஜேர்சி தமிழ்நாடு அறக்கட்டளையும் அமெரிக்க கூட்டுத் தமிழ்ச்சங்கமும் ஜூலை 2. 3. 4ந்திகதிகளில் இணைந்து நடாத்திய மூன்றுநாள் மாநாட்டில் ஒருதினம் கமலஹாசன் ஷோ நடைபெறும் என்றும், மறுதினம் இளையராஜா இன்னிசை விருந்தளிப்பார் என்றும் விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. கமல்ஹாசனை எதிர்பார்த்து மண்டபத்தில் ஆவலுடன் இருக்கும் நேரம் பார்த்துத்தான் அந்த 'சற்றும் எதிர்பாராத விடயம்' நடந்தது.

'கமல்ஹாசன் ஷோ நடைபெறாது' என்று மேடைக்கு வந்த ஒருவர் அறிவிக்கிறார். ஊ..ஊ...ஊ..

கமல்ஹாசனுக்கு உடல் நிலையில் கோளாறும்... டொக்டர்கள் அவரைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்களாம்.. . போச்சுடா.. அதென்ன வோப்பா பெரிய நடிகர் நடிகைகளுக்கு உடல்நிலை படுசென்ஸிடிவாக இருக்கும்போலும்... நாமளும்தான் இருக்கிறோமே...!

படுஊ..ஊ.. எரிச்சலாக இருந்தது. வேலை மெனக்கெட்டு கமல்ஷோவை பார்க்க கனடாவி லிருந்து விழுந்தடித்து வந்தோமே ஐயா... கமல்ஷோ? கமல் நோ! வருத்தமாகியது.

இதே கமலஹாசனை மனதார திட்டி வெறுத்த ஒரு காலமுமிருந்தது. பத்தாவது படித்த காலத்தில் எம்முடன் ஸ்கூல் பஸ்ஸில் வரும் எமது 'கனவுக் கன்னிகள்' எல்லோருமே தமது நோட் புக்கின் கவரில் கமல் படத்தை வண்ண வண்ணமாக ஒட்டிக்கொண்டு தினசரி வருவதைக்கண்டு வெறுத்துப்போய் 'இவனிடம் என்னடீ பெர்ரிய அரங்கேற்றத்தைக் கண்டீர்கள்?' என சொல்லத்தான் நினைத்துக் கொண்டே மனதுள் புகைந்தது ஒரு காலம்! அப்போதெல்லாம் "பாடுறது ஜனகனமண. .... ஜாலியோ ஜிம்கானா இல்லை..." எனச் சீறிப்பாய்ந்து அடிக்கும் அபூர்வமான புரட்சிக்கார இளைஞனா, கெடுபட்டதால் விபச்சாரியானவளை கல்யாணம் செய்துகொண்டு வந்து நான் அவனில்லை என்ற ஏமாற்றுக்காரனை மிரட்டும் இளைஞனா கருத்தில் தெரியவில்லை. கடைசியாக அலாவுதீனை பார்த்து விட்டு 'இவனெல்லாம் ஒரு நடிகனா?" என திட்டியபின் ஊரைவிட்டே ஓடியாயிற்று. பிறகு ரஷ்யாவில் மாஸ்கோ தியேட்டர்களில் 'டப்' பண்ணப்பட்ட கமலஹாசன் திரையில் ரஷ்ய மொழி பேசியதைக்கண்டு "அட சோசலிசத் திரையில் முதல் முறையா நம்ம தமிழன்டா..." என தமிழ் பக்தியினால் புல்லரித்துப் போய்.... வறுமையின் நிறம் சிவப்பையும், ஏக் தூ ஜே கிலியேயையும் பார்த்துக் கிறங்கிய ரஷ்யப் பெண்கள் 'கம்மல்'ஹாசன் என்றழைத்த 'நகைச்சுவையை ரசித்தது வேறோர் காலம். பிறகு பாலசந்தரின் அக்னிசாட்சி போல நேரம் தப்பி வந்த இவரது ராஜபார்வையால் நெகிழ்ந்தும், மூன்றாம் பிறை கண்டு வயிறெரிந்தும், பத்திரிகைக்காரன் ஒருவனின் சலங்கை ஒலியால் கலங்கியும், மன்மதலீலை சேர்ந்த மீண்டும் கோகிலாவை பார்த்துச் சிரித்தும்கூட பெரும் சகலகலாவல்லவ மசாலா நெடி கமல்ஹாசனை நாயகனாகக் காணும்வரை அண்டவே விடவில்லை. பிறகு பேசும் படங்களாகப் பார்த்த சத்யாவின் ஆக்ரோஷத்தையும், மேயரின் அட்டகாசத்தையும், காமேஸ்வரனின் அசட்டுத்தனத்தையும், குணாவின் கிறுக்குத்தனத்தையும் மறக்க முடியாமல் போய்விட்டதால், உதயமூர்த்திப் பிள்ளைவாளும், டெக்னிகாலிடியுடன் சேர்ந்த அப்புவும், சக்திவேலும் இப்போ கிருஷ்ணசாமியும் வந்துவிட்டார்கள்.

கமல்ஹாசனை சிவாஜியுடன் ஒப்பிடுவார்கள். அதேபோலவே தியாகராஜ பாகதவருடனும்கூட ஒப்பிடலாம். மாபெரும் நட்சத்திரமாக இருந்த அதே நேரத்தில் சொந்தக் குரலில் பாடிக்கொண்டும் இருந்தவர் தியாகராஜ பாகதவர்! அன்றைய பாகதவருக்குப் பிறகு அதுபோன்ற பெருமை கமல் ஒருவருக்குத்தான் இன்று இருக்கிறது. நடுங்கிக்கொண்டே 'ஞாயிறு ஒளிமழையில்..' என பாட ஆரம்பித்தவர் இப்போ 'ராஜா கையெ வெச்சா...' என எஸ்பிபிக்கு இணையாகவும், 'சுந்தரி நீயும்' என ஜேசுதாஸ் போலவும், 'ங..ங..சொன்னபடி கேளு...' என இளையராஜா போலவும் பாடி அசத்திக் கொண்டிருக்கிறார். நடிகர் கமலஹாசனை விட பாடகர் கமல்ஹாசனை விட எழுத்தாளர் கமல்ஹாசன் கொடுத்த இம்பாக்ட்தான் புதுமை! பல்வேறு பத்திரிகைகளிலும் இவர் எழுதிய கட்டுரைகளை படிக்கும்போது, பல பெரிய எழுத்தாளர்களுக்கு இணையான இவரது எழுத்தில் எவரது சாயலும் இல்லாத தன்மையும் தென்படுவதை பலர் அவதானித்திருப்பீர்கள். தன் தந்தை இறந்தபோது அழுவதற்காக மரணவீட்டிற்கு சென்ற இவரை 'பாருடா கமலு...' என்று மரண வீட்டில் வைத்து எரிச்சல்படுத்தியவர்களையும் புரிந்து அதுபற்றி இவர் எழுதிய, ஒரு கூத்தாடிக்கே வரக்கூடிய மேரா நாம் ஜோக்கர் சோகத்தை, படித்தவர் மனதில் வெகுநேரம் அலைபோட வைத்த எழுத்தாளர்! (எழுத்தாளர் சுஜாதாவே கமல்ப ற்றி கவிதை எழுதியிருக்கிறார். ) விரைவில் வருது.. வருது.. விலகு.. . விலகு.. மருதநாயகம் வெளியே வருது என சினிமா டைரக்டராகவும் கமல் வரவிருக்கிறார். ஒரு காலத்தில் பல திறமைசாலிகளை சேர்த்து வைத்துக் கொண்டிருந்தால் ஸ்ரீதர், பாரதிராஜா புகழுடனிருந்தார்கள். பாலசந்தர் திறமைசாலிகளை இணைத்து உபயோகித்துக் கொள்வதால் இன்னும் புகழுடனிருக்கிறார். அதேபோல திரையுலக அனுபவசாலி கமலும் பல திறமைசாலிகளை தன்னோடு இணைத்து, அடங்கியும், ஆட்டுவித்தும் போகின்ற தன்மையை வெளிப்படையாகவே கொண்டிருக்கின்ற காரணத்தால் டைரக்டர் கமலஹாசன் நாளை பெரும் புகழடைந்தால் அதுவும் ஆச்சரியமில்லை. தமிழில் புகழ்பெற்ற டைரக்டர்களான பாலு மகேந்திரா தனது சொந்த வாழ்க்கையே கதையாக்கிப் படமாக்கிக் கொண்டிருக்கிறார். பாலசந்தரோ யதார்த்தத்திற்கு ஒத்துவராத கதைகளையே தெரிந்து அதற்கு ஊறுகாயாக வக்கிரங்களையும் சேர்த்து விடுகிறார். பராதிராஜா பாவம் கடுமையாகக் குழம்பிப்போய்விட்டார். தெளிவாக அதே சமயம் யதார்த்தமான ஜனரஞ்சக கதை சொல்லும் வல்லமை இப்போது கமல்ஹாசனின் டீமிற்கு மட்டுமே இருப்பதாக தென்படுகிறது. தமிழ் சினிமாவில் மிடில் சினிமாவை வழிநடத்தக்கூடிய பொட்டன்ஷியல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net 

கமலிடம் மட்டும்தான் இப்போது தென்படுகிறது என்றால் அது வெறும் புகழ்ச்சியில்லை.

இப்படியாக சிலாகித்து ரசிக்கக்கூடிய கமலஹாச நிஜம் நிழலாகி விட்டதே என்று வருந்தினாலும் மறுநாள் நிழல் நிஜமாகிக் கொண்டது! கமல்ஹாசன் மேடைக்கு வந்தார்.

பல சினிமா நடிக நடிகையரை நேரில் பார்க்கும்போது திரையில் தென்படும் கவர்ச்சி தென்படுவதில்லை. அனேகமானோர் சாதாரண பஸ் ஸ்டாண்ட் மனிதர்கள் போலவே காட்சியளிப்பர். ஆனால் கமல்ஹாசன் நேரிலும் ஹீரோ போலவே ஜம் என்று தோற்றத்தில், இளம் தாடியுடன் ஒரு ஈரானியர் போலத் தோற்றமளித்தார். அமரிக்காவின் கௌரவ பிரஜைக்கான சான்று அவருக்கு வழங்கப்பட்டதைத் தொடர்ந்து மேடையில் அதே மந்தஹாசக் குரலில் பேசினார். பேசி முடிந்ததும் வேறோர் இன்டேர்னல் மீட்டிங்கிற்காக கிடு கிடுவென அழைத்துக் கொண்டு போய்விட்டனர்.

நிகழ்ச்சிகள் தொடர்ந்தன. நியூயோர்க்கில் வசிக்கும் ஈழத்தமிழரான சிவபாலனின் தலைமையில் பேசு மனமே பேசு என கவியரங்கு நடைபெற்றது. பலவகை நடன நிகழ்ச்சிகள் அமெரிக்காவில் பல்வேறு மாநிலங்களிலிருந்தும் வருகை தந்த குழுக்களால் நடத்தப்பட்டன. சுமார் மூவாயிரம் பேர்வரை திருவிழாப்போல மண்டபத்தை நிரப்பிக் கொண்டிருந்தனர்.

இந்த அளவுக்கு ஒரு மாபெரும் மாநாட்டை ஒழுங்கு செய்வது வட அமெரிக்காவைப் பொறுத்தவரை சாதாரண விடயமல்ல. முதல் தலைமுறையின் கலை இலக்கிய பண்பாட்டுப் பசிக்கு நல்விருந்தாயும், அடுத்த தலைமுறைக்கு தமிழ்க் கலாச்சாரப் பிணைப்பை ஏற்படுத்தத் தக்கவிதமாயும், தமிழ்புலமை கொண்டவரை கேட்க ஏதுவாயும், தமிழ் கலைஞர்களை காணவுமே இம்மாநாடு காட்டப்பட்டதாக சொல்லப்பட்டது. இவைக்கான அர்ப்பணிப்பு கூட்டுத்தமிழ்சங்கத்தின் நிர்வாகக் குழுவினிடம் வெளிப்படையாகவே தெரிந்தது. இக்குழுவினைப் பார்த்து ஏக்கப் பெருமூச்சுத்தான் வந்தது. அடக்கமாக அதே சமயம் தேனீ போன்ற சுறுசுறுப்புடன், சகல விடயங்களையும், பிரச்சனைகளையும், நாகரீகமாகவும், பண்பாட்டுடனும் அணுகி மாநாட்டை அவர்கள் சிறப்பாக நடாத்திக் கொண்டிருந்தமை பல இடங்களில் அவதானிக்க கூடியதாகயிருந்தது. இந்த அளவுக்கான ஒரு பெருவிழாவை ஈழத் தமிழர்கள் நடத்தியிருந்தால் "நீ அந்த ஊர், நான் இந்த ஊர்.." "நீ எலி நான் புலி.." "உவன் என்ர அக்காவைப் பாத்து சிரிச்சுப்போட்டான்.." என்றெல்லாம் கொழுவுப்பட்டு கத்தி, குத்து, துப்பாக்கி என இரத்த தானத்தில் வந்து முடிந்திருக்கும்.

மாநாட்டின் இன்னோர் பகுதியாக இளைஞர் மாநாடு ஒன்றும் நடந்து கொண்டிருந்தது. அமரிக்க தமிழக இளைஞர்கள், யுவதிகள் சிறுர்களுக்காக முழுக்க முழுக்க ஆங்கிலத்தில் பல செமினார்கள் நடாத்தப் பட்டுக்கொண்டிருந்தன. இந்திய பொருளாதாரம், அமெரிக்கா வாழ் இந்தியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள், தமிழ்ப்பண்பாடு என்பன போன்ற பல விஷயங்கள் அங்கு இளைஞர்களால் ஆராயப் 'பட்டன. இந்தியத் தூதரக நிபுணர்களும், பல்கலைக்கழக கல்விமான்களும் இளைஞர்களுக்காக உரை நிகழ்த்தினர். அமரிக்கத் தமிழகத் தமிழர்களின் இரண்டாவது, மூன்றாவது தலைமுறையானது தாம் தமிழர்கள் என்பதில் பெருமை கொள்வதுடன், இந்தியர்கள் என்ற அடிப்படையில் சிந்திக்கவே முனைகிறார்கள் என்பதை அங்கு கவனிக்கக்கூடியதாயிருந்தது.

இந்த இளைஞர் மாநாடு படு சுவாராஸ்யமாக இருந்தது. அமெரிக்காவின் மாஸ் மீடியா இந்தியர்களுக்கு தகுந்த மரியாதை தருவதில்லை என்ற குறையை பலர் சுட்டிக்காட்டி நிறவெறியை அதனுடன் சம்பந்தப்படுத்தியதையும் அவதானிக்கக் கூடியதாயிருந்தது. அங்கேயே யூனிவர்சிடி ஒஃப் கலிபோர்னியாவில் தமிழ்ப் பேராசிரியரான வெள்ளைக்கார ஜோர்ஜ் ஹார்ட் தமிழின் சிறப்புபற்றி அற்புதமாக உரையாற்றினார். புரபெஸர் ஜோர்ஜ் ஹார்ட் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைக்கு ஒரு பல்கலைக்கழகப 'பீடம் அமைக்க பெரும்பாடு பட்டுவருகிறார். சரளமாக தமிழ் பேசுகிறார். எனக்குத் தெரிந்தவரை இவர்தான் தமிழ் அச்சமைப்பு செய்யத்தக்க விதமாக 'போஸ்ட்க்ரிப்ட்' லேஸர் தமிழ் எழுத்துக்களுக்கான கம்பியூட்டர் புரோக்கிராமை முதல் முதலாக உருவாக்கியவர். (கவனிக்கவும்.. 'போஸ்ட்க்ரிப்ட்!' பிட் மாப் எழுத்துக்கள் அல்ல)

இளைஞர்களின் முன்னே கமல்ஹாசன் உரையாற்றவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சிறு வாண்டுகளும், பெரும் மோஹினி களும் "வாவ்...! கமல்ஹாஸன்....!!" என வாவிக் கொண்டிருந்தனர். (அந்த மண்டபத்துக்கு அனுமதிக்கப்பட்ட இரண்டு 'முதியவர்கள்' நானும் ஹிண்டு பத்திரிகை நிருபரும் மட்டும்தான்.) கமலஹாசன் வரத் தாமதமாகியதால் ஜோர்ஜ் ஹார்ட்டை துணுக்குகள் சொல்லுமாறு கேட்டார்கள். அவரும் தனது தமிழ்நாட்டு அனுபவங்களை மலரும் நினைவுகளாக்கி சிரிக்க வைத்துக் கொண்டிருந்தார். திடீரென ஐந்து வயதிருக்கும் ஒரு வாண்டு எழுந்து நின்று கேள்வி ஒன்றை வீசியது: "நீங்கள் ரசிக்கும் நடிகர் யார்?" ஜோர்ஜ் ஹார்ட் பளிச்சென்று பதில் சொன்னார்: "ரஜனி காந்த்..."

திடீரென இளைஞர் பட்டாளம் (குறிப்பாக இளைஞிகள்) வீரிட்டுக் கத்தி அமெரிக்கபாணியில் மகிழ்ச்சியை தெரிவிக்க 'கலைஞன்' திருமதி சரிகாவுடன் உள்ளே நுழைகிறார். மேடைக்கு வந்து தான் ஒரு புத்திசாலித்தனமான நடிகர் மட்டுமல்ல பேச்சாளரும்கூட என்பதை நிருபிப்பதுபோல தமிழிலும் ஆங்கிலத்திலுமாக பேசுகிறார். "மற்ற மொழிகளைவிட தமிழ் சிறந்தது என்று நான் சொல்லமாட்டேன் ஏனென்றால் எனக்குத் நன்கு தெரிந்த மொழி தமிழ் ஒன்றுதான்..." என்று ஆரம்பித்து — "ஒரு மடையன் என்று சொல்லக்கூடிய நிலைமையிலே நான் சிறுவயதிலே இருந்தேன். நல்லவேளை நல்ல பெற்றோர்கள் எனக்கிருந்தபடியால் பிழைச்சேன்.. இங்குள்ள நீங்க ரொம்ப நல்ல நிலைமையில இருக்கீங்க.. உங்களைப் பார்த்து சிறு பொறாமைகூட என் மனசில இருக்கு. தயவு செய்து இந்தியாவை மறந்திடாதீங்க. உலகப்படத்தில இந்தியா இருக்கு, இருக்கும்!! உங்ககிட்ட இப்படி நாம பேசுறதுகூட ஒரு அட்வான்ஸ் புக்கிங் மாதிரி.. இன்று விதைத்தாத்தான் இந்தச் சிந்தனை நாளை செழிப்பாக இருக்கும். நாளை என்பது நீங்கள்.. நேற்று என்பதுதான் நாங்கள்..." என்றெல்லாம் மனதைத் தொடும் நம்பிக்கைப்பேச்சு பேசிவிட்டு முத்தங்களை மட்டும் வாங்காத குறையாக (சரிகா இல்லாதிருந்தால் அதுவும் கிடைத்திருக்கும்) ஆரவாரங்களின் நடுவே வெளியேறுகிறார் கமல்.

கமலோடு ஹோட்டல் லொபியிலும், லிப்டினுள்ளும், கொரிடோரில் நடந்துபோகும் போதும் பேச சந்தர்ப்பம் கிடைத்திருந்தாலும் என் மனதிலிருந்த பல கேள்விகளைக் இன்னும் கேட்கவேண்டும் என்று விடாக்கண்டனாக விரட்டிக்கொண்டுபோய்—

வாய்ப்பு கிடைத்தது. கேட்டேன்.

(மிகுதி அடுத்த வாரம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# வியாழனும் அதில் விழுந்த வால் வெள்ளியும் கண்டறிந்தோரும்

**அருண்**

தாயகத்தின் ஐந்தாம் ஆண்டு நிறைவு மலர் வெளிவந்த நேரத்தில் உலகத்தில் பலபாகங்களிலும் விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் தொலைநோக்கிகளுடன் சுறுசுறுப்பாக இருந்தார்கள்.

"என்னடா இது விண்வெளி பற்றி தாயகத்தில் ஏதும் விபரீதமான செய்தி இருந்ததா? என்று கூட பலர் மண்டையைக் குடையலாம். ஏனெனில் தாமுண்டு தம் வேலையுண்டு என எப்போதும் போலவே இருந்து விட்ட எம்மவர் பலருக்கு வியாழக் கிரகத்தில் ஒரு வால்வெள்ளி அதாவது "தூமகேது" விழுந்தது எந்தச் சலனத்தையும் ஏற்படுத்தவில்லை. கோவில் காரர்கள் கூட அசிரத்தையாய் இருந்து விட்டார்கள் அல்லது வியாழனுக்கு இன்ன இன்ன நட்சத்திரத்தில் பிறந்தவர் சாந்தி செய்ய வேண்டுமென்று துண்டுப் பிரசுரம் விட்டு காசு பண்ணியிருப்பார்களே...

சர்வதேச ரீதியில் நடந்த உதைபந்தாட்டத்தின் அரையிறுதி ஆட்டம் ஏற்படுத்திய பரபரப்புக் கூட அதே நேரத்தில் வியாழனில் வால்வெள்ளி விழுந்ததில் இருக்கவில்லை. ஆனாலும் விண்வெளி ஆராய்ச்சி நிபுணர்கள் மட்டும் கண்ணுக்குள் எண்ணெய் விட்டுக் காத்திருந்தனர்.

நாமறிந்த சூரிய மண்டலத்திலேயே கோடானு கோடி வால் நட்சத்திரங்கள் தூம கேதுகள் தத்தம் சுய ஒழுக்குகளில் அசைந்து கொண்டிருப்பதுடன் ஒவ்வொரு கிரகத்தை அண்டியும் சூரிய மண்டலத்தை ஊடறுத்தும் வலம்வந்து கொண்டிருக்கின்றன. சூரியனின் பிரகாசத்தில் இவற்றில் ஏதாவது அகப்படும் நேரத்தில் இவற்றைக் கண்டு பிடிக்கவென தவமிருக்கும் கண்களுக்கும் அகப்பட்டால் தான் அவை கண்டுபிடிப்பாக உறுதிப் படுத்தப்பட்டு பெயரிடப்படுகின்றன.

இது தொடர்பான தரவுகள் பதிவு செய்யப்படும் பழக்கம் உள்ள கடந்த இரு நூற்றுண்டுகளில் 900 தூமகேதுகள் கண்டறியப்பட்டுள்ளன. இக்கண்டுபிடிப்பில் இது தொடர்பாக கற்றறிந்த வல்லுனர்கள் மட்டுமல்லாது சாதாரண ஆர்வமுள்ள பலரும் ஈடுபடுகின்றனர். ஏறத்தாழ 30% மான கண்டுபிடிப்புகள் தொழில் வல்லுனர்கள் அல்லாத சாதாரண ஆர்வமுள்ளவர்களால் கண்டு பிடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

கடந்த 16-20 இல் வியாழனைத் தாக்கிய தூமகேது 1993 மார்ச் 24 இல் கண்டுபிடிக்கப்பட்டது (மார்ச் 23 இல் படம் பதிவானது- 25 இல் படம் நுணுக்கமாக தூலமாக்கப்பட்டு அறிவிக்கப்பட்டது)

தூம கேதுவிற்கு Periodic comet shoemaker Levy 9 எனப் பெயரிடப் பட்டது. கண்டுபிடித்த மூவரும் தம் பெயர்களை இதற்கு இட்டுள்ளனர். கணவனும் மனைவியுமான அமெரிக்கர்கள் எயுகன் சூமேக்கர் அவர் மனைவி கரோலின் சூமேக்கர் இவர்களுடன் மொன்றியலைச் சேர்ந்த கனேடியன் டேவிட் லெவி ஆகியோர் இணைந்தே இக் கண்டுபிடிப்பை மேற் கொண்டனர்.

இவர்களில் லெவி ஆங்கில இலக்கியத்தில் சிறப்புப்பட்டம் பெற்றவர். சூமேக்கர் நில ஆய்வாளர் ஆனால் இவர்கள் தூம கேது தொடர்பாக அதீத ஈடுபாடும் ஆய்வுங் கொண்டவர்கள்.

கனேடியரான லெவி தனது பன்னிரெண்டாம் வயதில் துவிச்சக்கர வண்டி விபத்தில் கை முறிந்திருந்த வேளையில் கிரகங்கள் பற்றிய புத்தகத்தை வாசிக்க நேர்ந்ததில் ஏற்பட்ட தூண்டுதலால் இக் கண்டுபிடிப்பில் ஆர்வத்தை செலுத்தியிருந்தார்.

கணக்கிலும் பௌதீகத்திலும் இவர் திறமையைக் காட்டாததால் விண்வெளித் துறையில் இவரால் மேற்படிப்பு மேற்கொள்ள முடியாமல் போய்விட்டது.

1979 இன் பிற்பகுதியில் இருந்து தன் ஆய்வின் வசதி கருதி தஷ்கன் (அரிஷோனா) இற்கு இடம் பெயர்ந்திருந்த டேவிட் லெவி 1984 இல் ஒரு தூமகேதுவைக் கண்டுபிடித்தார்.

இதற்கு இவரது அயராத ஆர்வமும் பெற்றோர் கொடுத்த உற்சாகமும் உறுதுணையாக இருந்திருக்கிறது. இவ் இடத்தில் வருவதாயின் டொக்டராகவோ, எஞ்சினியராகவோ தான் வரவேண்டும் என மந்திரமோதும் எமது பெற்றோரை நினைக்கத் தோன்றுகிறது.

1988 மார்ச் மாதத்தில் இவரது ஐந்தாம் தூமகேதுக் கண்டுபிடிப்பின் போதே சந்தர்ப்பவசமாய் அரிசோனா வாழ் சூமேக்கர் தம்பதி இவருடன் கூட்டாகினர். அது எவ்வாறெனில் லெவியின் ஐந்தாம் கண்டுபிடிப்பான அதே வால்வெள்ளியையே சூமேக்கர் தம்பதியரும் ஒரே சமயத்தில் கண்டு பிடித்தனர். இதன்போது நிகழ்ந்த தொடர்புப் பரிமாற்றமே இவர்களை இணைத்திருந்தது.

தன் வீட்டுக்கோடியில் இருந்து தன் 400 மி.மீ. தொலைநோக்கியால் வான்வெளியைத் துலாவிக் கொண்டிருந்த கனேடியர் டேவிட் லெவி சூமேக்கர் தம்பதியரது "பலோமர் தொலை நோக்குக் கூடத்தில்" தன் ஆராய்வைத் தொடர்ந்தார்.

இவர்கள் கூட்டாக ஏற்கனவே பன்னிரெண்டு தூமகேதுக்களைக் கண்டு பிடித்திருந்தனர். பதின மூன்றாவதாகக் கண்டுபிடித்திருந்த சூமேக்கர் லெவி 9 வியாழனில் அதுவும் கண்டுபிடித்த மறுவருடமே விழப்போவதாக வானியல் விஞ்ஞானிகள் அறிவித்ததால் தான் இம் மூவரும் பரபரப்பாகப் பேசப் பட்டார்கள். அல்லாவிடில் பன்னிரெண்டுடன் பதின்மூன்றாய் பிறரும் கண்டுபிடித்தவை பதிவு எண்ணிக்கையாகவே மட்டும் இருப்பது போல் இதுவும் இருந்திருக்கும்.

தென் கலிபோனியா... 1993 மார்ச் 23 இரவு மழை மூட்டமாய் கார் முகில் மூடி இருந்த போதும் "பலோமர் மலை தொலைநோக்கு கூடத்தில் முகில் சற்று விலகாதா" என சூமேக்கர் தம்பதியரும் டேவிட் லெவியும் காத்துக் காத்திருந்தனர். கருமேகம் சற்றுச் கிழிந்து சிறு இடை வெளி தந்த கணத்தில் வியாழனை உள்ளடக்கிய வான் மண்டலத்தின் சிறு பகுதியை புகைப்படமாக்கும் தொலைநோக்கி மூலம் படம் பிடித்தனர்.

10ம் பக்கம் பார்க்க..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்

## சுழட்டும் உலகம்



# ஜெயந்தீஸனின் கோடை விடுமுறை நினைவுகள்

ஜூன் மாதம் முழுவதும் எனக்கு விடுமுறை. கற்பனைச் சிறகு முளைத்தது. உலகப் பந்தில் எனக்கு விருப்பமான தேசங்கள் அனைத்தையும் பறந்து பார்த்து விடலாமே என்ற ஆசை வந்தது. விடுமுறைக்காலப் பணத்தையும், வீட்டுக்கு அனுப்ப வேண்டிய பணம், வருமானவரி இலாகாவுக்குச்சுற்றிப் (சுத்துமாத்துச் செய்து) பிடிபட்டு மாதாமாதம் கட்டாயம் கட்டவேண்டிய பணம், சின்னச் சின்னச் கடன்கள் அனைத்தையும்ஓர் ஒப்பியல் ஆய்வுக்கு எடுத்தபின் பார்த்தால், சிறகைக் காணவில்லை. நான் அதிர்ஷ்டசாலி, எனது பிரெஞ்சுக் குப்பின் (சிநேகிதி) கூட, என்னை அழைக்காமல், மியூசிக் குரூப் ஒன்றுடன் அல்ப்ஸ் பிரனேக்குப் போய்விட்டாள். அப்பாடா! விடுமுறைப் பணம் தப்பியது என நினைத்துக் கொண்டேன். இத்தனைக்கும் அவள் ஒன்றும் முறிக்கும் வர்க்கத்தைச் சேர்ந்தவள் அல்லள், நான் நானுக முறியும் வர்க்கத்தைச் சேர்ந்தவன்.

★ ★ ★

பிரெஞ்சுப் பெண்கள் உண்மையிலேயே அழகான பெண்கள் என நான் நம்புவது கோடைகாலத்தில் மட்டும்தான். அவர்கள் மிகவும் சுதந்திரமாக வீதிகளில் திரிவர். குளிரின் தண்டனையைப் பழிவாங்குவது போல, குறைந்த பட்ச ஆடைகளையே அணிவர். ஆண்களின் பார்வையிலே இப்பெண்கள் செக்ஸியாகப் படுவர். பெண்களின் பார்வையில் எப்படிப்படுவர் என்பது எனக்குத் தெரியாது. இந்தப் பெண்களின் கோலங்கள் பல ஆண்களது தூக்கத்தைக் கெடுத்து விடுவதென்பதை பெண்ணிலைவாதிகள் அக்செப்ற் பண்ணுவரா என்பதும் எனக்குத் தெரியாது. ஈர்ப்பு விதியைக் கண்டு பிடிக்க நியூட்டனுக்கு அப்பிள் உதவி செய்தது. ஏன் பெண்கள் உதவி செய்யாது போயினர் என நான் அடிக்கடி என்னிடம் கேட்டுக் கொள்வதுண்டு.

★ ★ ★

இந்தக் கோடை விடுமுறையின் போதுதான், எனது ஹொஸ்டலுக்கு அருகில், ஓர் மாடி வீட்டில் வசித்து, திடுதிப்பெனக் காணுமல் போன எதியோப்பியப் பெண்ணைக் கண்டேன். மாடல் பெண்போல நல்ல உயர்த்தி. வழமை போல றஸ்தா தொப்பி போட்டிருந்தாள். தான் புதுப்புது டிசைனில் உடைகள் கண்டு பிடிப்பதாகவும், தனது தொழிலகத்திற்கு நேரமுள்ள போது வரலாம் என முகவரியும் தந்தாள். போகாது விட்டால் எங்கே குறை நினைப்பாளோ என நினைத்து ஒரு நாள் போனேன். பாய்கள் விரிக்கப்பட்ட தரையில் அமர்ந்து, துணிகளை வெட்டிக் கொண்டிருந்தாள். ரேப் றெக்கோடரில் பொப் மார்லே(அன்றும் பொப் மார்லே, இன்றும் பொப் மார்லே, என்றும் பொப் மார்லே எனச் சிலர் வாழுவது எனக்கு விளங்கவேயில்லை. இசை வித்தகர் ஆனந்த பிரசாத்தைக் கேட்டால் ஒருவேளை விளங்கலாம்) பாட, ஆடி ஆடித் துணியை வெட்டினுள்.. இந்த வேளையில் ஒரு எதியோப்பிய ஆண்பால் வந்து, றஸ்தபாராய் என்றபடி என்னை இடிக்க வந்தது. சிநேகிதி சிரித்தபடி, "இது எதியோப்பிய பாணியிலான வணக்கம்சொல்லும்முறை" என்ருள். அதாவது மடித்த கைகளால் ஒரு இடி இடித்துக் கொள்வது, தமிழர்கள் ஒரு போதுமே இந்தப் பாணியைக் கைப்பிடிக்கமாட்டார்கள். ஏனெனில், மற்றவர் தனது மோதிரங்களில் ஒன்றை நைஸாகப் பிடுங்கிவிடுவார் என்ற பயத்தால் தான். எனது நண்பர் ஒருவர் தான் வேலை செய்யும் இடத்தில், யாருக்குமே கை கொடுப்பதில்லை.. தனது மோதிரத்தைப் பிடுங்கி விடுவார்கள் என்று பயம். இன்னொருவர் தனது மோதிரம் களவு செய்யப்படக்கூடாது என்பதற்காக கழட்ட முடியாத அளவிலான மோதிரம் ஒன்றைச் செய்து போட்டுக் கொண்டார். இப்போது அவருக்கு ஒன்பது விரல்கள். ஆனுல் மீதி விரல்களில் இன்னமும் மோதிரம்...

★ ★ ★


கோடை விடுமுறையின் போது, பாரிஸின் புகழ்பெற்ற மொன்பார்னஸ் கோபுரத்தின் முன்னே சில வேளைகளில் வெய்யிலுக்கு ஒதுங்கி நின்றேன். பாரிஸின் சுழட்டல் மன்னர்கள் சுழண்டு திரியும் மையங்களிலே இதுவும் ஒன்று. கோபுரத்தின் முன்னே உள்ள படிகளில் தனியாக ஒரு பெண் இருந்தால் போதும், அறுவான்கள் விடவே மாட்டான்கள். பெண் புத்தகம் படித்துக் கொண்டிருப்பாள், காற்று வாங்குவாள், வோக்மனில் பாட்டுக் கேட்பாள், காதலனுக்காகக் காத்துக் கொண்டிருப்பாள்.. சுழட்டல் மன்னர்களுக்கு இவைகள் தெரிந்திருப்பினும், இவைகளையெல்லாம் அவர்கள் கவனத்துக்கு எடுப்பதேயில்லை.. இந்த சுழட்டல் மன்னர்களிடம் "இல்லாதது" ரெண்டே ரெண்டு சாமான்கள்தான். ஒன்று லைட்டர். மற்றது கைக்கடிகாரம். பெண்களிடம் இவர்கள் FEUக் கேட்பர். FEU என்ருல் நெருப்பு என அர்த்தம்....... "முறைப்படி" தமிழில் உச்சரித்தால் "பூ" எனக் கேட்கும்.. சரியான உச்சரிப்பு (F) பூ. பெட்டை நெருப்புக் கொடுத்தால், இவர் நன்றி சொல்லும் பாணியில் சிகரெட்டை நீட்டுவார்.. பெட்டை அக்செப்ற் பண்ணி விட்டால்.. அருகே இருந்து விடுவார்.. பிறகு தூண்டில் தூண்டிலாகப் போட்டு.... மடக்கி... வளைத்து மர்மமாக மறைந்து... மிச்சம் எதுவென்பது விளங்குகின்றது தானே....

அடுத்த ரகம், கைக்கடிகாரம் இருந்தால் கூட, நேரம் கேட்கும். ஒருவர் ஒரு பெண்ணிடம் நேரம் கேட்டார், அதற்கு அவள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# GOOD BYE BALDNESS



## முடி உதிர்பவர்களுக்கு ஒரு நற்செய்தி

**ஒரு சிறு குமிழ் உங்கள் கேசத்தை வளரச் செய்கிறது**


**பரீட்சித்துப் பாருங்கள்**

Try First

**பலர் இச்சிகிச்சை மூலம் பயன் அடைந்துள்ளனர்.**

239 Carlton St
Toronto, Ont
Tel:922-0478

## சிறந்ததையே தெரிவு செய்யுங்கள்!
## Dr.ROBERT VITAMOL, BETTER THAN VIVA HORLICKS




VITAMOL சத்துள்ளதாகவும் மிகுந்த சுவையுள்ளதாகவும் இருப்பதால் விவா ஹோர்லிக்ஸை விட விட்டாமோலே பலர் விரும்புகின்றனர். விட்டாமோல் டாக்டர்.ரொபேட்டினால் தயாரிக்கப் பட்ட சத்துணவுப் பானமாகும். விட்டமின்கள், இரும்புச் சத்து, கல்சியம், தேன் கொண்ட ஒரே சத்துணவுப் பானம் இது. உடலின் சகல பகுதிகளுக்கும் தேவையான உணவு இது. உதாரணமாக கல்சியம் எலும்புக்கு அவசியமானது. விட்டமின்களும் இரும்புச் சத்தும் இரத்தக் குறைபாட்டைத் தடுக்க அவசியமானது. எனவே சிறந்ததைக் கொண்டு உங்கள் உடலுக்கு உணவளியுங்கள். ஒவ்வொரு போத்தல் விட்டாமோலிலும் அதிகம் பெறுங்கள். தரம், அளவு, விலை என்பவற்றை ஒப்பிடுங்கள். தரத்திலும் பெறுமதியிலும் சிறந்த விட்டாமோலைக் கேட்டு வாங்குங்கள். விட்டாமோல் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் பரிந்துரை செய்யப்படுகிறது.

### NERVOGEN NERVE FOOD





உடலின் கடுமையாக உழைக்கும் பகுதிகளான மூளை, சிறுநீரகம், ஈரல், இதயம் போன்றவற்றிற்கு சிறந்தது. சனட்டோஜனை விட சிறந்த புரதத்தைக் கொண்டிருப்பதுடன் சுவையானதும் கூட. சிறந்த மன வளர்ச்சிக்கு கேட்டு வாங்குங்கள்.

அமெரிக்காவிலும், கனடாவிலும் மேற்கிந்திய தீவுகளிலும் கிடைக்கும்.


Universal Foods & Merchandise Co,
(416) 535-3118, Toronto, Canada

### CHATAK: CURRY EXCELLENT




Chatak Madras Curry Powder *இன்றைய நிலையில் சிறந்த கறி பவுடராகும். 475 வருட காலமாக வரும் பாரம்பரியப்படி தயாரிக்கப்பட்டது. மற்ற கறி பவுடர்களை விடச் சிறந்தது.* Chatak Meat Seasoning, Fish Seasoning, Tandoori Chicken Mix *போன்றனவும் கிடைக்கும்.*

### DR.ROBERT'S GLUCOSE




குளுக்கோஸ் மரக்கறிகளிலும் பழங்களிலும் இயற்கையாகக் கிடைக்கிறது. டாக்டர் ரொபேட்டின் குளுக்கோஸ் இயற்கையான மூலப்பொருட்களிலிருந்து அதிஉயர் தரத்திற்கு தூய்மைப்படுத்திப் பெறப்பட்டது. இது உடனடியான சக்தித் தேவைகளுக்குரியது. மூளை, இரத்தம், ஈரல், தசைகள் போன்றவற்றிற்கு சிறந்தது. பால் குடிக்கும் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் சிறந்தது, ஏனெனில் இது உடலினால் உடனடியாக உறுஞ்சப்படுகிறது

அன்பளிப்புப் பொருட்கள், பொம்மைகள், இலங்கை உணவுப் பொருட்கள், மேற்குறிப்பிட்ட பொருட்கள் அனைத்திற்கும் தொடர்பு கொள்ளுங்கள்

BUDGET SUPERSAVINGS DISCOUNT
1340 Queen st west (East of lansdowne)
Tel:(416) 5370394

கோபுரத்துக்கு முன்னால் உள்ள பெரிய மணிக்கூட்டைக் காட்ட அசடு வழிய மாறிவிட்டார்.

இதெல்லாம் ஜெயந்தீஸனுக்கு எப்படித் தெரியும், இவரும் இப்படி அனுபவப்பட்டவரா என்று கேட்கின்றீர்களா? விஷயம் இதுதான். .. எனது வாஸஸ்தலம் செல்வதாயின் நான் மொன்பர்னஸ் ரயில்நிலையத்தில்தான் ரயில் எடுக்க வேண்டும்.. சற்றே முந்தி வந்தால், கோபுர முன்றிலில் நடக்கும் லீலைகளை ரஸிக்கச் சென்றுவிடுவேன்... ரஸிக்கும் வேளைகள் சிலவற்றில் எனக்கும் சுழட்டுகின்ற அருட்சி ஏற்பட்டதென்பது பொய்யில்லை...

★ ★ ★

கோடையின் போது, எனக்கு ஒரு திறிலூட்டும் சுழட்டல் அனுபவம் ஏற்பட்டது. சுழட்டியவன் நான் அல்ல. கோபுரப்படியில் நான் SIMONE DE BEAUVOIR எழுதிய 'FAUT-T-IL BRULER SADE?' என்ற கட்டுரைத் தொகுப்பைப் படித்துக் கொண்டிருந்தேன். எனக்கு சற்றே அருகில், ஓர் அழகிய லத்தீன் அமெரிக்க இளம்பெண் வோக்மனில் பாட்டுக் கேட்டுக் கொண்டிருந்தாள். சுழட்டல் மன்னன் ஒருவர் வந்து நேரத்தைக் கேட்டார். . அவள் வோக்மனைக்கழட்டினாள்.. பிறகு அவர் என்ன பாட்டுக் கேட்கின்றீர் எனக் கேட்டார்.. கனவுலகப் பெண்போல அவள் இருந்தாள்.. பிறகு மன்னன் அவளது வோக்மனை வாங்கிப் பாட்டுக் கேட்டார்.. பெண்ணுடன் பேசினார்.. ஜோக்குகள் விட்டார்.. நான் அந்தப் பெண்ணின் குரலைக் கேட்டேன்.. புல்லரித்தது.. அது போன்ற ஒரு குரலை நான் எனது வாழ்வில் ஒரு போதுமே கேட்டதில்லை.. எனது வாசகர் வாசகிகள் அனைவர் தலையிலும் அடித்துச் சத்தியம் பண்ண நான் தயார். அது போன்ற குரலை நான் ஒருபோதுமே கேட்டதில்லை. அது ஓர் வாத்தின் குரல்.. நீர்த்தடாகத்தில் தனது தலையை தண்ணீருக்குள் தோய்த்து வெளியே எடுத்தபின் "குவா" என்குமே, அது போன்ற வாத்தின் குரல்.. ஒவ்வொரு தடவையும் அவள் உதட்டைத் திறந்தபோது எனக்கு முன் வாத்தாகவே மாறினாள்.. முடிவில் வாத்து மன்னனுடன் போயிற்று.. குவா...குவா....

★ ★ ★

கோடையில் நான் மீண்டும் எனது எதியோப்பியச் சிநேகிதியைச் சந்தித்தேன். அவள் என்னிடம் "நாங்கள் மூன்றாம் உலகத்தினர்.. வெள்ளைக்காரர் தேசத்தில் எங்களுக்கு வாழ்வே இல்லை... எங்கள் பிரச்சனைக்குத் தீர்வும் இல்லை" என்றாள். "எங்கும் தீர்வு இல்லை. என்ன செய்வது" என நான் சலித்துக் கொண்டேன்.. அதற்கு அவள் தன்னிடம் தீர்வு உண்டென்றாள். எதியோப்பிய மன்னர் (அவளுக்குக் கடவுள்.. அவர் மன்னர் என்பதையும், கொல்லப்பட்டவர் என்பதையும் நம்ப மறுக்கின்றாள்) ஹெய்லி சலேஸே சொன்ன அருள் மொழிகளைக் கடைப்பிடித்தால் தீர்வு வந்துவிடும் என்பதாகும். அவள் சொன்ன தீர்வுகளில் ஒன்று கஞ்சா புகைத்துக் கொண்டு பொப் மார்லேயைக் கேட்பதும், ஆடுவதும்.. இப்போதெல்லாம், அவளைக் கண்டால் நான் ஓடி ஒழித்துவிடுவேன்.. றஸ்தபாராய்!

★ ★ ★

கோடையில், எனது மச்சான் பென் கூரியனுடன் ஒரு சின்னக் கோபம் போட்டுவிட்டேன். எனது கோபத்தின் அறுவடை அன்புதான் என்பதைப் பரிபூரணமாக அறிந்தவன் அவன். ஒரு கடிதம் போட்டிருந்தான் இது கோபக் கடிதம் அல்ல, நேசக் கடிதம்.. பாசக் கடிதம்.. அவனுக்கு நிறையக் கஷ்டங்களாம்.. கஷ்டங்களோடு கஷ்டமாக அவன் ஒரு வெள்ளைக்காறியை வைத்திருப்பதாக வேறு பாவிகள் கதையைக் கட்டி விட்டனர்.. சரி அவன் ஒரு வெள்ளைக்காறியை அல்ல.. ரெண்டு வெள்ளைக்காறியை வைத்திருந்தால் கதையைக் கட்டியவர்களின் குடியா

12 ம் பக்கம் பார்க்க..

Books,
Flyers,
Business Cards,
Wedding Cards

Blue line Printing

கண்ணைக் கவரும் வண்ணங்களில்
தரமான அச்சுவேலைகளுக்கு..

1000
Flyers $21
Envelopes $35
Business Cards $30
Letterheads $25

Tel:299 5979
Fax:299 8171

335 Nugget Ave, Unit 6
(McGowan/Sheppard)
Scarborough



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## வியாழன்...

அந்தப் படத்தில் தான் வியாழனை அண்டி ஒரு தூமகேது தென்பட்டது. அது முன்னைய கண்டுபிடிப்புகளிலிருந்து விநோதமானதாக இருந்ததாக இவர்கள் கூறினர்.

இந்த வால்வெள்ளிக்கு பல தலைகளும் பல வால்களும் பல சிறகுகளும் இருக்கக் கண்டதாக அவ் விநோதத்தை அறிவித்தனர்.

கேம்பிறிஜ் இலுள்ள வால்வெளிக் கண்டுபிடிப்புப் பதிவகத்திற்கு இது அறிவிக்கப்பட்டபோது இதனை உறுதி செய்வதுடன் கணிப்பிலும் ஈடுபட்ட இந்நிறுவனம் அதன் இயக்குனர் பிறைன் மார்ஸ்டென் மூலம் அத் தூமகேது வியாழனை சுற்றிய ஒழுக்கத்தில் வலம் வருவதாயும் அது வியாழனை தாக்கவும் போவதாக உலக வான்வெளி ஆய்வாளர்கட்கு அறிவித்தது.

'நாசா' இத் தூமகேதுவினை பல திசைகளிலும் பல தொலைநோக்கி புகைப்பட உபகரணம் குறிப்பாக அதி உயர்வலுவுள்ள "கபிள்" தொலைநோக்கி மூலம் பெற்ற 276 புகைப்படங்களைக் கொண்டு சூமாக்கர்-லெவி 9 என்ற அத் தூம கேதுவின் பூர்வீக சரித்திரத்தை ஊகம் பண்ணியிருந்தது.

இதன்படி சூரிய மண்டலத்தின் வயதாகக் கருதப்படும் 4 1/2 மில்லியன் வருடம் வரை குழம்பாமல் ஒழுக்கில் இயங்கிவந்த இத்தூமகேது 1970இல் வியாழனுக்கு அண்மையில் பிரவேசித்த போது வியாழனின் அதி உயர் சுய ஈர்ப்பு சக்திக்குள் அகப்பட நேர்ந்ததாம்.

1992 யூலை 27இல் அது இன்னும் நெருங்கி

12ம் பக்கம் பார்க்க...

உ

# சோதிடம்

★ ஜாதகக் குறிப்பு எழுதுதல் Raphael's Astronomical Ephemeries இன் அடிப்படையில் பாவ, கிரகஸ்புடகங்கள் தயாரிக்கப்படும். வேறு நாடுகளில் பிறந்தவர்களுக்கும் ஐம்பது வருடங்களுக்கு முன்னர் பிறந்தவர்களுக்கும் ஜாதகக் குறிப்பு எழுதப்படும்.
★ ஜாதகங்கள் பரிசீலிக்கப்பட்டு பலன் கூறப்படும்.
★ அதிட்ட விஞ்ஞான அடிப்படையில் பெயரிடுதல்
★ சுபமுகூர்த்தம் நிச்சயித்தல்
★ பாவஸ்புடக ரீதியாக கிரகபாவம் கணிக்கப்பட்டு அங்காரகதோச பரிகாரம் பற்றிய கருத்துக்கமைவாக விவாகப் பொருத்தம் பார்த்தல்

உங்கள் பிரச்சனை எதுவானாலும் சோதிட ஆலோசனை பெற நாடுங்கள்.

**சி.சிதம்பரப்பிள்ளை**

இளைப்பாறிய ஆசிரியர் (சாவகச்சேரி)
அனுபவமிக்க சோதிடர்
தொடர்புகளுக்கு:
90 Digby Cresent (Brimley/Steeles)
Markham, Ont,L3R 7G7
**(905) 513-9840**

**நகரின் மத்தியில் தனித்துவமான ஓர் உணவுச் சேவை**

# UNIQUE CATERERS

**Caterers of Sri Lankan, West Indian, Chinese and Canadian Cuisine**

**31 PASSMORE AVE, UNIT 16
SCARBOROUGH, ONT M1V 4T8
TEL:(416) 292 3535**

திருமண வைபவங்கள், பிறந்த நாள் விழாக்கள் போன்ற அனைத்து வைபவங்களுக்கும் சகல விதமான உணவு வகைகளும் முழுச் சேவையுடன் தரத்துடன் வழங்குகிறார்கள

**Other Services:**
**Party Hall Arrangement
Linen, Flower Arrangements
Cutlery, Warmers
D.J Service, Bartenders
Uniform staff, Decorations**

**Food Prepared By Qualified Chefs**

**Experienced in All Kind of Foods**

**Trade & Vendor Inquires Welcome**

**Give Us A Call
We Will Look After All Your Party
& Other Unique Needs**

**Contact:**
**Herlyn Selvanayagam
416-299-3203
Merlyn Selvanayagam
416-498-7481**

**Our Specialities:**
**Sri Lankan Style:**
Rice Curries (Veg & Non Veg)
All kinds of Buriyani, Fried Rice
Kothu Rotti, String hoppers
**West Indian Style:**
All kinds of Fried Rice
Roti & Curry, Dhal Puri
**Also Canadian & Chinese dishes**
Deserts: Your Choice
We also equipped to supply
10-1000 pieces of Short eats
(Appetizers) patties, Rolls, Cutlets etc

www.tamilarangam.net தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்

### ஜூலை 83

ஜூலை 83 மீண்டும் நினைவு கூரப்படுகிறது

நிகழ்வுகள் துர்ப்பாக்கியமானவை. ஆனால் அசாதாரணமானவை அல்ல.

விகாரப்பட்ட மனங்கள் வெறி கொண்டதன் விளைவு அப்பாவிகளின் மரணங்கள் என்று இரண்டு வரிகளில் விபரித்து விட்டுப் போகலாம். வருடா வருடம் கவிந்த கண்களோடு மௌன அஞ்சலிகளைக் குவித்து விட்டுப் போகலாம்.

நடந்துமுடிந்த சம்பவங்களைப் போலவே இவைகளும் இலகுவான காரியங்கள். மாண்டு போன உயிர்கள் மீண்டும் சிகிச்சை செய்யவில்லை. பதினொரு வருடங்கள் பறந்து விட்டன. சதுரங்க விளையாட்டு இன்னும் செக் மேட் இல் தான் இருக்கிறது!

சம்பந்தப்பட்ட இரு பகுதியினரும் விரும்பியிருந்தால் பிரச்சனைகளுக்குத் தீர்வு கண்டிருக்க முடியாதா?

முடிந்திருக்கும்.

சிகிச்சை வெற்றியளிக்க வேண்டுமானால் உடலோடு மனமும் ஒத்துழைக்க வேண்டும். வெறிகளினின்றும் மனங்களே இன்னும் விடுதலை பெறாதபோது மக்களுக்கு மட்டும் எங்கே விடுதலை கிடைக்கப் போகிறது?

அப்போ கலவரத்தின் களப்பலிகளுக்கு?

உயிர்களுக்கு உத்தரவாதம் இல்லை. அவசரமானால் ஆங்கிலேயராய்ப் பிறவுங்கள்!

### அமெரிக்கப் பெருமானுக்கு அரோஹரா

ஒரு நிமிடத்திற்கு ஒரு உயிர் வீதம் உலகை நீத்துக் கொண்டிருக்கிறது ருவாண்டாவில் ஐந்து நாட்களில் ஒரு லட்சம் பேர் மடிந்து போயிருக்கிறார்கள்.

இவற்றுக்கெல்லாம் போர் தான் காரணம்.

போர்களை நிறுத்தினால் அழிவுகள் நிறுத்தப்படலாம் என்று தத்துவம் சொல்வதற்கு ஒரு மேதை வரத் தேவையில்லை. போர்களை நிறுத்தும் துணிச்சலுள்ள வீரர்கள் இதுவரை பிறக்கவுமில்லை.


சில வருடங்களுக்கு முன் மாஜி ஜனாதிபதி புஷ் தனது நாட்டைப் பீடித்திருக்கும் போதை வஸ்து நோயை அறவே அழிப்பது என்று சில நடவடிக்கைகளை எடுத்தார். போதை வஸ்து எங்கே தயாரிக்கப்படுகிறதோ அந்தந்த இடங்களையெல்லாம் குண்டு வீசித் தகர்த்தார்.

நல்ல சமாச்சாரம் பத்திரிகை சாதனங்களுக்கு! அரசியல்வாதிகளுக்கு!

ஆனால் இந்த போதை வஸ்து தயாரிப்பது அமெரிக்கர்கள் தான் என்பதும் அப்பப்போ தங்களது பிரத்தியேக விமானங்களில் தெற்கே போய் வியாபாரத்தைக் கவனித்து வருகிறார்கள் என்பதும் ஜனாதிபதிக்குத் தெரியாமலிருந்திருக்க நியாயமில்லை.

அதை விடவும் அந்த போதை வஸ்து வியாபாரத்தில் சம்பாத்தியமான பணத்தில் தான் உலகம் முழுவதுமே மேற்கு நாடுகளிடம்,குறிப்பாக அமெரிக்காவிடம் போருக்கான ஆயுதங்களை வாங்குகிறது என்பதும் அவருக்கு நிச்சயமாகத் தெரிந்திருக்கும். தனது ஆயுதத் தொழிற்சாலைகள் இருபத்து நான்கு மணி நேரமும் இயங்கவேண்டும் என்ற கரிசனை அவருக்கு! பணம் போதை வஸ்து விற்று வந்தாலென்ன! விபச்சாரத்திலிருந்து வந்தாலென்ன! கொலம்பியாவில் குண்டு வீசி போதை வஸ்து ஆலைகளை அழித்தது வெறும் பப்ளிசிட்டி ஸ்டண்ட். தனது குடிமக்களின் உயிர்களைப் போதைவஸ்து அரக்கனிடம் இருந்து காப் பாற்ற இதைச் செய்வதாக நாடகமாடினார்.

இதே வேளை உலகின் பல பாகங்களிலும் லட்சக் கணக்கான உயிர்களைப் பலி யெடுக்கும் ஆயு தங்களை மட்டும்



அவரும் அவர் சகபாடிகளும் தயாரித்துக் கொண்டேயிருக்கின்றனர். அந்த ஆயுத ஆலைகளைக் குண்டு வைத்துத் தகர்க்க யாருக்கும் துணிச்சலில்லை.

ருவாண்டாவில் கொலையாளிகளுக்குப் பயிற்சி கொடுத்தது ஒரு புறம் உகண்டா, மறுபுறம் சாயர் நாடுகள். இரண்டு நாடுகளுக்கும் ஆயுதம் வழங்குவது மேற்கு நாடுகள். போரின் அனர்த்தத்தால் அகதிகளாக்கப்பட்டு அரை உயிர்களுடன் அலைந்து திரிகின்ற அப்பாவி மக்களுக்கு உதவி செய்யவென ஓடித்திரிவதும் அதே மேற்கு நாடுகள். இது ருவாண்டாவில் மட்டுமல்ல நமது ஈழம் தொடக்கம் எல்லா இடங்களிலும் தான். போகிற போக்கைப் பார்த்தால் படைத்தல், காத்தல் அழித்தல் எல்லாமே அமெரிக்கா இஷ்டம் போல் தான் தெரிகிறது.

மூளைகளைத் தொலைத்து விட்ட நாங்கள் அமெரிக்க பெருமானின் ஆயுத கடாட்சம் பெறுவதற்காய் மூவுலகையும் வலம் வந்து கொண்டிருப்போம்.

அமெரிக்கப் பெருமானுக்கு அரோஹரா!

### குத்து விழா

உலகத்தமிழர்பண்பாட்டு விழா நடைபெறமாட்டாது என்பது உத்தியோகபூர்வமாகி விட்டது. இது ஓரளவு எதிர்பார்க்கப்பட்டது என்பதனால் எனக்கு அதிகம் ஏமாற்றமில்லை. இந்த ஏற்பாடுகளின் முன் பின் நிகழ்வுகளைப் பார்க்கும் போது சில விடயங்கள் புரிய முற்படுகின்றன.

இந்த விழா நடைபெறாமற் போனதற்கு முதுகுக் குத்தல்கள் தான் முன்னணியில் நிற்கின்றன. சொரியத் தானே கேட்கிறார் என்று முதுகைக் கொடுத்து குத்து வாங்கியவர்கள் சிலர். பரஸ்பரம் குத்திக் கொண்டவர்கள் சிலர். வெளியார்களிடம் கொந்தராத்துக் கொடுத்து குத்துவித்தவர்கள் சிலர். மொத்தத்தில் குத்துக்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்தான் உ.த.ப.கழகம் என்றவாறு சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. தமிழர் என்ற வகையில் நாமே நமக்குக் குத்திக்கொள்ளலாம் போலிருக்கிறது.

எமக்குள் என்னதான் நடந்தாலும் அது இரகசியப் பொலிசாரின் ஆசீர்வாதம் இல்லாமல் நடைபெறாது. பூப்புனித நீராட்டு விழாவுக்கு கும்பம் வாங்குவதற்கும் யாராவது பொலிஸ்காரன் தான் வரவேண்டும் என்கின்ற அளவுக்கு அவர்களோடு நெருக்கமான உறவு சிலருக்கு.

குற்றச்சாட்டு பலவிதம், பல கோணங்களிலிருந்து வருகிறது. கும்பல்களோடு பல கோவிந்தர்களும் குற்றம் விசாரிக்கிறார்கள். நிலமைகளைத் தெளிவுறச் செய்வது உ.த.ப.கழகத்திற்கு எவ்வளவு அவசியமோ அதே அளவு குற்றச்சாட்டுகளை அதாரபூர்வமாக நிரூபிப்பது அவற்றை முன்வைப்போர் கடமையாகும்.

இதன் இறுதி விளைவாக சமூகம் நாறடிக்கப்பட்டிருக்கிறது. இதற்குப் பரிகாரம் தேடுவதும் இரண்டு சாரரிடமுடையதே,

தமிழர்களிடையே ஒரு ஜனநாயக அமைப்பு செயற்பட முடியாது என்பதற்கு இது நல்ல ஒரு உதாரணம். இதே மாநாட்டை உலகத்தமிழர் இயக்கம் ஒழுங்கு செய்திருப்பின் அது ஒழுங்காக நிறைவேறியிருக்கும்.

இல்லை எண்டு சொல்லுவியளோ?

**சிவதாசன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

*வியாழன்...*

வியாழனில் இருந்து 30,000 கி.மீ தூரத்தில் வந்த போது வியாழ ஈர்ப்பு சத்தியால் (பூமியைவிட அதி கூடியது பூமியில் 100 இரு நிறையுள்ளவர் வியாழனில் 260 இரு) 21 பாகங்களாக உடைவுண்டதுடன் அவற்றின் ஒழுக்கம் குழப்பமடைந்ததாம்.

இதன் காரணமாக இத் தூமகேது வியாழனைக்கடந்து ஒரு நீள் வளைய ஒழுக்கின் பாதையில் 50 மில்லியன் கி.மீ சென்று 1993 யூலையில் அந் நீள் வளைய ஒழுக்குப் பாதையின் முனையை அடைந்து திரும்புகையில் 1994 யூலை 16-20 வரையில் சுய சுழற்சியுடன் சூரியனை வலம் வர நகர்ந்து கொள்ளும் வியாழனுடன் மோதியதாம். இம் மோதலை பல விஞ்ஞானிகள் உன்னிப்பாக அவதானிக்க ஒழுங்குகள் செய்திருந்தனர்.

வியாழனில் விழுந்த இத் தூமகேது தான் கொண்ட இரசாயனக் கலவையுடன் 30,000 பாகை அளவிலான வெப்ப திணிவுகளாக 60 கி.மீ செக் வேகத்தில் அடித்ததால் அது கிரோஷிமாவில் போடப்பட்ட அணுகுண்டிலும் 10 மில்லியன் மடங்கில் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது ஆயினும் இது பற்றி இன்னும் ஊர்ஜிதமாகவில்லை.

பூமியின் விட்டத்தில் 11 மடங்கு கூடியதுடன் பருமனில் பூமியிலும் 300 மடங்கு உயர்வான வியாழனில் இது ஏற்படுத்திய சேதம் உயர்வானதா என இன்னும் அறிவிக்கப்படவில்லை.

எனினும் வியாழனின் கீழ் பகுதியில் அடையாளத்தை தோற்றுவித்திருந்தது புகைப்படத்தில் அவதானிக்கப்பட்டது. 528.8 மில்லியன் கி.மீ எமக்குத் தொலைவில் உள்ள வியாழனில் தெரியும் அந்தத் தாக்கத்தின் சின்னம் அப்பெரிய கிரகத்தைப் பொறுத்த வரையிலும் ஒரு பெரும் தாக்கந்தான் என நம்பலாம்.

தூமகேது சூமேக்கர் லெவி 9 வியாழனில் விழுந்த கணத்தில் அக் கிரகத்தை 100 கி.மீ. தடிப்பில் கவசம் போல மூடியிருந்த உறைந்த இரசாயனக் கலவைகளும் வாயுக்களும் இத் தாக்குதலால் உடைந்து துவாரம் ஏற்படுத்தும்போது இதுவரையும் ஆவலாய் நோக்கி இருந்த வியாழனின் உட்பரப்பும் மண்டலமும் அறியப்பட வாய்ப்பு உண்டு என பல விஞ்ஞானிகளும் எதிர்பார்த்திருந்தனர். இதுபற்றிய விபரமும் இன்னும் அறியத் தரப்படவில்லை.

வியாழக்கிரகத்தை நிறமூட்டிக் கொண்டதும் கன்னிக்காலை சுற்றிக் கட்டப்படும் வேட்டித் திரணை போல் சுற்றி அழகு செய்த இரசாயனப் பொருட்களும் வாயுக்களும் சூமேக்கர் லெவி தூமகேது 21 முத்துகள் கொண்ட சரம் போல் காண்பித்த ஆக்கக் கூறுகள் என்ன என தெரிய வரும் என அறிவிக்கப்பட்டிருந்த போதும் இன்னும் அறியமுடியாமல் உள்ளது எமக்கு.

ஆனால் பொறுத்திருப்போம் ஆய்வு என்பது சாதாரணமானதுமல்ல, அவசரமானதுமல்ல உறுதிப்படுத்தப்பட்டதும் தெரிய வரும். அதுவரை பொறுத்திருப்போமே!


அதற்கு முதல் ஒரு முன்னறிவிப்பு: வியாழனுக்கு தோஷம் என அறிவிக்க சோதிடர்கள் முன்வர இருப்பார்கள் ஏனெனில் அண்மையில் வியாழ மாற்றமும் வருகிறதாமே! அவதானம்.. அவதானம் ஏமாந்து போய் விடாதீர்கள்.

முன்னும் இலக்கக் காரருக்கு எச்சரிக்கை என யாரும் காதில் குசுகுசுக்கலாம் ஜாக்கிரதை.

*தற்போதைய பொருளதார மந்த நிலைக்குள் வேலைவாய்ப்பு பெறுவதை இலகுவாக்க, ட்ரக் வண்டிச் சாரதிப் பத்திரத்தைப் பெறுங்கள்.*

**SAFETY TRUCK DRIVER TRAINER**

**CLASS A, D,Z சாரதிப் பத்திரங்களுக்கான பயிற்சிகள்**



★ பதினைந்து வருட அனுபவம் வாய்ந்த *Ontario Safety League* சாரதி பயிற்சிப் பத்திரம், *Air Brake Endorsement Instructor* சான்றிதழ் பெற்ற பயிற்சியாளர்

★ தனித்தனி நேரடிப் பயிற்சி

★ தொழில் பெற்றுக் கொள்வதற்கான ஆலோசனைகள், உதவி வழங்கப்படும்

**தமிழ் மொழி மூலம் முழுப்பயிற்சிகளும் வழங்கப்படும்.**

**தொடர்புகளுக்கு:**
**யோகன் சொக்கலிங்கம்**
**(905) 793 9546**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# Scarborough Dental Office

## Dr.Athi K.Somasundaram

டாக்டர் ஆதிகணபதி சோமசுந்தரம்

**பேராதனை பல்கலைக்கழகம், சென்னை மருத்துவக் கல்லூரி,**
**கனடா தேசிய பல்வைத்திய சபை**

We treat You Royally

- Cosmetic Dentistry
- Crown & Bridges
- Gum Treatment
- Root canals
- Bleaching
- Dentures
- Surgery

★ அவசர சிகிச்சைகளுக்கு முன்னறிவிப்பு இன்றி சிகிச்சை வழங்கப்படும்
★ அழகுபடுத்தும் பற்சிகிச்சைகள்
★ காப்புறுதித் திட்டங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.
★ சமூக உதவிப் பணம் பெறுபவர்களுக்கும் சிகிச்சை வழங்கப்படும்

**Tel:(416) 750 9969**
**Fax:(416) 750-9967**
**2155 Lawrence Ave East, Suite 10**
**(At Birchmount), Scarborough**
**•Wheel Chair Access**
**•Free Parking**

திங்கள் முதல் சனி வரை
காலை 9 மணி - மாலை 9 மணி வரை
ஞாயிறு தினங்களில்
நண்பகல் 12 - மாலை 5 மணி வரை
(ஞாயிறு தினங்களில் சேவையைப் பெற்றுக் கொள்ள முன்னறிவித்தல் செய்து கொள்ளுங்கள்)
★ 24 மணி நேர அவசர சிகிச்சை சேவை

**Monday-Saturday**
**9 am-9 pm**
**Sundays**
**12 noon-5 pm**
**Sunday by appointment only**
**24 Hrs Emergency Service**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# மத 'விவகாரங்கள்'

## சிவப்பிரகாசம்

வாசகர்களின் கருத்துக்களை 'தாயகம்' கவனத்தில் கொள்வது யாவரும் அறிந்தது. கடந்த வருடம் கோவில் மத மன்றங்கள் பற்றி தாயகத்தில் வெளிவந்ததைப் இந்துமத பெரியார்கள் முதல் அபிமானிகள் வரை எவரும் விரும்பியதாகத் தெரியவில்லை. சில வாசகர்களும் தாயகத்தில் அக்கருத்தையே வலியுறுத தியிருந்தனர். விமர்சனங்களை ஜீரணிக்கும் பக்குவம் நாம் பெறவில்லை என்பதே அதன் கருத்தாக இருக்கலாம். அந்த ரீதியில் மத சம்பந்தப்பட்ட விஷயங்களில் தனிப்பட்ட முறையில் எவரையும் புண்படுத்தாத விஷயங்களையே தாயகம் இனிமேல் முன்வைக்கும் என எதிர்பார்க்கிறேன்.

**கோவில் மத மன்றங்களை உருவாக்குவது எப்படி?**

இங்கே பலருக்கு கோவில் கட்டவேண்டும் என்று விருப்பம். ஆனால் அதை செய்ய எவ்வகையான முயற்சிகள் செய்யவேண்டும் என தெரியாது உள்ளனர். அதை அறிந்து கொள்ள ஏற்கெனவே அதில் ஈடுபட்டுள்ளவர்களிடம் கேட்டால் போட்டியாக அமைந்துவிடும் என்று சொல்லித்தர விரும்பமாட்டார்கள். இது பற்றிய விபரங்களை அறிய அலுவலக அனுபவம் உள்ள ஆங்கிலம் சரளமானவர்களைக் கேட்டால் என்ன நடக்கும் என எதிர்பார்க்கிறீர்கள்? அந்த விபரங்களை மறைத்து விடுவார்கள். ஓய்வுபெற்ற பல பெரியோர்களுக்கு இவ்வகையான 'சேவை'களில் இறங்கி தலைமை தாங்க விருப்பம். எதுவும் சரியாக வந்து அமையாததால் மனம் உடைந்த பெரியவர்கள் கூட உண்டு. இவ் வகையான மதசம்பந்தமான ஸ்தாபனங்களை ஆரம்பிக்க அதற்கென்று ஒரு படிமுறை உண்டு. அரச, மாகாண அரச, மாநகராட்சி அரச அனுமதிகள் உரிய முறையில் பெறப்பட வேண்டும். அதற்கான ஆவணங்கள் சமர்ப்பிக்க வேண்டும். இவ்விபரங்களைச் சேகரித்து சட்டநுணுக்கத்துடன் தரலாம் என நினைக்கிறேன். இந்து அபிமானிகள் இதை வரவேற்பார்கள் என்பது என் ஊகம். இவ்வாறான ஸ்தாபனங்கள் உருவாகுவதனால் ஏற்படும் பல புலப்படும், புலப்படாத நன்மைதீமை (DEBITS–CREDITS) பற்றியும் அதில் சேர்ப்பது நல்லதல்லவா! இவ்வகையான ஸ்தாபனங்கள் பல எம் மத்தியில் உருவாகும் போது நாம் உண்மையான பக்தியைப் பற்றி உணர ஆரம்பிப்போம். 'வீட்டிலேயே ஆலயம் அமைத்து வணங்கினால் அதுவே போதும் அப்பப்பா' என்ற இந்துமதம் போதிக்கும் உன்னத நிலைக்கு வருவோம். மனமே ஆலயம் என்ற பரிபூரண பக்குவத்துக்கு வருவோம். இந்நிலையை நாம் அடைய வேண்டுமானால் ஆயிரம் கோவில்களும் மன்றங்களும் நம் மத்தியில் உருவாக வேண்டும். அவைகளின் 'சேவை'களில் நாம் மலைத்துப் போய் திணற வேண்டும்.

**'மதம் சம்மதம்' பற்றி**

'சகல மதங்களும் ஒரே நோக்கம் கொண்டவையே' என்ற

**NATIONWIDE CONSULTANTS**

AUT O INSURANCE
ACCIDENT CASES
REJECTED CASES
LOW PAYMENT
MUL TI CAR DISCOUNT
INSURANCE FOR
YOUNG DRIVERS
All TRAFFIC TICKETS

உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளுக்கும், வாகன போக்குவரத்து சட்ட மீறல் டிக்கட்டுக்களுக்கும் எங்களை நாடுங்கள்

Visitor Visas
Refugee Claims
Rejected Cases
Business Visa
Assisted Classes

விசாக்கள் பெறுவதில் சிரமமா? குறிப்பாக இந்திய விசா பெறுவதில் தாமதமா? அகதிக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதா? சகல குடிவரவு விசாரணை தேவைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்

CALL
SHAN
321 1311
740-SHAN
BY APPOINTMENTS ONLY



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்

பொதுக்கருத்தை வலியுறுத்தி இலவசமாக ரொரான்ரோவில் வெளிவரும் ஒரு சஞ்சிகை இது. மிக உயர்ந்த நோக்கம். மனித சமூக மேம்பாட்டுக்கு இரண்டு விழிகள் உண்டு. ஒன்று ....சகல மதங்களும் சம்மதம். மற்றது... எம்மதமும் தேவையில்லை. இரண்டாவதாகக் கூறப்பட்ட விஷயம் மனித சமுதாயம் ஏற்றுக்கொள்ள முடியாமல் போனதை கம்யூனிசம் வீழ்ச்சியுற்றதில் இருந்து காணக்கூடியதாக உள்ளது. எனவே எம்மதமும் சம்மதம் என்ற கருத்தை உலகம் ஏற்றுக் கொள்ள வைப்பது இனிமேல் உள்ள முறை. அதைச் செய்வது சுலபமானதல்ல. பல மதங்களைப் பற்றிய கட்டுரைகள் ஒரே சஞ்சிகையில் வருவதால் மட்டும் செய்துவிட முடியாது. மதங்கள் ஒன்றைத்தான் தேடுகின்றன என்பதை அவ்வவ் மதங்களில் கூறப்படும் விஷயங்களை ஒப்பிட்டு சமர்ப்பித்தே மக்கள் மத்தியில் தெளிவாக்க முடியும். அதை இந்தச் சஞ்சிகை படிப்படியாகச் செய்யும் என எதிர்பார்க்கலாம். அவரவர் தம் மதங்களை சரியாக அனுசரித்தால் அதுவே போதும் என்பது உணரப்படும் காலம் உருவாகும். 'இராம கிருஷ்ணமிஷன்' வாசனை அதிகமாயே இருப்பதனுல் சொல்லப்படும் கருத்துக்களை மாற்று மதத்தினர் தப்பாக அபிப்பிராயப்பட வாய்ப்பு உண்டு என்பதை சஞ்சிகை நடத்துபவர்கள் உணர்வார்களாகுக. உயரிய நோக்கம் வளர்ச்சி பெறுக.

## DANCING WITH SIVA
### ஒரு வரப்பிரசாதம

சற்குரு சிவாய சுப்பிரமணியசுவாமி (ஹவாய் சுவாமிகள்) அவர்கள் எழுதிய இந்நூலின் அண்மைய பதிப்பில் பல நல்ல அம்சங்கள் காணப்படுகின்றன. இலகுவான ஆங்கில நடையில் புரியக் கூடியதாக தற்கால இந்துக்கள் அறிய வேண்டிய விஷயங்களை அழகாக தொகுத்திருக்கிருர் இந்த வெள்ளைக்காரர். இதையே நம்மவர்கள் எழுதியிருந்தால் கடினமான சொற்களைப் புகுத்தி தமது ஆங்கிலப் புலமையை வெளிக்காட்ட நினைத்து நூலின் நோக்கம் நிறைவேருது செய்திருப்பர். சாதாரணமானவர்கள் இந்து மதத்தில் தெரிந்திருக்க வேண்டிய ஒழுக்க முறைகள் அனுஸ்டானங்கள் பற்றி நூலில் எழுதப்பட்டுள்ளது. மனிதன் தன்னைப்பற்றி, இறைவனைப்பற்றி, தன்னைச் சூழ்ந்த பொருட்கள் பற்றி அறிய வேண்டிய விஷயங்களை அழகாக உணர்த்துகிருர். மற்றைய மதங்கள் காட்டும் நெறிகளை சுருக்கமாக தந்து சகலமும் ஒன்றே என்பதை தெளிவாக்க முனைகிருர்.. காலக்கோடு என்ற பகுதியில் இந்துசமய உலகவிவகாரங்களில் கடந்த 12000 வருஷத்துக்கு மேலாக நடந்த சம்பவங்களை பல நூல்களை உதாரணம் காட்டியும் நில அகழ்வு ஆய்வுகளை உதாரணம் காட்டியும் பட்டியல்படுத்தி யுள்ளார். நூலில் காணப்படும் சில தத்தவக் கருத்துகளில் முரண்பாடு காணப்படினும் இன்றைய காலகட்டத்தில் அவைபற்றி விவாதிப்பது தேவையில்லை என நினைக்கிறேன். இந் நூலைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் கீழ் கண்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். Kauai Aadheenam 107 Kaholalele Road, Kapaa, Hawaii 96746 USA

## ஆடி அமாவாசை-
## புரியாத புதிர்

இம்முறை ஆடி அமாவாசை ஆகஸ்ட் 6ம் திகதியா அல்லது 7ம் திகதியா என்பதில் பல கருத்துகள் பலரும் சொல்கிருர்கள். இருபகுதி விவாதங்களும் சரிக்குச்சரி சமமாக இருக்கிறது. இங்குள்ள இந்துக்கள் குழம்பிய நிலையில் உள்ளார்கள். கோவில்களும் வெவ்வேறு நாட்களைத் தேர்ந்து எடுத்துள்ளன. 7ம் திகதி சூரியன் உதிக்குமுன்பே அமாவாசை முடிந்துவிடுவதால் அன்று அமாவாசையை அனுஷ்டிப்பது தவறு என்றும் 6ம் திகதியே சரி என்பதும் ஒரு சாரார் வாதம். இனி 7ம் திகதிக்கு சார்பான வாதத்தைப் பார்ப்போம்.

ஒரு நாளுக்குரிய திதி என்ன என்று காண்பது திதி எப்போது முடிகிறது என்பதில் தங்கியுள்ளதா? திதியின் தாக்ககாலம் (effect) எந்த நாளில் என்பதைக்கொண்டுதான் திதி கணிக்கப்படுகிறது. அந்தக் தாக்ககாலத்தை இந்திய நாடுகளில் கணிப்பதற்கான முறைதான் மத ஜோதிட நூல்களில் உள்ளது. அந்தக் கணிப்புப்படி திதியின் தாக்கம் 7ம் திகதி காலை உதயம்முதல் அமைகிறது. அதாவது ரொரன்ரோவில் 6ம் திகதி சூரிய அஸ்தமனத்தை அண்டி அந்தத் தாக்க காலம் ஆரம்பித்து 7ம் திகதிக்கும் வியாபிக்கிறது. எனவே 7ம்திகதி செய்வதே சரியானது. அன்று அமாவாசைக்குரிய பஞ்சாங்க திதி சூரிய உதயத்துக்கு முன்னரே முடிந்துவிடுவதனுல் அதன் கருத்து அமாவாசை முடிந்து விட்டது என்பதல்ல. ரொரன்ரோவில் வருஷப்பிறப்பு சூரிய உதயத்துக்கு சற்று முன்னரே பிறந்து விட்டால் வருஷப்பிறப்பை முதல்நாள் கொண்டாடுவதில்லை. இப்படியும் இதை வலுவேற்ற இன்னும் பல காரணங்களைக் கொண்ட ஒரு வாதத்தைக் கூறி 7ம் திகதி செய்வதுதான் சரியானது என வேறுசிலர் சொல்கின்றனர்.

இரண்டு வாதங்களிலும் உண்மை இருக்கிறது. ஆனுல் எது சரி என்பதைச் சொல்ல அந்தப் பரமசிவன் தான் காட்சி அளிக்க வேண்டும். அப்படி அவர் காட்சி அளித்தாலும் தான் பரமசிவன்தான் என நிருபிக்க கோவில்களிலும் மதமன்றங்களிலும் அறிமுகக் கடிதம் வாங்கி வரவேண்டும். பரமசிவனுக்கு ஒரு கோவில் அறிமுகக் கடிதம் கொடுத்தால் மற்றக் கோவில் ஏற்க மறுக்கும். மத மன்றத்தில் தனக்கு நேர்ந்ததைச் சொல்லி நீதி கேட்டால் 'சாரி தம்பி, நாங்க அந்த விஷயம் எல்லாம் deal பண்ணுறதில்லை' என்று கதவு அடித்துச் சாத்தப்படும். வெட்கித் தலை குனிந்தவண்ணம் கைலாயம் திரும்பி 'இப்படி எல்லாம் மனிதர்களைப் படைத்துவிட்டாயே' என்று பிரமதேவனுக்கு நாலு சாத்துச் சாத்திவிட்டு பார்வதியிடம் சொல்லி கண்கலங்க வேண்டி நேரிடும். இப்படியெல்லாம் நடக்கும் என்று தெரிந்துதான் கடவுள் கல்லாகவே பார்த்துக் கொண்டிருக்கிருரோ!

6ம் திகதி (சனிக்கிழமை) செய்தால் என்ன, 7ம் திகதி செய்தால் என்ன– நீங்கள் எந்த நாளை தெரிவு செய்கிறீர்களோ அதுதான் சரியானது என்ற நம்பிக்கையுடன் அனுஷ்டித்தால் அதற்கான பேறு கிடைக்கும். இந்து மதத்தில் நம்பிக்கைக்கு மற்ற எல்லாவற்றிலும் பார்க்க சக்தியுண்டு. பௌர்ணமியில் கூட அமாவாசைக 'குரிய தர்ப்பணத்தைச் செய்தால்– அதாவது.... தெரியாமல் அமாவாசை என்ற பூரண நம்பிக்கையுடனே இறைவன் மீதான தம்மை இழந்த நிலையில் செய்யப்பட்டால் அதற்குரிய பேறு கிடைக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை என்கிறது இந்துசமயம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்

தொடர்நாடகம்

# தமிழில்: நேசன்

# கறை படிந்த கைகள்

## ஜீன் போல் சாத்ரே

சூட்கேஸ்க்குள் ஒன்றுமில்லையா?
ஹிகோ: ஆமாம் (ஹொடரர் ஹிகோவை ஆழமாக கவனிக்கின்றான்)
ஹொடரர்: அந்த சூட்கேஸ்
ஹிகோ: அதிலும் ஒன்றுமில்லை
சிலிக்ஸ்: (சூட்கேஸை தூக்கியபடி) ஆம் இங்கொன்றும் இல்லை
ஹிகோ: மிகவும் நல்லது. இப்ப பிரச்சனை இல்லை
சிலிக்ஸ்: No hard feelings
ஹிகோ: No hard feelings
யசீக்கா: (அவர்கள் வெளியேறும்போது ஹொடரரை நோக்கியபடி) பிறகு சந்தர்ப்பம் ஏற்படும் போது உங்களைச் சந்திக்கிறேன்
ஹிகோ: நீ இங்கு வருவதானால் நான் இவர்களை அடிக்கடி போய் பார்க்கவேண்டியதில்லை
ஜெசிக்கா: அவர்கள் சோக்கான ஆக்கள்.. குறிப்பாக ஜோர்ஜ் அவன் பார்ப்பதற்கு ஓர் பெண் மாதிரி
ஹொடரர்: ஹம் (அவளை அணுகியபடி) நீ மிகவும் அழகானவள். அது இருக்கும்வரை பிரச்சனைதான் இயற்கை கொடுத்திருப்பதை நாம் மாற்ற முடியாது. இப்பிரச்சனைக்கு இரண்டு தீர்வுகள் உண்டு ஒன்று உனக்கு திறந்த பெரிய மனது இருந்தால் நீ எங்கள் எல்லோரையும் திருப்தியும் சந்தோஷமும் படுத்தலாம்.
ஜெசீக்கா: எனக்கு உள்ளது ஒரு சின்ன மனசு
ஹொடரர்: நான் அப்படித்தான் நினைத்தேன். இரண்டாவது தீர்வு உனது கணவன் வீட்டில் இல்லாத சமயம் நீ வீட்டை பூட்டிக்கொண்டு உள்ளேயே இரு. நான் வந்தால் கூட கதவை திறக்காதே
யசீக்கா: நல்லது ஆனால் உங்களுக்கு உடன்பாடு என்றால் என்னிடம் மூன்றாவது தீர்வு ஒன்று இருக்கின்றது.
ஹிகோ: உனது இஷ்டம் (அவளருகே சாய்ந்தபடி நுகர்கின்றான்) உன்னிடம் இருந்து நல்ல வாசனை வருகின்றது ஆனால் அவர்களிடம் செல்லும் போது இப்படியான வாசனைத் திரவியங்களைப் பாவிக்க வேண்டாம்
ஜெசீக்கா: நான் எவ்வித வாசனைத் திரவியங்களையும் பாவிக்கவில்லை
ஹொடரர்: அது மேலும் அபாயகரமானது (அவன் வாசலை நோக்கிச் செல்கின்றான்) ஹிகோ நாளை காலை 10 மணிபோல் என்னை வந்து சந்தி
ஹிகோ: சரி
ஹொடரர்: (மீண்டும் அவர்கள் வீட்டை நோட்டம் விட்டபடி) இப்ப எல்லாம் சரி பிரச்சனை தீர்ந்தது ஆனாலும் நீ பார்க்க ஒரு மாதிரியான ஆள்தான். எங்களுக்குள் இப்ப ஒரு பிரச்சனையும் இல்லை ஹிகோ நீ நல்லாய் களைச்சுப்போய் இருக்கின்றாய்
ஹிகோ: எனக்கு ஒன்றுமில்லை இங்கு நடப்பது பற்றி ஒன்றும் பெரிசா எடுக்க வேண்டாம்
ஹொடரர்: சரி எல்லாவற்றையும் மறப்போம்
ஹிகோ: எதிர்காலத்தில் என்னைப்பற்றி குறை சொல்ல எதுவும் இல்லாதபடி நடந்து கொள்கின்றேன் உங்கள் ஒழுக்க விதிகளை ஏற்றுக்கொள்கின்றேன்
ஹொடரர்: இதை எனக்கு நீ ஏற்கனவே சொல்லி விட்டாய் ஏன் நீ ஓர் மாதிரியாக இருக்கின்றாய்? உனக்கு சுகமில்லாது இருந்தால் இப்பவும் நேரம் எதுவும் போகவில்லை மத்திய கொமிட்டியுடன் கேட்டு உனக்காக வேறு ஓர் ஆளை எடுக்கலாம்
ஹிகோ: நான் சுகமாகத்தான் இருக்கின்றேன்
ஹொடரர்: மிகவும் நல்லது நாங்கள் இப்போது புறப்படுவோம் (அவள் ஹிகோவின் புத்தகங்களை நோட்டமிட்டபடி) ஹேகல், மார்க்ஸ், திறம், போக்கா இலியாட் ஹாம் நான் இதுவரை கேள்விப்பட்டதில்லை
ஹிகோ: அவர்கள் கவிஞர்கள்
ஹொடரர்: கவிதைகள்... கவிதைகள் ஏராளமான கவிதைகள் (பக்கங்களைப் புரட்டியபடி) நீ கவிதை எழுதுவயா?
ஹிகோ: இல்லை
ஹொடரர்: நீ புகை பிடிப்பதுண்டா? (ஹிகோ இல்லை என தலையசைக்கின்றான்) நல்லது நீ ஒருபோதும் களத்தில் அடிபடவில்லை என மத்திய கமிட்டி எனக்கு அறிவித்திருக்கின்றது அது உண்மைதானா?
ஹிகோ: அது உண்மை தான்
ஹொடரர்: அது உனக்கு விசரடிக்கச் செய்து இருக்குமே? ஏனென்றால் எல்லாப் புத்தி ஜீவிகளுக்கும் தாங்கள் ஏதாவது செய்ய வேண்டும் என்ற ஓர் கனவு இருக்கும்.
ஹிகோ: நான் தான் கட்சிப் பத்திரிகை அடித்தேன்
ஹொடரர்: அப்படித்தான் கொமிட்டி சொன்னது ஆனால் கடந்த இரண்டு மாத காலமாக எனக்கு பத்திரிகைப் பிரதி ஒன்றும் கிடைக்கவில்லை அதற்கு முதல் வந்தவைக்கு நீ தான் பொறுப்பா?
ஹிகோ: ஆமாம்
ஹொடரர்: நீ திறமான வேலை செய்திருந்தாய் ஆனால் உன்னை இங்கு அனுப்புவதன் மூலம் அவர்கள் பத்திரிகைக்கு துரோகம் செய்திருக்கின்றார்கள்.
ஹிகோ: உங்களுக்கு நான்தான் சரியான ஆள் என அவர்கள் நினைத்திருக்க வேண்டும்.
ஹொடரர்: அவர்கள் மிகக் கருணை மிக்கவர்கள் உன்னுடைய சங்கதி தான் என்ன? நீ அவர்களது கட்டளையை எதிர்க்கவில்லையா?
ஹிகோ: நானா?
ஹொடரர்: உனக்கு ஓர் பத்திரிகைதான் பொருத்தமான வேலை அந்த வேலையில் ஏராளமான கஷ்டங்களும் பொறுப்பும் இருக்கின்றது அது கூட ஒருவிதத்தில் களத்தில் போராடுவது போலத்தான் (அவனை கூர்ந்து கவனித்தபடி) இப்ப எனது காரியதரிசி ஏன் உன் வேலையை விட்டாய்? ஏன்?
ஹிகோ: நான் கட்சி ஒழுங்கை ஏற்பவன்
ஹொடரர்: கட்சி ஒழுங்கைப்பற்றி நீ பேசக்கூடாது உதட்டளவில் பேசுபவர்களை நான் நம்புவதில்லை
ஹிகோ: நான் கட்சி ஒழுங்கை கற்க விரும்புபவன்
ஹொடரர்: ஏன்?
ஹிகோ: நான் கனவிஷயங்களை யோசித்து வைத்திருக்கின்றேன் அவற்றை நான் கதைக்க வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஹொடரர்: என்ன மாதிரியான விஷயங்களை யோசித்திருக்கின்றாய்?
ஹிகோ: " நான் இங்கு என்ன செய்து கொண்டு இருக்கின்றேன்? நான் விரும்புவதை அடைய எனக்கு உரிமை இருக்கின்றதா? அல்லது நான் சும்மா விசரடித்துக்கொண்டிருக்கின்றேனா?" இந்த மாதிரியான விஷயங்களைப் பற்றித்தான் யோசித்துக்கொண்டு இருக்கின்றேன்.
ஹொடரர்: (மெதுவாக) அப்படியா? அந்த மாதிரியான விஷயங்களை யோசிக்கின்றாயா? இந்த மாதிரியான கேள்விகள் தான் உனது தலைக்குள் இப்ப இருக்கின்றதா?
ஹிகோ: இல்லை இல்லை, இப்ப நான் அக்கேள்விகளைப் பற்றி யோசிக்கவில்லை ஆனால் அவை பற்றி பொதுவாக யோசிப்பது உண்டு.
ஹொடரர்: மிகவும் நல்லது நீ கீழ்ப்படிவுள்ளவனாக இரு நாங்கள் ஒன்றாக வேலை செய்யலாம் (ஹிகோவின் தோளில் கையைப் போடுகின்றான்)
ஹிகோ: யாரும் என்னைத் தொடுவதை நான் விரும்பவில்லை.
ஹொடரர்: அவர்கள் உனது சூட்கேசை தேடும்போது நீ ஏன் பயப்பட்டாய்?
ஹிகோ: நான் பயப்படவில்லை
ஹொடரர்: இல்லை நீ பயப்பட்டாய் அந்த சூட்கேசுக்குள் என்ன இருக்கின்றது அதைச் சொல்லு
ஹிகோ: ஒன்றுமில்லை அவர்களே அதற்குள் தேடிப் பார்த்துவிட்டார்கள்
ஹொடரர்: ஒன்றுமில்லையா? சரி சரி பார்ப்போம் (சூட்கேஸ் அருகே சென்று அதைத் திறக்கின்றான்) அவர்கள் ஆயுதத்தைத் தேடினார்கள் ஆயுதம் மட்டுமல்ல வேறுபத்திரங்களையும் ஒருவர் சூட்கேசினுள் ஒளிக்கலாம்
ஹிகோ: தனிப்பட்ட விடயங்கள்?
ஹொடரர்: நீ எனக்கு கீழ் வேலை செய்யத் தொடங்கிய நொடியில் இருந்து உனக்கெனத் தனிப்பட்ட ஏதும் விடயம் இருக்கமுடியாது என்பதை நீ முதல் அறிந்திருக்க வேண்டும் உன்னிடம் பணம் ஏதும் இருக்கின்றதா?
ஹிகோ: எனது மனைவியிடம கொஞ்சம் இருக்கின்றது
ஹொடரர்: இந்தப் புகைப்படங்கள் யாருடையது அதைத் தான் நீ ஒளித்திருக்கின்றாய்? கடற்படை யுனிபோம்முடன் ஓர் சின்னப்பையனின் புகைப்படம் இது.
ஹிகோ: அந்தப் படங்களை மரியாதையாக என்னிடம் தாருங்கள்
ஹொடரர்: இவைதான் உன்னுடைய தனிப்பட்ட பொருட்கள்? இதை அவர்கள் எடுத்துவிடுவார்கள் என நீ பயப்பட்டாய் என்ன?
தொடரும்

# ரொறன்ரோ சர்வதேச திரைப்படவிழாவில் மணி ரத்தினம் கௌரவிக்கப்படுகிறார்

ரொறன்ரோவில் நடைபெறும் சர்வதேச திரைப்படவிழாவில இம்முறை மணிரத்தினம்கௌரவிக்கப் படுகிறார். இந்த திரைப்பட விழாவில் கலந்து கொள்ள மணி ரத்தினம் கனடா வருகிறார்.

19வது ரொறன்ரோ திரைப்பட விழாவில் தேசிய சினிமா பகுதியில் இம்முறை இந்தியத் திரைப்படங்கள் பிரதான இடத்தைப் பெறுகின்றன. 'இந்தியா இப்போது' என்ற பகுதியில் இந்தியாவின் கலை, விவரண, வர்த்தக திரைப்படங்கள் திரையிடப்படுகின்றன. இந்திய சம்பல் பள்ளத்தாக்கின் கொள்ளைக் காரியான பூலான் தேவியின் வரலாற்றை மையமாகக் கொண்ட 'கொள்ளைக்கார ராணி' என்ற படம் சமீபத்தில் கான்ஸ் பட விழாவில் திரையிடப்பட்டிருந்தது. இந்தப் படம் வட அமெரிக்காவில் முதல் முறையாக ரொறன்ரோவில் திரையிடப் படுகிறது. சர்வதேச விருதுகள் பெற்ற இஸ்மாயில் மேர்ச்சண்ட், அடூர் கோபாலகிருஷ்ணன், ஆனந்த் பத்வர்தன், கௌதம் கோஸ் ஆகியோரின் படங்களும் இடம் பெறுகின்றன. அத்துடன் பழைய இந்தியப் படங்களும் திரையிடப் படுகின்றன. இந்தியா உலகில் அதிகமான திரைப்படங்களைத் தயாரிக்கும் நாடு என்பதை இந்த திரைப்பட விழா கௌரவிக்கிறது.

இம்முறை அப்பாஸின் பாஸிகார், சேகர் கபூரின் கொள்ளைக் கார ராணி, குமார் சகானியின் பவந்தரண, திலிப் கோஷின் வெள்ளித்திரையின் குழந்தைகள், ஜில் மிஸ்கிட்டாவின் கிளப் ட்ரப், சுதிர் மிஷ்ராவின் தராவி, ராஜா மித்ராவின் எக்தி ஜிபான், தேவ் பெனகலின் இங்கிலிஷ் ஆகஸ்ட், ஆனந்த் பத்வர்தனின் தந்தை, மகன், புனித யுத்தம், றியாட் வாடியாவின் ஹன்ரர்வாலியின் கதை, வாசுதேவன் நாயரின் ஃபெரி, இஸ்மாயில் மேர்ச்சண்டின் தடுப்புக்காவலில், கௌதம் கோஷின் பட்டம், கே.பி. சசியின் இலைகளும் முட்களும், ஜி. அரவிந்தனின் முகமுடி, கேதன் மேத்தாவின் ஓ டார்லிங், திஸ் இஸ் இந்தியா, புத்ததேவ் தாஸ்குப்தாவின் இறக்கைகளின் சரணாலயம், நபியெந்துசட்டர்ஜியின் சில்பி, முரளி நாயரின் இந்திய விவசாயியின் துயரம் போன்ற படங்கள் இதுவரை ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளன.

இந்த திரைப்படவிழாவில் மணி ரத்தினமும் கலந்து கொள்வார். மணி ரத்தினத்தின் பதினொரு படங்களில் இரு படங்கள் ஆஸ்கார் விருதுப் போட்டிக்கு சென்றவை. அவரது பம்பாய், திருடா திருடா, ரோஜா, நாயகன், மௌனராகம் ஆகிய படங்கள் விழாவில் திரையிடப்படும்.
இந்த திரைப்பட விழா செப்டம்பர் 8 முதல் 17 வரை நடைபெறும்.


**புனித கென்றி அரசர் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா வருடாந்த பேச்சுப் போட்டிகள்**

*7 வயது, 10 வயது, 13 வயது, 16 வயது இற்கு உட்பட்டவர்க்கானது*

1395 WILLIAM SPORT DR (DIXES & BLOOR)

*28 ஆவணி 94 காலை 9.30 மணி*

போட்டிகளில் கலந்து வெற்றி பெறுவர்களிற்கு 17 புரட்டாதி 94ல் நடை பெற உள்ள இளமாலை 94ல் பரிசுகள் வழங்கப்படுவதுடன் முதலாவது இடத்தைப் பெறுபவர்கள் பேசுவதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்படும்

மேலதிக தொடர்புகளுக்கு

ஜெயா 625-3072 ராஜன்- 790-7534 சந்திரா- 405-8107

செல்வரட்ணம் 615-1281




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தமிழீழ தேசியத் தலைவர் அமரர் த
செயலதிபர் அமரர் குட்டிமணி அவர்களுக்கும் வெலிக்கடையில்


# 11வது ஆண்டு நி

(25 யூலை

## முதல் இயக்கத்தின் மூத்த தலைவர்களே! தமிழீழ விடுதலைப் போ

1981ம் ஆண்டு ஏப்ரல் 5 இல், இன்னும் ஐந்து ஆண்டுகளில் தமிழ் ஈழ மீட்பு என்ற நம்பிக்கை
இந்தியா செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட [illegible]திற்காக காத்திருந்த போது, தமிழினத்தின் கோட
கைதாகி ஆனையிறவு, பனாகொடை இராணுவ முகாம்களில் மிகக் கொடுமையான சித்திரவதைகளு
கூடிய தனிமைச் சிறையில் 841வது நாளாக அடைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில்
**உங்கள் தலைமைத்துவம் தமிழீழ விடுதலைக்கு வழிவகுக்கும்** என்பதை உணர்ந்து கொண
வெளிநாடு ஒன்றில் குடும்பத்தவர்களுடன் வாழ வசதிகள் செய்து தரப்படும் என்று பேரம் பே

உங்களது உயிரினும் மேலான இலட்சியத்தை கைவிட நீங்கள் மறுத்ததனல், 1983 யூலை
நூற்றுக்கணக்கான சிங்களக் காடையர்கள் ஆடிய வெறியாட்டத்தில் நிராயுதபாணிகளாக நின்ற
வீசப்பட்டன.



## தேசபிதா தங்கத்துரை

வெலிக்கடை விலங்கொடிக்க- தமிழ்
விஷ விதை விதைக்கும் விடுதலைத் து
திருநெல்வேலியினிலே நிலக்கண்ணி
நிர்க்கதியாகினர் நம் தமிழர்

தமிழ் ஈழ மக்களின் சுதந்திர
ஈடிணையற்ற தியாக
உங்களுக்கு
வெலிக்கடையில் படுகொலை செய்ய
நடேசுதாசன், சிவபாதம், ஸ்ரீ
53 விடுதலைப் போராளி
எமது வீரவணக்க

'நாம் வன்முறை மீது கா
மனநோயாளிகள்
ஸ்ரீலங்கா மேல்நீதிமன்றத்

தண்ணீர்க் கடலில் மிதக்கும் தீவு
கண்ணீர்க் கடலில் மிதக்கிறது
தங்கத்துரையைச் சிறையில் கொன்றார்

…மரார் தங்கத்துரை அவர்களுக்கும்,
…டையில் படுகொலை செய்யப்பட்ட அனைத்துப் போராளிகளுக்கும்!

# … நினைவு அஞ்சலி

## …யூலை 94)

### …ப் போராட்டத்தின் உந்துசக்திகளே!

… நம்பிக்கையுடனும், அதற்கான மிகப் பெரிய திட்டங்களுடனும் மணற்காட்டுக் கடற்கரையில் …தின் கோடரிக் காம்புகளான நன்றி கெட்ட நம்பிக்கைத் துரோகிகளால் காட்டிக் கொடுக்கப்பட்டு …ரிவதைகளுக்குட்படுத்தப்பட்டு மரணதண்டனை, ஆயுட்தண்டனைக் கைதிகளாக பட்டினியுடன் …ல்


…து கொண்ட ஸ்ரீலங்கா அரசு, ஈழப் போராட்டத்தை கைவிடச் சம்மதித்தால் இலங்கை தவிர்ந்த … பேசும் பேசவும்,

…1983 யூலை 25 அன்று அரசின் உயர்பாதுகாப்புச் சிறையில் ஏவி விடப்பட்ட ஆயுதந் தாங்கிய …ளாக) நின்ற உங்கள் கண்கள் தோண்டப்பட்டு உடல்கள் சிதைக்கப்பட்டு புத்தனின் காலடியில்

– தமிழ் வீரர் குழாம் விரைகையிலே
…தலைத் துரோகிகள் வீரசாகசமெனத்
…கண்ணி வெடி வெடிக்க வைத்ததனால்

… சுதந்திரத்திற்கு வித்திட்ட
…தியாக தீபங்களே!
…களுக்கும்
… செய்யப்பட்ட ஜெகன், தேவன்,
…தும், ஸ்ரீகுமார் உள்ளிட்ட
… போராளிகளுக்கும்
…ரவணக்கங்கள்!

… மீது காதல் கொண்ட
…ாளிகள் அல்ல'
…திமன்றத்தில் தலைவர் தங்கத்துரை



**தளபதி குட்டிமணி**

மண்ணை வாங்கக் கண்ணைத் தந்தான்
மன்னவன் எங்கள் குட்டிமணி
அன்னவன் பெயரால் ஆணை இடுவோம்
தொடரும் நாங்கள் தொட்ட பணி

TELO

# …டுதலை இயக்கம்

www.tamilarangam.net தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்



## சுழலும் உலகம்

# இஸ்ரேல்: சமாதானமும் "போரும்"

**தி.உமாகாந்தன்**

சமீபகால உலக அசைவுகளில் சமாதானம் நோக்கிய நகர்வுகள் பல ஏற்பட்டுள்ளன. இத்தகைய நகர்வுகள் மக்கள் மனங்களில் போர் அபாயம் குறித்த பீதியை நீக்கி அமைதி குறித்த நம்பிக்கையை விதைக்க ஆரம்பித்திருப்பதும் உண்மை. ஆனால் சமாதானத்தின் பகைவர்களைத் தகர்த்து அமைதியை அடைவது என்பது இலகுவான விடயமல்ல. உதாரணமாக சர்வதேச நிர்ப்பந்தத்தின் காரணமாக இஸ்ரேலும் தமது மக்களின் எதிர்காலத்திற்கு எஞ்சியிருக்கும் ஒரே வழி என்பதனால் காஸா மற்றும் ஜெரிக்கோ பிரதேசங்களில் பாலஸ்தீன மக்கள் மட்டுப்படுத்தப்பட்ட உரிமைகளுடன் வாழும் ஒரு ஒப்பந்தத்தை மேற்கொண்டன. தொடரும் பேச்சுவார்த்தைகள் மூலம் இப்பிரதேசங்களிலிருந்து இஸ்ரேல் இராணுவ விலகல், பாலஸ்தீன பொலிசார் பொறுப்பேற்றல், பாலஸ்தீன அதிகாரிகள் நிர்வாக பொறுப்புக்களை ஏற்றல் என்பவை மாத்திரமல்ல இத்தகைய நிலையை இஸ்ரேலில் ஆக்கிரமிக்கப்பட்ட இதர பகுதிகளிலும் மேற்கொள்ளும் முயற்சிகள் நடைபெறுகின்றன.

ஆனால் இந்நிலையில் இஸ்ரேலின் முன்னணி அரசியல்வாதிகளில் ஒருவரான அரியல் சரோன் விடுத்திருக்கும் அறிக்கையானது அவரைச் சமாதானத்தின் பகைவராகவே காட்டியுள்ளது. கடந்த காலங்களில் ஒரு மோசமான போர் வெறியனாகவும், பாலஸ்தீன மக்களின் எதிரியாகவும் வர்ணிக்கப்பட்ட சரோன் மீண்டும் தனது விஷக் கருத்துக்களை விதைக்க ஆரம்பித்துள்ளார். தீவிர வலதுசாரி அரசியல் வாதியான சரோன் சமீபத்தில் அளித்த பத்திரிகைப் பேட்டியொன்றில் பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவரான யசீர் அரபாத்தை இதுவரை இஸ்ரேல் கொலை செய்யாததையிட்டு தான் மிகுந்த கவலையடைவதாகக் கூறியுள்ளார். கடந்த 25 வருடங்களாக இஸ்ரேலின் முதன்மையான எதிரி என வர்ணிக்கப்பட்டு வருபவர் யசீர் அரபாத், சமீபத்திய சமாதான ஒப்பந்தம் குறித்து பெரும்பான்மையான இஸ்ரேலிய மக்கள் அதிருப்தியும் யசீர் அரபாத் குறித்து அசௌகரியமும் அடைந்திருக்கும் இந்நிலையில் மக்களின் ஆதரவை பெற்றுக் கொள்வதே சரோனின் இந்தப் பேட்டியின் அர்த்தம் எனக் கருதப்படுகிறது.

லெபனானில் இஸ்ரேல் இராணுவம் பிரவேசம் செய்து 12 வருடங்கள் ஆகிவிட்ட இப்போது இந்த இராணுவத்தலையீட்டின் மூலகர்த்தவாகிய சரோன் தமது பேட்டியில் அரபாத் ஒரு போர்க் குற்றவாளி (WAR CRIMINAL) எனக் கூறியுள்ளார். 1982ம் ஆண்டு இஸ்ரேல் இராணுவம் லெபனானில் பிரவேசித்ததையும் பெய்ருத்தை ஆக்கிரமித்ததையும் இப்போதும் நியாயப்படுத்தி வரும் சரோன் தமது பேட்டியில் லெபனானில் இஸ்ரேல் இராணுவம் பிரவேசித்தபோது அரபாத்தை கொலை செய்வதற்கான முயற்சிகள் இஸ்ரேலால் மேற்கொள்ளப்பட்டன என்றும் ஆனால் அமெரிக்காவின் அழுத்தத்தினாலேயே இம்முயற்சிகள் கைவிடப்பட்டன என்றும் அதைத் தொடர்ந்தே அரபாத்தும் அவரது அமைப்பினரும் பெய்ருத்தை விட்டு வெளியேறினர் என்றும் கூறியுள்ளார். இந்த வெளியேற்றம் ஒரு ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டது எனக் கூறியுள்ளார். இந்தக் காரணங்களினாலேயே அரபாத்தை எங்களால் கொல்ல முடியாமல் போனது என சரோன் தமது பேட்டியில் குறிப்பிட்டுள்ளார். 'எல்லா இஸ்ரேல் அரசாங்கங்களும் அவை இடது ஆக இருந்தாலென்ன வலதுசாரி ஆக இருந்தாலென்ன அந்த மனிதனை கொல்வதற்காக பலத்த முயற்சிகளை எடுத்தன. ஏனெனில் அவர் ஒரு போர்க்குற்றவாளி. ஆனால் வருத்தத்துக்குரிய முறையில் இந்த முயற்சியில் யாராலுமே வெற்றியடைய முடியவில்லை."

சரோன் முன்னர் ஒரு இராணுவத் தளபதியாக இருந்தவர் பின்னர் இஸ்ரேலின் பாதுகாப்பமைச்சராகப் பதவி வகித்தவர். இவர் எப்போதுமே சர்ச்சைக்குரியவராகவே திகழ்ந்தவர். இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனப் பிரதேசங்களில் திட்டமிட்ட இஸ்ரேலிய குடியேற்றங்களை அமைப்பதன் தீவிர ஆதரவாளர். மேற்குக்கரைப் பிரதேசம் இஸ்ரேலுடன் இணைக்கப்படவேண்டும் என்பதன் தீவிர ஆதரவாளர். அதேசமயம் சமீபத்தில் இஸ்ரேலுக்கும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்துக்குமிடையில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் தீவிர எதிர்ப்பாளர். இந்தப்பேட்டி யின் போது பாலஸ்தீன விடுதலை இயக்கத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது அவர் பயங்கரவாதிகள் என்றே கூறுகிறார் 'ஜெருசலம் போஸ்ற்' பத்திரிகைக்கு அளித்த இந்தப் பேட்டியில பயங்கரவாதிகள் என்ற சொல்லை 12 தரம் பிரயோகித்துள்ளார். சமீபத்தில் கெய்ரோவில் இஸ்ரேலுக்கும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கு மிடையில்மேற்கொள்ளப்பட்ட அடுத்த கட்ட ஒப்பந்தத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது "எந்தச் சரியான காரணங்களுமே இல்லாமல் ஒரு வெற்றிகரமான தேசமான இஸ்ரேலின் பலவீனமான யூத அரசாங்கம் ஒரு பயங்கரவாத இயக்கமான பாலஸ்தீன விடுதலை இயக்கத்திடம் சரணாகதி அடைந்துள்ளது" என்கிறார்.

"அரசாங்கம் ஒரு பயங்கரவாத பாலஸ்தீன அரசை ஸ்தாபித்திருக்கிறது" என விசம் கக்கும் சரோன் தற்போதைய இஸ்ரேல் அரசை முன்னைய இஸ்ரேல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net 

அரசுகளுடன் ஒப்பிடும் போது முன்னைய இஸ்ரேல் அரசுகள் அயலிலுள்ள அராபிய நாடுகளுடன் மேற்கொண்ட போர்களில் வெற்றி பெற்றன என்றும் பெய்ருத்திலிருந்து பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை விரட்டுவதிலும் வெற்றி பெற்றன என்றும் கூறியதுடன் தற்போதைய இஸ்ரேல் அரசோ தோல்வியின் மறுவடிவம் என்றும் வர்ணித்துள்ளார். சமாதான ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களை பாதுகாப்பு என்ற போர்வையில் நிகழ்த்தப்பட்ட சரணாகதி என வர்ணிக்கும் சரோன் பலம் வாய்ந்த இராணுவத்தினால் மாத்திரமே இனிமேல் இஸ்ரேலை பாதுகாக்க முடியும் என்றும் கூறுகிறார்.

66 வயதுடைய சரோன் கடந்த மாதம் தான் பிரதம மந்திரிப் பதவிக்கு போட்டியிடப் போவதாக அறிவித்திருந்தார். ஒரு முக்கிய வேட்பாளராக இதர கட்சிகளால் கருதப்படாத போதும் சரோன் சார்ந்திருக்கும் லிக்குட் கட்சித் தலைவர் பின்யாமின் நெற்றன்யகுவை இவ்வறிவிப்பு சற்று அதிர்ச்சி யடையத்தான் செய்திருக்கிறது. ஆனால் சரோன் மட்டுமல்ல மேலும் பல இஸ்ரேலியத் தலைவர்கள், இஸ்ரேலிய உளவுப் பிரிவான 'மொசாட்' பல தடவைகள் அரபாத்தை கொலை செய்யும் சந்தர்ப்பத்தை நெருங்கியிருந்தது என்பதை ஏற்றுக் கொள்கின்றனர். இஸ்ரேலிய உளவுப் பிரிவு பற்றிய நூலான 'IN EVERY SPY A PRINCE' எனும் நூலில் டான் ராவிவ்வும் யோசி மெல்மானும் இதுபற்றிக் குறிப்பிடுகையில் பெய்ருத்தை விட்டு அரபாத் வெளியேறும்போது இஸ்ரேலிய ஸ்னைப்பர்கள் அவரைக்குறிபார்த்துக் கொண்டே இருந்தன என்றும் ஆனால் அரபாத்தைக் கொலை செய்வது என்பது அரசியல் ரீதியாக ஒரு புத்திசாலித்தனமான செயல் இல்லை என்பதாலேயே அந்த முயற்சி கைவிடப்பட்டது எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

அரபாத்தின் மீது இஸ்ரேல் கொண்ட கொலை நோக்கில் மாற்றம் ஏற்பட்டிருந்தாலும் லெபனானில் இஸ்ரேல் மேற்கொள்ளும் பாய்ச்சல் தொடர்கிறது. இது சரோன் போன்ற போர் வெறியர்களுக்கு அடிக்கடி தீனி போடும் நடவடிக்கையாகவும் அமைகிறது. லெபனானில் நிலை கொண்டிருக்கும் ஹிஸ்புல்லா என்றழைக்கப்படும் இஸ்லாமியத் தீவிரவாத அமைப்பைக் காரணம் காட்டி லெபனானின் தென்பகுதியை ஆக்கிரமித்திருக்கும் இஸ்ரேலிய ராணுவம் நடத்தும் விமானத் தாக்குதல்கள் லெபனான் மக்களை கிலி கொள்ள வைத்துள்ளன. சமீபத்தில் இஸ்ரேல் மேற்கொண்ட விமானத்தாக்குதல்களில் 26 ஹிஸ்புல்லா உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளனர் இதற்கான பழிவாங்கல் நடவடிக்கைகளில் தாம் ஈடுபடுவோமென ஹிஸ்புல்லா அமைப்பு அறிவித்துள்ளது. ஆயிரக்கணக்கான லெபனான் பிரஜைகள் இத்தகைய தாக்குதல்களால் அச்சம் கொண்டு தலை நகரான பெய்ருத்தை நோக்கி விரைகின்றனர் இஸ்ரேலின் புதிய விமானத் தாக்குதல்களிலிருந்தும், கனரக ஆயுதத்தாக்குதல்களிலிருந்தும் தப்பித்துக் கொள்ளவே இந்த மக்கள் தமது கிராமங்களை விட்டு பெய்ருத்தை நோக்கி ஓடுகிறார்கள். அதேசமயம் இஸ்ரேலின் வட பகுதியில் ஹிஸ்புல்லாவின் பதிலடித் தாக்குதல்களுக்குப் பயந்து ஆயிரக்கணக்கான இஸ்ரேலியர்கள் பங்கர்களுக்குள் படுத்து உறங்குகின்றனர்.

லெபனானின் கிழக்குப் பகுதியில் உள்ளதும் சிரியாவின் எல்லையில் உள்ளதுமான பெக்கா பள்ளத்தாக்கில் அமைந்திருந்த ஹிஸ்புல்லா பயிற்சி முகாமின்மீது இஸ்ரேல் நடத்திய விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட ஹிஸ்புல்லா உறுப்பினர்களுக்காக ஒரு நாள் துக்க பிரகடனம் செய்து அஞ்சலி செலுத்திய லெபனான் அரசு தனது 47 ஆயிரம் துருப்புக்களைத் தயார் நிலையிலும் வைத்துள்ளது. ஆனால் இஸ்ரேலிய இராணுவமும் அரசியல்வாதிகளும் தற்போதைக்கு இஸ்ரேல் இராணுவ நடவடிக்கை எதையும் மேற்கொள்ளாது என்று அறிவித்துள்ளனர். ஆனால் தேவை ஏற்பட்டால் ஹிஸ்புல்லா மீதும் சிரியாமீதும் இஸ்ரேல் தாக்குதலை நடத்தும் எனவும் அறிவித்துள்ளன.

## கம்பியூட்டர்...

எங்கே என்று தெரியாமல் இருந்தால் எப்படி Dosல் அறிந்திருக்க வேண்டிய முக்கிய விஷயங்களை அவ்வப்போது எழுதுவேன்.

பின்னேரம் 2 மணி டீவியில் நல்ல படம் (word perfect) போகிறது. பக்கத்து வீட்டு லோசனா (Louts) பள்ளிக்கூடத்தால் வரும் சமயம். முன்வீட்டு பிந்தியா (page maker) கிணற்றடியில் குளிக்கும் நேரம். மூன்றில் ஒரு விஷயத்தையும் தவறவிடாது அப்படியே முழுசாகப் பார்த்தே ஆக வேண்டும். அதற்கு ஒரே வழி WiNDOWS தான். எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் திறந்து வைத்துவிட்டு பார்த்து கொண்டிருக்கலாம். பார்க்கலாம், ஆனால் ஒரு நேரத்தில் ஒன்றில் மட்டும்தான் கைபோட முடியும். கம்பியூட்டரை உபயோகித்து தமிழில் விளம்பரம் ஒன்றை page maker பாவித்து எழுதுகிறீர்கள் என கற்பனை செய்து கொள்க, மூலையிலே வாழை மரம் ஒன்றை வரைந்தால் வடிவாக இருக்கும் என நினைக்கிறீர்கள். வாழை மரம் வேறு ஒரு application (Corel draw) ஐ திறந்துதான் பெறப்பட வேண்டியிருந்தால்.. எழுதிய விளம்பரம் அப்படியே இருக்க பக்கத்தில் வாழை மரம் உள்ள application ஐ திறந்து அதைப் பிரதி பண்ணிக் கொள்ளலாம். இந்த வசதி தனித்து இயங்கும் Dos ல் கிடையாது. ஒன்றை திறந்தால் அதை மூடிவிட்டுத்தான் மற்றத்தைத் திறக்கலாம் என்ற கட்டுப்பாடு. இதற்கும் சில விதிவிலக்குகள் உண்டு Windows என்ற மேடையை அமைத்துக் கொள்வதனால் உள்ள நன்மைகள் பல. அவற்றைப் பட்டியலாக்கினால் ஆரம்ப நிலையில் உள்ளவர்களுக்கு அலுப்புத் தட்டும் என்பதனால் அதைப் பிற்போடுகிறேன். இந்த Windows க் குரிய பல இயல்புகளையும் OS/2 என்ற operating system கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

கம்பியூட்டர் என்பது சிந்திக்ககூடிய உயிரினம். அல்ல, இப்படிச் செய்' என்று முதலிலே சொல்லிக் கொடுத்ததை program பண்ணியதை அது செய்யும், 'மூன்றையும் இரண்டையும் கூட்டினால் எட்டு' என்று சொல்லிக் கொடுத்தால் 'இல்லை நீங்க தப்பாய் சொல்லுறீங்க' என்று கம்பியூட்டர் திருப்பிச் சொல்லாது. நீங்கள் சொன்னதை அப்படியே கேட்கும். operating system என நான் குறிப்பிட்டேனே அது கம்பியூட்டரின் ஆரம்பப் பள்ளிக்கூட ஆசான் போன்றது. சுய மூளை இல்லாமல் கம்பியூட்டர் எப்படி

31ம் பக்கம் பார்க்க..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net
தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்

# இனக்கலவரங்கள் அரசியல் கரும்பா?
## 1983 இனக்கலவரமும் அதன் பின்விளைவுகளும்

**-நேசன்-**

*விடுதலைப் புலிகள் திருநெல்வேலியில் இராணுவ தொடரைத் தாக்கும் போது அதன் விளைவு இவ்வாறான ஓர் விளைவைக் கொண்டு வரும் என எடைபோட்டிருக்க நியாயமில்லை எவ்வாறாயினும் கலவரம் அவர்களுக்கும் ஏனையோர்க்கும் ஆள் சேர்க்கும் அறுவடையாக அமைந்தது. இக்கலவரத்தின் சூத்திரகாரிகளாக இனவெறியர்களாக இருந்த ஒரு பகுதியினராகிய சிங்களவரைப் பொறுத்தவரை இது தற்செயலாக எழுந்த ஓர் கலவரம் அல்ல மாறாக அது ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த காரியம் அக் காரியத்தை நிறைவேற்ற விடுதலைப் புலிகள் உதவி செய்தார்கள் என்பதே உண்மை.*

1983ம் ஆண்டு இனக்கலவரம் இடம் பெற்று இத்துடன் 11 வருடகாலம் பூர்த்தியாகிவிட்டது. தமிழர்களுக்கு எதிராக திட்டமிட்டு நடத்தப்பட்ட இக் கலவரம் அன்றிலிருந்து இன்றுவரை பல்லாயிரக்கணக்கான மக்களின் வாழ்வில் நிலையான மனப்பதிவுகளை மட்டுமன்றி இம்மக்களின் தனி மனித வாழ்விலும் பல்வேறு மாற்றங்களையும் ஏற்படுத்திவிட்டது. இம் மாற்றங்கள் இன்று வரை தொடர்ந்து கொண்டும் இருக்கின்றது. உயிர்களை இழந்தவர்களாக, உடமைகளை இழந்தவர்களாக, பிறந்த இடத்தையும் சூழலையும் இழந்தவர்களாக... இவை இனைத்துக்கும் மேலாக தமிழர்கள் என எம்மைப் போற்றி புகழும் பெருமையையும் இழந்தவர்களாக, அரசியல் கலாச்சார அநாதைகளாக உலகெங்கும் வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம்.

இலங்கைத் தமிழர்களது உரிமைப் போராட்டமானது 1983 ஆண்டுகளுக்கு முன்னரே முனைப்பை நோக்கி வன்முறை ரீதியில் வளர்ந்து வந்திருப்பினும் 83 ஆண்டிற்குப்பின் அது கூர்மையுடன் வளர்ந்தது. இக் கட்டுரையின் நோக்கம் வெறுமனே 83 ம் ஆண்டுக் கலவரத்தை நினைத்து வருந்தி எழுதிக் கொள்வது அல்ல.. மாறாக 83 ம் ஆண்டு கலவரத்தின் தாக்கம், அதன் விளைவுகள், அவ்விளைவுகளினால் ஏற்பட்ட பின் விளைவுகளைப் பற்றி சில கேள்விகளை முன்வைப்பதே.

1983ம் ஆண்டு கலவரத்தை பற்றி சிந்திக்கும் போது எம்முன்னே பல்வேறு கேள்விகள் எழும். எம்மில் பலரும் அந்நாட்களின் பயங்கர அனுபவங்களை எம்முள் சுமந்து இருக்கிறோம். பலரும் தமக்கேற்பட்ட அனுபவங்களை கணத்திற்கு கணம் நினைத்து கதைகளாக கூறலாம் அந்நாட்களில் குடாநாடு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் வாழ்ந்து கலவரத்திற்கு முகம்கொடுத்த அரசியல் பேசாத தமிழர்களுக்கு இக்கலவரம் மிகுந்த பயங்கரத்தைத் தந்தது. அப்போது அவர்களுக்கு எழுந்த கேள்வியெல்லாம் எமக்கு ஏன் இது நடக்கவேண்டும்? என்பதே. எம்மை உயிருடன் எரிப்பதற்கும், எமது உடமைகளையும் அளிப்பதற்கும் நான் செய்த குற்றம் தான் என்ன? என்பதே. அவர்களது இந்த வஞ்சகமற்ற கேள்விகளுக்கு பதில் இருந்தது. கலவரத்தை முன்னின்று நடத்திய, சிங்களம் பேசிய, அனைத்து காடையர்களும் மறைமுகமாக கொடுத்த பதில் 'நீ பறத் தமிழன்" என்பதே. இது மிகச் சிக்கலற்ற கேள்வியும் சிக்கலற்ற பதிலுமாகும். அதாவது தமிழனாக பிறந்திருந்தால் அவன் அனைத்து சிங்களர்களாலும் எதிரியாக கருதப்பட்டு அழிக்கப்படுவான் என்பதே அதன் பொருளாகியது. இக்கேள்வியும் அதற்கான விடையும் மிகவும் நேரடியாகவும், சிக்கலற்றும், எளிமையாயும் இருப்பினும் அதன் உணர்ச்சி வீச்சும், அனுபவமும் தமிழர் வாழ்விலும், அவர் எதிர்காலத்தில் ஓர் மைல் கல்லாக, திருப்பு முனையாக அமைந்துவிட்டது.

விடுதலைப் புலிகள் திருநெல்வேலியில் இராணுவ தொடரைத் தாக்கும் போது அதன் விளைவு இவ்வாறான ஓர் விளைவைக் கொண்டு வரும் என எடைபோட்டிருக்க நியாயமில்லை எவ்வாறாயினும் கலவரம் அவர்களுக்கும் ஏனையோர்க்கும் ஆள் சேர்க்கும் அறுவடையாக அமைந்தது. இக்கலவரத்தின் சூத்திரகாரிகளாக இனவெறியர்களாக இருந்த ஒரு பகுதியினராகிய சிங்களவரைப் பொறுத்தவரை இது தற்செயலாக எழுந்த ஓர் கலவரம் அல்ல மாறாக அது ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த காரியம் அக் காரியத்தை நிறைவேற்ற விடுதலைப் புலிகள் உதவி செய்தார்கள் என்பதே உண்மை.

இக் கலவரத்தில் அப்பாவிப் பொதுமக்கள் அடிபட்டு நொந்துபோனார்கள் என்பது ஒருபுறம் இருக்க இசம்பவத்தினால் அரசியல் பலம் பெற்றவர்களும், அரசியல் லாபம் பெற்றவர்களும் அரசியல் அதிகாரம் பெற்றவர்களும் அதிகம் இருந்தார்கள் இச்சம்பவம் இந்தியாவைப் பொறுத்தவரை இலங்கையில் விவகாரங்களில் நேரடியாக தலையிட வாய்ப்பைக் கொடுத்துதவியது. இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்த வரை தம்மின அரசியல் எதிரிகளான ஜேவிபியினரை சட்டரீதியான தடை செய்து வேட்டையாட முடிந்தது. தமிழ் அரசியல்வாதிகளைப் பொறுத்தவரையும் தமிழ் இயக்கங்களைப் பொறுத்தவரையும் இக்கலவரத்தின் விளைவு வித்தியாசமாக இருந்தது.

அதுவரைகாலமும் தமிழர் கூட்டணியின் தமிழ் ஈழம் என்ற கோரிக்கையை நிராகரித்த, பிரிவினைவாதத்தை ஏற்க மறுத்த பல தமிழர்கள் இக்கலவரத்தின் நேரடிப்பாதிப்பு அழுத்தம் என்பனவற்றால் விரும்பியோ விரும்பாமலோ கூட்டணியின் நிலைப்பாட்டை ஏற்றனர். அவர்களில் பலர் வெளிநாடுகளுக்கு சென்று தமிழீழப் போராட்டத்தை கள அனுபவம் இன்றி முடுக்கி விடத் தொடங்கினர். வேறுசிலர் அகதிகளாக வெளிநாடு சென்று மௌனிகளாயினர் இன்னும் சிலர் குறிப்பாக தமிழ் இளைஞர் யாழ்ப்பாணம் சென்று புதிய இயக்கங்களைத் தொடங்கவும் அல்லது பழைய இயக்கங்களில் சேரவும் தொடங்கினர். இக்காலகட்டத்தில் அதுவரை காலமும் கூட்டணியினால் கடைப்பிடிக்கப்பட்ட அகிம்சைப் போராட்டம் என்ற ஏதோ ஒன்றுக்கு மவுசு குறைந்து ஆயுதம் போராட்டத்தின் மரியாதை வளரத் தொடங்கியது. இதைத்தான் இக்கட்டுரையின் ஆரம்பத்தில் தமிழர் வாழ்வின் ஓர் மைல்கல் அல்லது திருப்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


முறை எனக் குறிப்பிட்டேன்.

இங்கு எமக்கு எழும் கேள்வி என்னவெனின் 1983ம் ஆண்டு கலவரத்திற்கும்தமிழர் மத்தியில்பெரிய அளவிலான இராணுவரீதியான முஸ்தீபுக்கும் உள்ள தொடர்பு என்ன? மலையகத்தமிழ் மக்களும் இக்கலவரத்தில் பாதிக்கப்பட்ட போதும் அவர்களின் பெரும்பான்மையோர் தமிழ் ஈழகோரிக்கையை இன்றுவரை ஏற்காததும் அவர்களின் இராணுவ போராட்டத்தில்சேராததன் காரணமும் தான் என்ன? ஏன் ஈழத்தமிழருக்கு ஈழத்திலும், இராணுவ முஸ்தீபில் இருந்த ஆர்வமும், அவசரமும் மலையகத்தமிழருக்கு இருக்கவில்லை? இதற்கு ஒரு காரணம் பூகோளரீதியில் அவர்கள் சிங்களப்பகுதியின் நடுவில் வாழ்ந்தால் அவர்களால் அவ்வாறான இலட்சியங்களில் ஈடுபடமுடியவில்லை எனக்கூறப்பட்டது. அவ்வாறாயின் ஏன் அவர்களால் கலவரத்தின் பின் இலட்சக்கணக்கில் ஈழத்தமிழ் வெளிநாடுகளுக்கு அகதிகளாக இடம் பெயர்ந்து சென்றது போல், வட கிழக்கிற்கோ சென்றுதமிழ்ஈழத்திற்காக ஆயுதப் போராட்டத்தில் இறங்க முடியவில்லை என்ற கேள்வி ஏற்படும். இதற்கான விடைகள் வெளிப்படையாக இல்லை எனினும் 83ம் ஆண்டுக்கலவரம் பெரும்பாலான மலையக தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஈழ ஆயுதப்போராட்ட உந்து வரிசையாக இருக்கவில்லை. இது ஓர் யதார்த்த வெளிப்பாடு.

இதையடுத்து எழும் இரண்டாவது கேள்வி.. 83ம் ஆண்டு கலவரம் ஈழ போராட்டத்தின் முக்கிய உந்துவிசையாக அமையின் ஏன் இலட்சக்கணக்கில் மலையகத்தமிழர் அல்லாத தமிழர் வெளிநாடுகளுக்கு செல்ல வேண்டும் எனவும், ஏன் அவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஈழத்தில் நின்று அதற்காக போராடவில்லை என்ற கேள்வி எழும். இதைவிட இன்னுமொரு முக்கிய கேள்வி எது எனில், இன்று வெளிநாடுகளில் வாழும் ஈழத்தமிழர் அனைவரும் வடகிழக்கு மாகாணங் களிலே குடியிருந்திருந்தால் இன்று ஈழப்போராட்டத்தின் நிலைப்பாடு எவ்வாறு இருந்திருக்கும்? என்ற கேள்வியும் உண்டு. இவ்வாறான கேள்விகளுக்கு விடைகள் நாம் காண முனைவோமாயின் தமிழீழப் போராட்டத்தின் வரலாற்றிற்கும் 83ம் ஆண்டு இனக்கலவரத்திற்கும் உள்ள தொடர்பின் அர்த்தங்களைப் புரிய முனைய உதவும்.

1983 ஆண்டு கலவரம் பல தமிழ் மக்களைப் பொறுத்தவரை என்றுமே மறக்க முடியாத பயங்கர அனுபவமாக இருப்பினும் அது தமிழ், சிங்கள அரசியல் வாதிகளின் இராணுவச் சிந்தனையின் ஓர் தர்க்க வெளிப்பாடாகவே அமைந்தது. தமிழரசுக்கட்சி கூட்டணி வரலாற்றில் இனக்கலவரம் என்பது அரசியல் கரும்பாக விளங்கியது. சிங்கள இனவாத அரசியல்வாதிகளைப் பொறுத்தவரை ஓர் அரசியல் இராணுவ தந்திர உபாயமாக விளங்கியது. அதாவது தமிழரை இருக்க வேண்டிய இடத்தில் இருக்க வைக்க முயலும் ஓர் வெருட்டும் ஆயுதமாகப் பாவிக்கப்பட்டது. 1958ம் ஆண்டு இனக் கலவரம் தமிழரசுக்கட்சியின் இருப்பைத் தமிழர் மத்தியில் ஆழமாக நிலைபெறச்செய்ய நீண்டகாலம் உதவி செய்தது. 1960-77 ஆண்டு காலப்பகுதிகளில்பல்வேறு தேர்தல்கால மேடைப்பிரசங்கங்களில் அவர்கள் 1958ம் ஆண்டு கால அனுபவங்களை மீண்டும் மீண்டும் தமிழ் மக்களுக்குக் கூறி அவர்களை உரு ஏற்றிவந்தனர். அதே வேளை இவர்கள் எதற்காக பாராளுமன்றம் செல்ல வேண்டும் என வோட்டு கேட்டார்களோ அதற்கும் அவர்களது பாராளுமன்ற நடத்தைக்கும் சம்பந்தமில்லாது வாழ்ந்து வந்தார்கள் 1970களின் ஆரம்பகாலத்தில் திருகோணமலை தமிழரசுக்கட்சி மேடைப் பிரசங்கங்களின் நேமி வந்தால் ஆமி நடுங்கும் என்று திரு. நேமிநாதனுக்கு வோட்டு கேட்டனர். ஆனால் அவரது பதவி கால கட்டத்தில் திருகோணமலையில் பெரும்பான மையான சிங்களக் குடியேற்றங்கள் செய்யப்பட்டது. 1977 தேர்தல் வந்தபோது தமிழரசுக் கட்சியின் தளமாக விளங்கிய கூட்டணியினர் செல்வாக்கு இழந்தவர்களாயினர். அப்போது திருமலையில் ஆதரவாளர்களும், அடியாட்களும் ஓர் இனக்கலவரம் திருமலையில் வந்தால் முழுத்தமிழரின் வோட்டுக்களையும் தமக்குச் சாதகமாக திருப்பலாம் என வெளிப்படையாகவே கூறினர்.

தந்தை செல்வநாயகத்தின் அஸ்தி அங்கு கொண்டுவரப்பட்டது. அஸ்தியின் ஊர்வலத்தில் இனக்கலவரம் ஆரம்பமானது. இக்கலவரம் 1977 இனக்கல வரத்திற்கு சிலமாதங்களுக்கு முன்பு 1977ம் ஆண்டு தேர்தலுக்கு முன்பு இடம் பெற்றது.

இனக் கொலைகளும் சில சிங்களவர்களின் காடைத்தனமும், கூட்டணியின் அரசியல் வேட்கைக்கு சாதகமாக அமைந்தது. கூட்டணியினர் குறைந்த பெரும்பான்மையுடன் திருமலையில் வென்றனர் ஆயினும் தந்தை செல்வநாயகத்தின் அஸ்தி ஊர்வலத்தின் போது சிங்களவர் கற்களை முதல் ஊர்வலத்தின் மீது எறிந்தனரா அல்லது அஸ்திக்கு அஞ்சலி செலுத்தவந்த சிங்களவர் மீது அஸ்தி ஊர்வலத்தின் வீதிக்கு டிரக்டரில் இருந்து மண்ணை வீசி வந்த கூட்டணி ஆதரவாளர்கள் முதலில் கல்லை எறிந்தனரா என்ற கேள்விக்கு விடை இன்னும் திருமலையில் இன்னும் சர்ச்சைக்குரியதாக இருக்கின்றது. ஆனால் தமிழர் வரலாற்றில் வழமைபோலவே சம்பவங்களின் விளைவுகள் மட்டும் பார்க்கப்பட்டு அதன் முழுப் பொறுப்பும் பிறர்மீது போடப்பட்டது. இங்கு இனக்கலவரம் என்பதுகூட்டணியின் வெற்றிக்கு ஓர் முதலாக அமைந்தது. இக்கால கட்டத்தில் கூட்டணியின் வெற்றிக்கு வஞ்சகமின்றி உழைத்த ஆதரவாளரும் அடியாளுமான சக்தியாக்கிரகி மொட்டைத்துரை அவர்களை மக்கள் அன்புடன் சண்டியன் மொட்டைத் துரை என அழைப்பர். பிற்காலத்தில் வந்த இனக்கலவரத்தின்போது கைக்குண்டு செய்யும் போது குண்டு வெடித்தனால் ஒரு கண்ணின் பார்வையையும் இழந்தார்.

இந்த அனுபவம்கூட்டணியின் அகிம்சைவழிப் போராட்டம் என்பது என்ன என்ற அறிவுபூர்வமான கேள்வியை ஒருபுறம் முன்வைக்க, மறுபுறத்தில் எவ்வாறு ஓர் இனக்கலவரமானது பொது மக்களின் சிதைந்த எரியுண்ட உடல்களும் கூட்டணியின் அரசியல் அதிகார வெற்றிக்குப் பயன்பட்டன என்பதை வெளிக்காட்டி நிற்கும். இதன் யதார்த்தத்தநிலை வெளிப்பாடு என்னவெனில்பொதுமக்கள் இனவாத சிங்கள அரசியல் இயந்திரத்திற்கும், தமிழ் அரசியல் அதிகார இயந்திரத்திற்கும் இடையே அகப்பட்டு மடிந்தார்கள் அதாவது இரு இராணுவ சிந்தனைப்போக்குக்கு மிடையே மக்கள் மடிந்தார்கள் ஆனால் மக்களுக்கு கொடுக்கப்பட்ட விளக்கமெல்லாம் எதிரிகளுக்கு எதிராக தமிழ்மக்கள் ஒன்றிணைந்து போராடவேண்டும் என்பதே.

மீதி அடுத்த வாரம்...


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# கம்பியூட்டர்-

## தெரிந்தோருக்கும் தெரியாதோருக்கும் சில அறிமுகங்கள்

**சிவப்பிரகாசம்**

எந்தவொரு விஷயத்தையும் நாம் விளக்கமாக பூரணமாக அறியவேண்டுமானுல் முதலில் நமக்கும் அந்த விஷயத்துக்கும் எங்கே தொடர்பு இருக்கிறதோ அங்கே போய்த் தேடவேண்டும். அப்போதுதான் அறியவேண்டும் என்ற ஆவல் பிறக்கும். எனது அனுபவம் ஒன்றையே உதாரணமாக தருகிறேன். எனது இளமைக் காலத்தில் ஆங்கில அறிவில் தேர்ச்சி பெறவேண்டும் என்று ஒரு ஆசை பிறந்தது. வழி தெரியவில்லே. ஆங்கிலப் புத்தகங்களே பொறுமையாக இருந்துவாசிக்க முடியவில்லே. எனக்கு அந்தவயதில் கூடிய நாட்டமாக இருந்த நூல்களே ஆங்கிலத்தில் வாங்கிப் படிக்க ஆரம்பித்தேன். ஆங்கிலத்தில் ஒரு ஆர்வம் தானே பிறந்தது. அப்படித்தான் கம்பியூட்டர் பற்றிய ஒரு அறிவை பெறுவதற்கு முதலில் உங்களுக்கும் கம்பியூட்டருக்கும் தொடர்பான இடத்தில் ஆரம்பிக்க வேண்டும்.

சிலருக்கு இலக்கியத்துறையில் ஆர்வம் இருக்கும். தம்முடைய ஆக்கங்களே தாம் விரும்பிய வண்ணமே அச்சமைத்து பிரசுரிக்க மனம் இருக்கும். அப்படிப்பட்டவர்கள் Desk-top publishing ல் ஆரம்பிக்கலாம். அதாவது கம்பியூட்டரைக் கொண்டு நீங்கள் விரும்பியது போல் எழுதிவிட்டு அதைத் தாளில் பதித்து அச்சகத்தில் கொடுக்க அது உங்கள் விருப்பம்போல் புத்தகமாய் வரும். அது எப்படி?

வேறு சிலருக்கு புகைப்படங்கள் எடுப்பதிலும் புதிய உத்திகளே அதில் கையாண்டு தமது கலேத்திறனேக் காட்ட விருப்பம். பல மேலேத்தேச புகைப்படங்கள் பிரமிக்கத் தக்கவகையில் அமைகிறதே அது போல் தாமும் ஏன் புகைப்படங்களே உருவாக்க முடியாது என விசனம் கொள்வர். அவர்களுக்கும் கம்பியூட்டர் கை கொடுக்கும். அது எப்படி?

கம்பியூட்டரைக் கொண்டு இசை அமைக்கிருர்கள்: தொனியை மாற்றுகிருர்கள்: இளேயராஜா மட்டுமல்ல- இசைக்கலேஞர்களே அப்படிச் செய்கிருர்களாமே! அது எப்படி? என்று பல இசை அபிமானிகள் அறிய அவாவுகின்றீர்கள் அல்லவா! அதுவும் கம்பியூட்டர் தான். அதையெல்லாம் நீங்கள் செய்ய முடியாதா? முடியும். வீட்டு வருமான செலவுகளே கணக்குப்பார்த்து குடும்பத்துக்கமைய ஒரு வரவுசெலவுத்திட்டம் சில நிமிடங்களிலேயே தெளிவாக உருவாக்கிக் கொள்ளவும் கம்பியூட்டர் உதவுகிறது. வருமான வரியைக் கணித்துக் கொள்ளவும் அந்தப்படிவத்தை கம்பியூட்டரைப் பாவித்தே வருமானவரித் திணேக்களத்தின் கம்பியூட்டருக்கு மாற்றிக் கொள்ளவும் வசதி இருக்கிறது. டெலிவிஷனில் சில விளம்பரங்களேக் பார்க்கிறீர்கள். காட்டூன் உருவங்களும் நிஜ உருவங்களும் பந்தடித்து விளேயாடுகின்றன. எப்படி இதையெல லாம் கமராவில் பதித்தார்களோ என்று ஏங்கிப் போய் இருந்திருப்பீர்கள். கம்பியூட்டரும் சில வீடியோ உபகரணங்களும் சேர்ந்து செய்யும் சேட்டைதான் அது. வீடியோவில் பதித்ததை கம்பியூட்டருக்குள் செலுத்தி வீடியோ காட்சிகளில் திருத்தங்கள் செய்து கொள்ளலாம். நீங்கள் கூட அதைத் செய்யலாம். அதற்கும் கம்பியூட்டர் அறிவு தேவைப்படுகிறது. இப்படி எத்தனேயோ....

கடவுள் எங்கும் நீக்கமற நிறைந்து நிற்பது போல இன்று கம்பியூட்டரும் வந்துவிட்டது. கம்பியூட்டர் என்ற சொல் விரிவான கருத்துக்களேக் கொண்டது. இங்கு நான் குறிப்பிடுவது சாதாரண பாவனேயில் நம்மால் கருதப்படும் PC (Personal Computer)க்களேயே. காருக்குள் கூட கம்பியூட்டர் உண்டு. கல்குலேட்டரிலும் உண்டு. வைத்தியசாலேயில் பாவிக்கப்படும் பல உபகரணங்களிலும் உண்டு. நாம் வேலே பார்க்கும் தொழிற்சாலேகளில் இயந்திரங்களின் தொழிற்பாட்டை முகாமைத்துவம் செய்வதும் கம்பியூட்டர்தான் ரொக்கெட்டை அனுப்பி அதில் வெற்றி காண்பதற்கு கைகொடுத்ததும் அதுதான். இப்போது நான் குறிப்பிட்டவை வேறு வகையான கம்பியூட்டர்கள். அவை பற்றிய விபரங்கள் ஆரம்பத்தில் குழப்பமாக இருக்கும் என்பதால் இங்கே தவிர்ப்பது நல்லதென நினேக்கிறேன்.

ஒரு நாடகம் அரங்கேற்ற வேண்டியிருக்கிறது. முதலில் மண்டபம் தேவை. அதில் ஒரு மேடை தேவை. அதுவும் ஒலி ஒளி அமைப்புகள் எல்லாம் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள மேடை தேவை. வேஷத்தைப் போட்டுக் கொண்டு நாம் நடிக்க வேண்டியதுதான் பாக்கி. எம் போன்ற கம்பியூட்டர் பாவனேயாளர்கள் அந்த நிலேயிலேயே இருக்கிறோம். அதாவது Dos என்ற மண்டபத்தில் Windows என்ற மேடையில் application என்ற அமைப்பு ஏற்கனவே கம்பியூட்டருக்குள் உள்ளது. நாம் ஏறி நின்று விரும்பியதைச் செய்து கொள்கிறோம். அந்த மண்டபம் Dos ஆகத்தான் இருக்கவேண்டும் என்பதில்லே. OS2 என்ற பெயரிலும் ஒரு மண்டபம் இருக்கிறது. UNIX என்ற பெயரிலும் உண்டு இவற்றை Operating system என அழைப்பர். மண்டபம் இல்லாமல் மேடை அமைத்து நாடகம் போட முடியுமா? ஆகவேதான் இவை மூலாதாரம் ஆனவை. மேடையையும் மண்டபத்தையும் ஒன்ருகச் சேர்த்து கட்டி WINDOWS ன் அடுத்த பதிப்பு வருகிறது. அப்போது பல காரியங்கள் இலகுவாகும். கம்பியூட்டர் தயார் செய்யப்பட்டு உங்கள் கையில தரும்போது ஏதாவது ஒரு Operating system உள்ளே வைத்துத்தான் தருவார்கள். பொதுவாக பாவனேயில் உள்ளது Dos தான்.

காலத்துக்கு காலம் புதிய பதிப்புகள் (Version) வெளிவந்து கொண்டிருக்கும். இறுதியாக வந்திருப்பது Version 6.0 வும் அதை விடத் தரம் உயர்ந்த Version 6.2 வும் ஆகும். Dos பற்றிய எந்த அறிவும் இல்லாமல் கம்பியூட்டரில் உள்ள application ஒன்றை இயக்கலாம். ஆனுல் முழுமையாக உங்கள் மேற்பார்வையில் கம்பியூட்டரை வைத்திருக்க வேண்டுமானுல் ஓரளவாவது அந்த அறிவுவைப் பெற்றுக் கொள்வது நல்லது. அதாவது மண்டபத்தில் நாடகம் நடத்துவோருக்கு மின்விளக்குகளே இயக்கும் சுவிச்

21 ம் பக்கம் பார்க்க..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net
தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்

# தத்துவ ஞானியின் சின்னத்தனம்

குறுங்கதை

வைசாகன்

முன்பு எனது ரூம்மேற்றாக இருந்த கௌரி சங்கர் சென்ற வருடம் தான் இலங்கை மீண்டு ஒரு தேடுதலில் ஒரு பெண்ணை அவிட்டு வந்திருந்தான்.

அவனைப்பற்றி முதலிலை சொல்லிவிடுகின்றேன். அவன் தனக்கு வாற மனிசி இப்படி இப்படித்தான் இருக்கவேண்டும் என சில கணக்குகள் வைத்திருந்தான். வாறவள் சைக்கில் ஓடியிருக்கக் கூடாது, லவ் பண்ணியிருந்திருக்க கூடாது, படித்திருக்க வேண்டும் ஆனால் நாகரீகமோகம் கொண்டிருக்க கூடாது. இன்ன பிறவும் அதுமட்டுமல்ல அவளைச்சேர்ந்து சகோதர சகோதரிகள் இருப்பின் அவர்களும் இன்ன இன்ன மாதிரி இருக்க வேண்டுமென்றும் பெற்றோர் மாமன்மார் கூட இப்படி இருக்க வேண்டுமென்றும் கணக்கு வைத்திருந்தான்.

இந்தக் கணக்குகள் சிலது சில சமயங்களில் இடித்ததால் எத்தனையோ சம்மந்தங்கள் இவனால் தட்டிக் கழிக்கப்பட்டிருந்தது. இப்படியே ஒவ்வொன்றாய் தட்டிவாற போது இவனது வயதும் படிப்படியே தட்டப்பட்டு முப்பத்தாறாய் போயிருந்தது. அந்த நேரங்களில் எனது மற்ற ரூம்மேட் அடிக்கடி சொல்வான் "இவனுக்கு ஐம்பது வயதானாலும் இவன் தேடுறது சந்திக்கப்போறதில்லை, அதுக்குப் பிறகு என்ன? இன்னும் பத்து வருஷந்தானே பல்லைக் கடித்துக்கொண்டிருந்தால் அதுவும் பறந்து போகும்' என்று. நானும் சொல்வேன் "அட கௌரி இப்படியே பொத்தி வைச்சுக் காத்துக் கொண்டிருந்தால் முத்தி பஞ்சாய் வெடித்துபோகும் கெதியாய் ஊருக்கு போயெண்டாலும் ஒண்டை அவிட்டு வாடா" என்று. இதுகளைக் கேட்டதாலேயோ அல்லது நான் கலியாணம் செய்து கொண்டதைப் பொறுக்காமலோ என்னவோ அவன் கொழும்புக்கு பறந்து ஒரு பிள்ளையை கூட்டி வந்தும் விட்டான்.- பிள்ளை பரவாயில்லை. ஆனால் அவன் கீறி வச்சிருந்தமாதிரி கண் அப்படி இருக்கவேணும், கால் அப்படி இருக்க வேண்டும், மூக்கு அப்படி இருக்க வேண்டும், வாய் இப்படி இருக்க வேண்டும் என்பது போல அமைந்திருக்கவில்லை. ஆனால் தலைமயிர் அவன் கீறியபடியே அடர்ந்து நீளமாய் இருக்கிறது. நிறம் கூட முட்டுப்பட்டது.

எங்களுக்கெல்லாம் அதிர்ச்சியாய் கூடப் போய்விட்டது. அதைவிட அதிர்ச்சி என்னவென்றால் வாற மனிசியுடன் குடும்பம் நடத்த அவன் சில தத்துவங்கள் வைத்திருந்தான் அதில் முதலாவது தத்துவப்படி "கலியாணம் செய்த பிறகு கணக்கு தெரிந்தவர்கள், குறிப்பாக ரூம் மேட்ஸ் நாங்கள் தெரிந்து கொள்ளாத இடத்தில் தான் புதுக்குடித்தனம் செய்து கொள்வது (தான்)." ஆனால் அதை கைவிட்டானோ என்னவோ ரொரன்ரோவுக்கே கூட்டி வந்திருந்தான். ஆனால் ஒன்று எங்களுக்கெல்லாம் அழைத்து ஒரு விருந்துமில்லை மருந்துமில்லை. அதனாலே அவன் ரெலிபோன் நம்பர் கூட எனக்குத் தெரியாது.

நானும் என்ர மனிசியும் எந்த வூல்கோ பூட்டப் போறான்கள் எண்டு 'சேல்' போட்ட நேரம் ஒரு நாள் அங்கு சென்ற போது எதேச்சையாக அவர்களை நேரடியாய் கண்டனாங்கள். என்ரை நம்பரை வாங்கினான் தனக்கு போன் இல்லை என்று சொல்லி விட்டு அவசர அவசரமாகக் கழண்டுவிட்டான். இதனால்தான் சொல்லுறன் அவனின் முதலாம் தத்துவமும் ஆட்டங் கண்டிருந்தது. இப்படியே அவன் பல தத்துவங்கள் ஆக்கி வைத்திருந்தான் இதனால்தான் நாங்கள் இவனை தத்துவ ஞானி என்று பட்டந் தெளிப்பதுண்டு.

இந்தத் தத்துவஞானியின் நாலாம் தத்துவப்படி மனிசி சமைத்துக் கொண்டிருக்கையில் பின்புறமாகச் சென்று பின் தளத்தில் தட்டி சல்லாபிப்பது.. இதை என் மனிசிக்குச் சொல்லிச் சொல்லி நான் அடிக்கடி சிரிப்பதுண்டு.

இந்த தத்துவஞானி ஒருநாள் நித்திரைப் பாயில் (கட்டில்) ரெலிபோன் அடித்து எழுப்பி "மச்சான் உனக்கு பிள்ளைப்பெறு பாக்கிற பொம்பிளை டொக்டர் யாரையும் தெரியுமே?" என்றான்.

"என்ர மனிசி இப்ப போறதும் ஒரு பொம்பிளை டொக்டர் தான்" என்றேன்.

'பிள்ளைப் பெறுவுக்கும் அவதான வருவா?" என்றான்

"ஓம்" என்றேன்.

"இல்லை சிலபேர் ஏழாம் மாசத்திலை வேற டொக்டர் இட்டை அனுப்பிவிடுவினமாம்.. அவை கூடுதலாய் ஆம்பிளை டொக்டராம் அதுதான்" என இழுத்தான்.

அப்பத்தான் அவனது முப்பத்தி ரெண்டாம் தத்துவம் எனது மூளையில் தட்டுப்பட்டது அதன்படி "மனைவியின் உடலை ஆம்பிளை டொக்டர் இடம் காட்டுவதில்லை" என ஞானி வைத்திருந்தான்.

"உன்ரை மனிசியின்ரை முதல் பிள்ளைப் பெறுவும் இவவே பாத்தது?" எனக் கேட்டான்.

"இல்லை அது வேறை ஒரு ஆம்பிளை டொக்டர்.. ஆனால் அவர் இருக்கிற இடம் தூரம் அதுதான்" என்ற போது "அப்ப இப்ப போற பொம்பிளை டொக்டரின்ரை நம்பரைத் தாறியே? என்றான்.

அந்த ஆம்பிளை இந்தியன். தமிழ் விளங்கும் இவவை விடக் கெட்டிக் காரன். அவரின்ரை நம்பர் தரட்டே சிலவேளை அவர் உங்களுக்கு கிட்டவாகவும் இருக்கலாம்." என விசமம் பண்ணினேன்.

"இல்லை இல்லை பொம்பிளையின்ரை நம்பரையே தா" எனக் கெஞ்சும் தொனியில் கேட்டான்.

என்ன செய்ய பாவம் எண்டு நான் கொடுத்தேன்.

கொஞ்சநாள் கழித்து 'தத்துவஞானி' தன்ரை மனிசியை என்ரை மனிசிக்கு அறிமுகஞ் செய்தான். ரெலிபோனிலைதான். நாள்பட என்ரை மனிசியும் அவனின் மனிசியும் அவர்களின்ரை பிரச்சனைகளை பேசிப் பறைஞ்சே சினேகிதமாகி விட்டினம்.

ஒருநாள் பின்னேரம்

31ம் பக்கம் பார்க்க..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்

# ஜே.வி.பி.யின் அரசியலின் சமூக பொருளாதார அரசியல் பின்னணி

கருத்தியல் என்பது அரசியல், நீதி இயல், ஒழுக்க இயல், நுண்கலை, மத தத்துவ ரீதியான கருத்துக்களின் கோவையாகும். எந்தவொரு கட்சிக்கும் அல்லது அமைப்புக்கும் இவ்வாருன கருத்துக் கோவை அல்லது கருத்தியல் உண்டு. அத்துடன் எந்தவொரு கருத்தியலும் ஏதோ ஒரு வர்க்கத்திற்கு அல்லது வர்க்கங்களின் கூட்டுக்கு சேவை ஆற்றுகிறது. அல்லாவிடில் வர்க்க ரீதியான குறிகளைக் கொண்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட வர்க்கத்திற்கு அல்லது வர்க்கங்களின் கூட்டுக்கு அன்றி முழுத் தேசத்துக்குமே சேவையாற்றும் கருத்தியல் என்று ஒன்று இருக்க முடியாது.

எந்தவொரு அமைப்பினதும் செயற்பாடு ஒழுங்குபடுத்தப்படுவதும், அதன் வேலைத்திட்டம், செயல்முறைகள் உபாயம், ஸ்தாபனம் ஆகிய அனைத்தும் உருப்பெறுவவதும் அவ் அமைப்பு கொண்டுள்ள கருத்தியலுக்கு ஏற்பவாகும். ஆதலால் ஜேவிபி யின் செயற்பாடுகள் பற்றி சரியான தெளிவைப் பெறவேண்டுமாயின் அதன் கருத்தியல் என்ன என்பதை விளங்கிக் கொள்வதில் பிரதான கவனம் செலுத்த வேண்டும்.

வர்க்கரீதியான பார்வையுடன் ஜேவிபியின் கருத்தியலை நோக்குவோமாயின் அது குட்டி முதலாளித்துவ கருத்தியல் எனக் கூறமுடியும். குட்டி முதலாளித்துவத்திற்கே உரித்தான இரு கொள்கை, கொள்கை இன்றி ஒரு கருத்தில் இருந்து இன்னுமொரு கருத்துக்கும், ஒரு செயல்முறையில் இருந்து இன்னுமொரு செயல் முறைக்கும் தாவும் சுபாவம், அவசரத் தன்மை, எண்ண முதல்வாதம், இயக்கவியல் விரோதம் ஆகியவற்றை ஜேவிபியின் கருத்தியலில் காணலாம். இதனை நாம் ஜேவிபியின் கருத்தியலை வெளிக் காட்டும் அடிப்படை விடயங்களை ஒன்ருென்ருக பரிசீலனை செய்வதன் மூலம் விளங்கிக் கொள்ள முடியும்.

**ஜேவிபியின் கண்ணோட்டம்**

எண்ணமுதல்வாத கருத்துகளே ஜேவிபியின் கண்ணோட்டத்துக்கான அடிப்படையாகும். எண்ணமுதல் வாதம் என்பது எந்த ஒரு பிரச்சனையிலும் உள்ளடங்கியுள்ள யதார்த்தத்தை கவனத்தில் கொள்ள மாட்டாது. ஒரு பிரச்சனையின் சகல பக்கங்களையும் ஆழமாக பரிசீலனை செய்யமாட்டாது. பிரச்சனைக்கு முதலில் பதிலை தேடிக்கொண்டு அல்லது போனுல் ஒரு பிரச்சனை தொடர்பாக தமது விருப்புக்கு பொருத்தமான முடிவுகளுக்கு வந்து அம் முடிவுகளை உறுதிப்படுத்துவதற்காக இயன்றவரை விடயங்களை தொகுப்பது எண்ண முதல்வாதத்தின் இன்னுமொரு இலட்சணமாகும். வரலாற்று முக்கியத்துவங்களை கவனத்தில் கொள்ளாமல் அல்லது திட்டமிட்டே அவற்றைக் கவனத்தில் கொள்ளாமல் தமது முடிவுகளை உறுதிப்படுத்துவதற்காக அங்கொன்றும் இங்கொன்றுமாக விடயங்களை சாம்பார் போன்று தொகுக்கப் படுகிறது. ஜேவிபியின் கருத்தியலும் இவ் அடிப்படையிலேயே உருவாக்கப் பட்டது. ஆதலால் அக்கருத்தியலில் எவ்வித விஞ்ஞானரீதியான அடிப்படைகளும் இல்லை. பார்க்கும் போது அவை தவறற்றவை போல் தோன்றினுலும் உண்மை அவ்வாறு அல்ல. லெனின் கூறியவாறு "மாயையைப் போன்று ஒரு ஆறுதல் கிடைக்கின்றது. செயல் முறைகளின் சகல அம்சங்களையும் விருத்தியின் சகல தோற்றங்களையும், மோதலுக்கான சகல தாக்கங்களையும் கவனத்தில் கொண்டது போல் தோன்றுகிறது. ஆயினும் கூட சமூக அபிவிருத்திக்கான செயல்முறைகள் பற்றி எவ்வித பூரணத்துவமான புரட்சிகர கோட்பாட்டையோ முன்வைப்பதில்லை."

இயக்கவியல் ரீதியான சிந்தனை இல்லாத போது அல்லது அதிலிருந்து ஒதுங்கும் போது எண்ணமுதல்வாதம் தோன்றுகிறது. இதன் சமூக அடித்தளம் சிறு முதலாளித்துவம் ஆகும். ஜேவிபி சிறு முதலாளித்துவ அமைப்பு என்பதை நாம் ஏற்கனவே கண்டோம். ஒரு பிரச்சனைகள் பற்றி ஆழமாக ஆய்வு செய்யவேண்டியது இயக்கவியல் தேவையாகும். குட்டி முதலாளித்துவ அம்சமான பொறுமை அற்ற தன்மையும் அவசரமும் ஒரு பிரச்சனை பற்றி ஆழமாக ஆய்வு செய்வதற்கு இடமளிப்பதில்லை. ஆதலால் ஒரு பிரச்சனை தொடர்பாக மேலெழுந்த வாரியாக பார்த்து அங்கும் இங்குமாக பொறுக்கி எடுத்த விடயங்களின் அடிப்படையில் ஜனரஞ்சகமான முடிவுகளுக்கு வருகின்றனர். ஜேவிபியின் சகல கருத்தியலும் இவ் அடிப்படையிலேயே உருவாக்கப் பட்டன.

மறுபுறம் ஜேவிபியின் கருத்தியலை சரியான முறையில் விளங்கிக்கொள்வது அவ்வளவுதூரம் இலகுவான காரியம் அல்ல. இதனை ஜேவிபியின் வெளியீடுகளில் இருந்து அல்லது அரசியல் வகுப்புக்களில் போதிக்கப்படுவதிலிருந்து மட்டும் விளங்கிக் கொள்வது கடினமாகும். ஏனெனில் அதனது வெளியீடுகளில் கூறப்படுவதற்கும் அது செயல்படுத்துவதற்கும் இடையில் பெருமளவில் வேறுபாடு காணப்படுகிறது. உதாரணத்துக்கு கூறுவதாயின் அரசியல் வகுப்புக்களில் மார்க்சிஸம், பாட்டாளிவர்க்க அரசியல் பற்றி உரையாடப்பட்டது. ஆனுல் செயயல்களில் மார்க்சிஸம், பாட்டாளிவர்க்க அரசியல் ஆகியவற்றின் நிழலைக் கூட காண்பது கடினமாகும். ஜேவிபியின் கருத்தியலானது ஒரு விடயம் தொடர்பாகக் கூட அடிக்கடி மாறுபடும். உதாரணமாக கூறுவதாயின் ஒரு சந்தர்ப்பத்தில் தேச பக்தி மிகச் சிறப்பான ஒன்ருக கருதப்பட்டது. அடுத்த சந்தர்ப்பத்தில் 'தேசபக்தி' என்பது குட்டி முதலாளித்துவத்தைச் சார்ந்த, கண்டிக்கப்படவேண்டிய பகைமைக் கருத்தியல் என ஜேவிபி கூறியது. அதற்கு அடுத்த

**வசந்த திசாநாயக, பற்றிக்பெர்னுன்டோ**
**சரத் த சில்வா, ரஞ்சித் குமார**

**தமிழாக்கம்: செ.லோகநாதன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சந்தர்ப்பத்தில் மீண்டும் 'தேசபக்தி' அனைத்தையும் அளவிடும் அளவு கோலாக மாறியது. நண்பர்களையும் எதிரிகளையும் வேறுபடுத்திக் காட்டும் கோடாக மாறியது. தேசபக்தர்களே மக்களின் உண்மையான நண்பர்கள், தேசபக்தர் அல்லாதவர்கள் மக்களின் எதிரிகள் எனக் கூறப்பட்டது. ஒரு சந்தர்ப்பத்தில் பயங்கரவாதம் பற்றி கூறும் போது பூரணமாக கண்டிக்கப்பட வேண்டியதும் பாட்டாளி வர்க்க விரோத முதலாளித்துவ செயல்முறை எனவும் கூறினர். ஒரு சந்தர்ப்பத்தில் அது பெரும் பற்றுடன் பின்பற்றுகின்ற பிரதான உபாயமாகியது. ஆரம்பத்தில் இருந்து 1971 கிளர்ச்சி வரை ஜேவிபியிடம் ஒரு கருத்தியல் காணப்பட்டது 71 கிளர்ச்சியின் பின்னர் சிறிது சிறிதாக மாறத் தொடங்கிய அக்கருத்தியல் 1973 இறுதி அரைப்பகுதியில் முற்று முழுதாக வேறுபட்ட கருத்தியலாக மாறியது 1973 தொடக்கம் 1978ம் ஆண்டு வரை அவ்வாறாக மாற்றம் பெற்ற கருத்தியலே பிரச்சாரம் செய்யப்பட்டது. 1978 தொடக்கம் 1985 ம் ஆண்டுவரை இன்னுமொரு கருத்தியல் காணப்பட்டது. 1985 இலிருந்து பின்பற்றப்பட்டதோ அதிலிருந்தும் வேறுபட்ட கருத்தியலாகும்.

அனேக சந்தர்ப்பங்களில் ஜேவிபி தனது கருத்தியலை மாற்றிக் கொள்வது சுயவிமர்சனரீதியான மதிப்பீடு ஒன்று செய்ததன் பின்னர் அல்ல. இன்று தவறு என கூறிய கருத்தியல் ஒன்றை நாளை தவற்ற கருத்தியல் எனக்கொண்டு செயல்பட அதனால் முடியும். விடயத்தை மனதில் வைத்துக் கொண்டே ஜேவிபி யின் கருத்தியலை பரிசீலனை செய்யவேண்டும்.

### சமூக புரட்சி என்பது எவ்வாறாவது அதிகாரத்தைச் கைப்பற்றுவதா?

ஜேவிபியின் செயல்முறைகள் அனைத்தையும் ஒட்டுமொத்தமாக கவனிக்கும்போது எவ்வாறாவது அதிகாரத்தை கைப்பற்றுவதே சமூகப் புரட்சி எனக் கருதி செயல்பட்டதாகவே தெரிகிறது. சமூகப் புரட்சி தொடர்பாக 1966 ம் ஆண்டு தொடக்கம் 1971 வரை (உண்மையிலேயே சில சில வேறுபாடுகளுடன் 1978 வரை) ஜேவிபியின் கருத்தாகவிருந்தது ஆயுதக் கிளர்ச்சி ஒன்றின் மூலமாக அதிகாரத்தைக் கைப்பற்றுவது என்பதாகும். அதன் பின்னர் 1978வரையான காலத்துள் ஆயுதக் கிளர்ச்சி மூலமாக அதிகாரத்தைக் கைப்பற்றுவது பிரதானமானது ஆயினும் அதிலேயே தாம் கட்டுப்பட்டு இருக்கவில்லை எனவும் வேறு போராட்ட வழிகள் இருக்குமாயின் அதையும் அங்கீகரிப்பதாகவும் கூறினர் இது அடுத்த கட்டத்தில் ஆயுதக் கிளர்ச்சியை நிராகரிப்பதற்கான இடைக் கட்டமாகவிருந்தது. 1978 தொடக்கம் 1985 வரையான காலத்துள் சமூகப் புரட்சியாக கருதப்பட்டது ஆயுதப் போராட்டம் அற்றபாதை மூலமாக அதிகாரத்தை கைப்பற்றுதலேயாகும். அதாவது பாராளுமன்ற பாதை மூலமாக ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுதலாகும். இக் காலகட்டத்தில் தான் விஜேவீர ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டார். 1985 ன் பின்னரான காலம் சமூகப்புரட்சி என்பது ஆயுதக் கிளர்ச்சி மூலமாக அதிகாரத்தைக் கைப்பற்றுதல் என்றும் கருத்தை மீண்டும் அடைந்த காலமாக காணப்பட்டது.

1978 ம் ஆண்டுக்குப் பின்னரான காலகட்டத்தில் ஜேவிபியினர் பாராளுமன்ற பாதையின் அடிப்படையில் செயல்பட்டாலும் சர்வதேச ரீதியில் "முற்போக்கு" இராணுவம் இராணுவ சதி மூலமாக அதிகாரத்தைக் கைப்பற்றுவதையும் சமூக புரட்சியாகவே கண்டனர். இக் கருத்துக்கு அமைய எதியோப்பியா ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் சோவியத் சார்பு இராணுவ சதிகளை சமூகப்புரட்சி என விபரிக்கும் நிலமைக்கு வீழ்ச்சியுற்றனர்.

புரட்சி பற்றிய ஜேவிபியின் கருத்தை ஆராய்ந்து பார்க்கும்போது ஆயுதக் கிளர்ச்சி, பாராளுமன்ற வெற்றி அல்லாவிடில் இராணுவ சதி இவற்றில் ஏதோ ஒன்றின் மூலமாக அதிகாரத்தைக் கைப்பற்றுவதே புரட்சி என அது எண்ணியதாக தெரிகிறது. அதாவது புரட்சி என்பது ஒரு கட்சியின் ஒரு குழுவின் செயல் என்றே ஜேவிபி எண்ணியதாக தெரிகிறது.

புரட்சி ஒன்று நடைபெறவேண்டுமாயின் அதற்காக நீண்ட காலமாக மக்களை ஸ்தாபன மயப்படுத்த வேண்டும், மக்கள் செயல்படவேண்டும் என்பதை அது கவனத்தில் கொள்ளவில்லை. புரட்சி என்பது அக நிலை புற நிலைக் காரணிகள் பூரணத்துவம் அமையும் செயல் மூலமாக இடம் பெறும் ஒன்று என்பதையும் அவ்வாறு பூரணத்துவம் அடையவேண்டும் என்பதையும் அது கவனத்தில் கொள்ளவில்லை. ஜேவிபி தனது உள் உரையாடல்களின் போது அகநிலை புறநிலை காரணிகள் பூரணத்துவம் அடைவதைப் பற்றி பேசிய போதிலும் அதற்கு அமைய செயற்பட்டதைக் காணமுடியாது.

(தொடரும்)

## மாரு ஒருமையும் பன்மையும்; சில திருத்தங்கள்

சமீபத்தில் ஒருவருடன் பேசும் போது தளபாடங்கள் என்பதற்கு Furnitures என்று குறிப்பிட்டிருந்தார். அது தவறான பிரயோகம்.

ஆங்கிலத்தில் பெயர்ச் சொற்கள் ஒருமை, பன்மை என்ற ரீதியில் பிரிக்கப்படுகின்றன. வழமையில் ஒருமையின் பின்னால் S சேரும் போது பன்மையாகிறது. இதற்கு பல விதிவிலக்குகள் உண்டு. ஆனால் சில சொற்கள் எப்போதுமே ஒருமையாக, அல்லது பன்மையாக உள்ளன.

இதில் information (தகவல்) furniture (தளபாடம்), news, advice, luggage போன்றவை எண்ண முடியாதன என்பதால் இவை எப்போதுமே ஒருமை தான். இவற்றுக்கு பன்மை இல்லை. அவற்றிற்கு S சேர்க்கப்படுவதில்லை.

வேறு சில சொற்கள் உள்ளன. அவை எப்போதுமே பன்மை தான். Premises, Quarters (தங்குமிடம்), Clothes, trousers, pants, pyjamas போன்ற இரு பாகங்களைக் கொண்ட உடைகள், binoculars, glasses, pliers (குறடு) Scissors (கத்தரிக்கோல்) போன்ற இரு பாகம் கொண்ட கருவிகள் போன்ற எப்போதும் பன்மைதான்.

மாஸ்டர் ரவி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net
தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்

# அவர்கள்



## க.கலாமோகன்

மாலிக் சிறைக்குப்போன விஷயம் மதுச்சாலேக்கு அடிக்கடி வந்துபோகும் அவனது சகபாடிகளுக்கு ஓர் பிரச்சனேயாகப் படவில்லே போல எனக்குத்தோன்றியது. அவர்கள் கூட என்னிடம் வந்து போதை வஸ்து வியாபாரம் செய்துதான் மாலிக் சிறைக்குப் போனுன் எனச் சொல்லவில்லே. அவர்களுக்கு, என்மீது, நான் ஓர் எழுத்தாளன் என்றபடியால் அபிமானம் இருந்தது. என்னேக் கண்டதும் கை குலுக்க வருவர். சிலர் வந்து சில வேளேகளில் நான் என்ன விஷயம் தொடர்பாக எழுதுகின்றேன் எனக் கேட்பர். அவர்கள் நல்லவர்கள், அதேவேளேயில் பொல்லாதவர்களும் கூட. அமைதியான தோற்றம் கொண்ட சான்சேய்ஸ், மதுச்சாலேக்கு முன்னுல் வைத்து ஒருவனேத் துவைத்தெடுத்ததைக் கண்டபோது நடுங்கித்தான் விட்டேன்.

அடிக்கடி நான் காணும் மாலிக் திடீரெனக் காணுது போனது எனது தனிப்பட்ட வாழ்வுக்கு இடையூறு தருகின்ற ஒன்றல்ல. அவன் எனக்கு நெருக்கமானவனும் அல்லன். நன்ருகக் குடிப்பான். அதுவும் வேகமாக. ஆனுல், அவன் ஒரு போதுமே நான்கு கால்களில் நடந்ததை நான் காணவில்லே. மாலிக் மீது எனது கவனம் விழுந்ததிற்கு அவனது மனேவி ஓர் காரணம். அவளும் மதுச்சாலேக்கு வருவாள். ஒருபோதுமே பியர் குடித்ததில்லே. காட்ஸ் விளேயாடும் மாலிக்கை "வா. ...... வீட்டுக்குப் போவோம்" என அழைப்பாள். மாலிக் "பொறு" என்ருல் அவள் எதுவும் பேசாமல், அவர்கள் காட்ஸ் விளேயாடுவதையே பார்த்துக் கொண்டிருப்பாள். மாலிக்கின் மனேவி கர்ப்பிணியாவதற்கு முன்னர் அவனது தாமதங்கள் தொடர்பாக நான் பெரிதாக எனக்குள் அலட்டிக் கொள்ளவில்லே. அவள் கர்ப்பிணியான பின்னர், அவனது தாமதங்கள் எனக்குள் சற்றே எரிச்சலேயூட்டின. ஓர் கர்ப்பிணிப் பெண், இரவு 12 மணி வரையும் தனது புருஷன், தனது மனதின் சுவைக்கேற்ப, ஓர் மதுச்சாலேயில் தங்குவதை அனுமதிக்கச் சிரமப்படுவாள் என்று தான் நான் நினேக்கின்றேன். அவளது வயிற்றுள்தான் கரு வளர்ந்தாலும், கருவின் மீதான புருஷன் கரிசனேயை கட்டிலில் காண அவளுக்குள் ஓர் ஏக்கம் உண்டு என்பதை யாருமே இலகுவில் உதாஷீனம் செய்து விடமுடியாது. அந்தப்பெண்ணுக்காக, அவளின் பெயர் கூட எனக்குத் தெரியாது, நான் இரங்கினேன்.

ஒருநாள் மாலிக் காட்ஸ் விளேயாடிக் கொண்டிருந்தபோது ஓர் வண்டிலேத் தள்ளிக் கொண்டு அவள் வந்தாள். அப்போதுதான் மாலிக் தகப்பனுகி விட்ட விஷயம் எனக்குத் தெரியவந்தது.. வண்டிலுக்குள் விழிகளே விட்டேன். அது ஓர் பச்சைக் குழந்தை. அமைதியாகத் தூங்கிக்கொண்டிருந்தது. அவள் மாலிக்கை ஓர் பார்வை பார்த்தாள். அந்த நேரம் ஆட்டம் முடிவடைந்து "இன்னெரு ஆட்டம் ஆடுவோம்" என்று அவர்கள் சொல்லினர். மாலிக் தனது மனேவியைப் பார்த்து " இன்னும் 5 நிமிடங்களில் ஆட்டம் முடிந்துவிடும்.. பொறு" என்ருன். அவள் முகம் கோணியது.. வண்டிலேத் தள்ளிக்கொண்டு வெளியேறினுள்.... மாலிக்... 5 நிமிடத்தை மறந்து ஒரு மணிநேரம்வரை காட்ஸ் விளேயாடினுன்.

என்னுடன் வந்து அடிக்கடி சம்பாஷிக்கும் கடேரிடம் தான் ஒரு நாள் நான் "எங்கே, மாலிக்கைப் பல வாரங்களாகக் காணவில்லேயே!" எனக் கேட்டபோது "ஆள் உள்ளே!" என்ருன். "ஏன்?" என்று கேட்டபோது, உண்மை தெரியவந்தது. எனக்கோ, உண்மையில் அது பெரிய அதிர்ச்சியை ஊட்டவில்லே. அவர்களது உலகம் சற்றே வன்மமானது.. அவர்கள் எதற்குமே பயப்படாதவர்கள். உதாரணத்துக்கு கிறிஸ்தியனே எடுப்போம். அவனுக்கு அஞ்சாதவர்கள் யாரும் உள்ளனரா. அமெரிக்கர்களேப் போல உயரமானவன், கறுவல், காதிலே ஒரு தோடு இருக்கும், விஸ்கிதான் குடிப்பான், எப்போதுமே இரண்டு அழகிய இளம் பெண்களோடுதான் வருவான்.. அவர்களிற்கெல்லாம் அவன் தலேவன் போல். யாராவது அவனுடன் வம்பு செய்தால் தும்பு தும்பு ஆக்கி விடுவான். என் மீது அவனுக்கு ஓர் தனிப்பட்ட அபிமானம் இருந்ததற்கு என் கையில் இருந்த எழுதுகோலும், எனது சாதுவான போக்குமே காரணம் என்ருல் மிகையாகாது. கிறிஸ்தியன் என்னே எப்போதுமே "சகோதரன்" என்றுதான் அழைத்ததுண்டு.

அவர்களின் உலகம் ஓர் தனி உலகம். அவர்கள் மிகவும் சந்தோஷமாக இருப்பர், சில வேளேகளில் இரத்தம் கொட்டும் வரை அடிபடுவர்.. ஆனுல், பின்னர் எதுவுமே நடக்கவில்லே என்பதைப் போல சேர்ந்து விடுவர். எனக்கு அவர்கள் மீது ஓர் ஈடுபாடு இருந்தது. இதற்குக் காரணம், அவர்கள் சமூகத்தின் மிகவும் தாழ்ந்த சூழலில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# ஏ.ஆர்.கே மார்க்கட்

## 31-35 St.Dennis Dr
(Don Mills/Eglinton)

★ இலங்கை இந்திய உணவுப் பொருட்கள்,
★ பால் பழங்கள், உடன் மரக்கறி வகைகள்,
★ இறைச்சி, மீன், கடலுணவு வகைகள்,
★ கனடிய உணவுப் பொருட்கள்
★ தமிழ், ஹிந்தி வீடியோப் படங்களின் ஒரிஜினல் பிரதிகளை வாடகைக்கும் விற்பனைக்கும் பெறலாம்
★ CD, Audio மலிவு விலையில்

**அனைத்தும் மலிவு விலையில்**

# A.R.K MARKET

## (416) 421 3429




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இருந்து உருவாகியவர்கள் என்பதுதான். அவர்களில் பலருக்கு தாய் தந்தையரின் அணைப்பு வாழ்வில் கிடைத்ததேயில்லை. விவாகரத்துக்கள் போன்ற பல வகைப்பட்ட காரணங்களால் அனாதைகளாக்கப்பட்டு சுயமாகவே வளர்ந்தவர்கள்.. அனாதைகள் பராமரிப்பு நிறுவனங்களிலே அடக்குமுறையைக் கொடூரமாக வாழ்ந்தவர்கள்.

குடிப்பழக்கம் அறவே இல்லாதவனும், அவர்களில் மிகவும் சாந்தமானவன் எனக் கருதப்படுபவனும் (இது உண்மை) தற்போது செஞ்சிலுவைச் சங்கமொன்றில் வாகன ஓட்டுநராகவும் உள்ள கடேர் தனது வாழ்க்கையை எனக்குச் சொன்னதுண்டு. அனாதைகளாகிப் போதல் கொடுமையானது.. மிகவும் பரிதாபகரமானது. இப்படியென்றிருக்கையில் அனாதைகளைப் பராமரிக்கும் விடுதிகளுக்குள் ஏன் அடக்குமுறைகள் கடைப்பிடிக்கப்படவேண்டும் என என்னிடம் அடிக்கடி கேட்டதுண்டு. தங்களிடமிருந்த கொஞ்ச நஞ்ச இரக்க சுபாவத்தைக் கூடப் பிடுங்கியெறியும் விதத்தில் தாங்கள் நடத்தப்பட்டதாக கடேர் என்னிடம் சொன்னான்.

மாலிக் போதை வஸ்து வியாபாரத்தில் ஈடுபட்டான் என்பது எனக்கு எப்படித் தெரியாதோ, அதுபோல அவன் என்ன தொழில் செய்தான் என்பதும் எனக்குத் தெரியாது. அவனது மனைவி என் நினைவுக்கு வந்தாள். பாவம், அவளுக்கு இப்போது பிள்ளையும் பிறந்தது. வீதியில் ஒரு தடவை குழந்தையுடன் அவளைக் கண்டேன்.

குழந்தை பிறந்த வேளையில் தகப்பன் இப்படி உள்ளே போதல் என்பது எவ்வளவு வேதனையான விஷயம். அவளுக்கு அவன் போதைவஸ்து வியாபாரம் செய்தது தெரிந்திருந்ததா என எனக்குள் ஒரு தடவை வினவிக்கொண்டேன். அவள் என்னுடன் ஒரு போதுமே பேசியதில்லை. சிரித்ததுண்டு. வீதியிலே கண்ட அவளிடம் நான் மாலிக்தொடர்பாகக்கேட்டிருக்கலாம். . கேட்க வேண்டும் என்று கூட எனக்குப்பட்டது. முடிவில், அவளது மனதில் அது வேதனையையூட்டிவிடும் எனக்கருதித்தவிர்த்துக்கொண்டேன். அவளது முகத்திலே சோகம் கவிழ்ந்து கிடந்தது.

நான் கடேரிடம் கேட்டேன். "மாலிக்கிற்கு வழங்கப்பட்ட தண்டனை கொடுமையானதா?' எவ்வளவு வருடங்கள் நீடிக்கும்?"

"சிறை வாழ்வு கொடுமையானதுதான். மாலிக்கிற்கு மூன்று மாதங்கள்தான் விதிக்கப்பட்டுள்ளன."

மூன்றுமாதத் தனிமை வாழ்வு கூடக் கொடுமையானதுதான் என எனக்குப் பட்டாலும், மாலிக்கின் மனைவியும், குழந்தையும் அவனது தனிமை வாழ்வையொட்டி அந்நியமாக்கப்பட்டமை உண்மையிலேயே கொடுமையிலும் கொடுமையாக எனக்குப்பட்டது. தண்டனைகளால் பாதிக்கப்படுவது ஒரு தனிமனிதன் மட்டுமல்ல... அவனது பந்தங்களுமே என்பதைத்தண்டனை விதிப்போர் ஒரு போதுமே அங்கீகரிக்க ஒத்துக் கொண்டதில்லை. மாலிக்கிற்கு விதிக்கப்பட்ட மூன்றுமாதம், அவனது மனைவிக்கும், குழந்தைக்கும் விதிக்கப்பட்ட தண்டனையே.

அன்று என்னால் எழுத முடியவில்லை. கணம் கணமாக மனிதப் பெறுமானங்கள் சுட்டெரிக்கப்படும் வேளையில் எழுதுவதிலும் இலக்கியம் செய்வதிலும் ஏதாவது அர்த்தங்கள் உண்டா என்ற விசாரணைகள் எனக்குள் முட்டி மோதின. பேனாவை மூடி, தாள்களைப் பையில் வைத்து விட்டு "இன்னொரு பியர்" எனக் கட்டளையிட்டேன்.... கட்டளை என்று தெரியாதிருக்கும் விதத்தில்.

"மன்னிக்கவும், உங்கள் முன்னே அமர்ந்து நான் குடித்தால் அது உங்களுக்கு இடையூறு தரும் ஒன்றாகுமா?"

சற்றே மயக்க நிலையில் இருந்த என்னை திடுதிப்பெனப் புகுந்த இனிய குரல் சுய நினைவுக்குக் கொண்டு வருகின்றது. அவளை பார்க்கின்றேன். அவளை அந்த மதுச்சாலையில் முன்னர் கண்டது போல ஒரு ஞாபகம், விழிகளுக்குள் வெளி மயக்கம் மெல்ல மெல்லப் புகுந்து கொண்டிருப்பது போலவும் பட்டது. சிகரெட்டைத் தூக்கி அவள் தனது உதட்டில் வைக்க நான் நெருப்புக் கொடுக்கின்றேன். "நன்றி" எனச் சொல்லும் அவளைப் பார்க்காமல், அவர்களையே பார்க்கின்றேன்.

எனக்கு முன்னே இருந்த அவள் எனக்குள் எந்த விதப் பரபரப்பையும் ஏற்படுத்தாமல் தூரத்தில் இருந்த அவர்களே எனக்குள் ஓர் துருத்தலை ஏற்படுத்தியபடி.

"மன்னிக்கவும்...... இன்று நீங்கள் எழுதவில்லையா?" அவள்தான் கேட்கின்றாள். எனக்கு அவளைத் தெரியவில்லை. அவளுக்கோ என்னைத் தெரிந்திருந்தது. எனது எழுதும் கோலத்தை அவதானித்தவளாக இருக்கலாம். அவள் எப்படியாவது என்னை அறிந்திருக்கலாம். அது எனக்கு முக்கியமானதாகப் படவில்லை.

"இன்று நான் எழுதவில்லை."

"நாளை நீங்கள் எழுதுவீர்களா?"

"நாளை இன்றாகலாம், அல்லது நேற்றாகலாம். நான் எழுதுவதும், எழுதாது விடுவதும் உனக்கு முக்கியமானதா?"

அவர்கள் சந்தோஷமாக பலத்த குரலில் சிரிக்கின்றனர். இரண்டு கிளாஸ்கள் வீழ்ந்து தூளாகின்றன. மதுச்சாலைப் பொறுப்பாளர் துடைப்பத்துடன் விரைகின்றார்.

"எனக்கும் அது விளங்கவில்லை.. இப்படியொரு கேள்வி எனக்குள் எழுந்துவிட்டது... அதுதான் கேட்டேன்..."

அவள் யார்? அவளும் அவர்களில் ஒருத்தியோ? அதை அவளிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஆர்வம் வேறு எனக்குள் வரவில்லை.....

இரவு 12 மணி போல, அவர்கள் வெளியேறிவிட்டனர். அவள் மட்டும் எனக்கு முன்னால், எவ்வளவு பியர் குடித்தாள் என்பதோ, எனக்கும் ஏதாவது வழங்கினாளா அல்லது நான் ஏதாவது அவளுக்கு வழங்கினேனா என்பது எனக்கு ஞாபகம் இல்லை.

"உங்களுடன் மேற் கொண்ட சம்பாஷணைக்காக நன்றி" என்றபடி அவள் ஆடி ஆடி வெளியேறியபோது, உண்மையிலேயே அவளுக்கும் எனக்குமிடையே ஓர் சம்பாஷனை ஏற்பட்டதோ என நான் வியந்து கொண்டேன் ஒருவேளை மயக்க நிலையில் நானும் அவளும் சம்பாஷித்திருக்கலாம்... அதனை வேறு யாரும் கண்டுமிருக்கலாம். எனக்கு எதுவுமே ஆச்சரியத்தையூட்டுவதாக இருக்கவில்லை.

மதுச்சாலையிலே நான் மட்டுமே தனியாக இருந்தேன். எல்லோரும் வெளியே போய்விட்டனர். சிலர் பலவந்தமாக வெளியேற்றப் பட்டுமிருக்கலாம். இதெல்லாம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சர்வசாதாரண விஷயங்கள். வெளியேற்றப்படும் கணத்தில் வெளியேற்றப்படுபவர்களுக்கு கோபம் வந்தாலும் மறுநாள் புதிதாகப் பிறந்தவர்கள் போலத்தான் அவர்கள் வருவர். இதெல்லாம் சகஜம்.

மதுச்சாலைப் பொறுப்பாளனும் எனக்கு அருகில் வந்து "மூடும் நேரம்" நெருங்கிவிட்டதை நினைவு படுத்தினான். என்னோடு அவன் எப்போதும் நாகரிகமாகவே நடப்பதுண்டு.

"எவ்வளவு செலுத்த வேண்டும்" எனக் கேட்கின்றேன்.

"நீங்கள் ஏற்கனவே செலுத்தி விட்டீர்கள்" என்றபடி என்னைப் பார்த்து களைப்பான உதட்டால் சிரிக்கின்றான். அவனது விழிகள் தூங்கத் துடித்துக் கொண்டிருந்தன.

நான் நானாக வெளியேறு கின்றேன். கோடையின் இரவுக் காற்று மெல்லிதாக எனது உடலைத் தழுவுகின்றது. எதிலுமே பிடிப்பற்றவன் போல றூம் நோக்கி நடக்கின்றேன். எனது றூம் இருந்த மாடிக்கட்டிடத்தின் கதவைத்திறக்கும் போது "உங்களிற்கு நல்லிரவு" என ஒரு குரல் என் காதில் விழுகின்றது. திரும்புகின்றேன். கட்டிடத்தின் முகப்பில் கம்பளத்தால் தன்னைச் சுருட்டிக் கொண்டிருந்தவள்.. அவள். சில கணங்கள் அவளது விழிகளையே பார்க்கின்றேன்.

மறுநாள் காலையில், எனக்கு நன்றி சொல்லிவிட்டு, எனது றூமிலிருந்து அவள் வெளியேறினாள்.

## தத்துவஞானியின்...

ஞானியின் மனிசி என்ரை மனிசிக்கு ரெலிபோன் அடிச்சு "நீர் குடம் உடைஞ்சுட்டு, என்ன செய்யிறது" எண்டு கேட்டிருக்கிரு. என்ரை மனிசி உடனே ஆஸ்பத்திரிக்கு போகச் சொல்லி அட்வைஸ் பண்ணியிருக்குது. இந்த வெங்காயம் ஞானி சொல்லியிருக்குது நியுமரோலஜிப்படி "அண்டைக்கு எட்டாம். அடுத்த நாள் போவம் எண்டு. என்ரை மனசி பேசிப் போட்டு பிந்தினால் தாய்க்கும் குழந்தைக்கும் ஆபத்து வரும் என்று எச்சரித்து விட்டு போனை வைத்துவிட்டுது.

அடுத்தநாள் பிள்ளை பிறந்து விட்டதாக அந்தப் பிள்ளை ரெலிபோன் பண்ணியதால் நானும் மனிசியும் உடனே ஆஸ்பத்திரிக்குப் போனோம். ஞானியின் மனிசி களைச்சுப்போய் படுத்திருந்தது. ஞானியைக் காணவில்லை அந்தப் பிள்ளை எழுந்ததும் நடந்ததை சொல்லியது. தாங்கள் ஆஸ்பத்திரிக்கு வந்தபோது தங்களுடைய டொக்டர் அவசரமாக 'நியூயோர்க்' போனதாயும் பதிலாய் வேறொருவர் வருவார் எண்டும் சொன்னார்களாம். ஞானி ஆடிப் போனானாம்.

ஞானி பயந்தது போல் வந்ததும் ஆம்பிளை டொக்டராம். ஞானி நேர்ஸ்மாரிடம் ஏதோ எல்லாம் கதைச்சானாம். தன்னை லேபர்ரூம்க்கு கூட்டிச்சென்றார்களாம் பிள்ளை பெறும் போது கூட இருப்பதாய் சொல்லியிருந்தபடி ஞானி அங்கு கூட இருக்கவில்லையாம் எல்லாரையும் திட்டினானாம். ஆம்பிளை டொக்டர் வேண்டாம் என்று தன்னிடம் சொல்லும்படி அடம் பிடித்தானாம். தான் கேட்டதற்கு ஆம்பிளை பொம்பிளை டொக்டர் எல்லாரும் ஒன்றுதான் என நேஸ்மார் சாதாரணமாய் சொல்லி விட்டினமாம்.

பிள்ளை பிறந்தபின் பிள்ளையை ஒருமுறை உற்று பார்த்துவிட்டு போனவன் தானும். வரவில்லை என அவன் மனைவி மனவருத்தப்பட்டா. உங்குதான் எங்கேயும் இருப்பான் என எனக்குப்பட்டது. தேடியதில் அங்கிருந்த வெயிற்றிங் றூமில் ஏதோ யோசனையில் ஆழந்திருந்தான் "தத்துவ ஞானி" கௌரி சங்கர். அவனைக்குழப்ப நான் விரும்பவில்லை. அவன் மனது என்ன சொல்லிக் கொண்டிருக்கும் என்பது எனக்குத் தெரியாதா என்ன?

அவன் மனது கேட்டுக் கொண்டிருப்பது இதுதான்.

"தவறிப்போன என்ரை மனிசியை என்ன செய்வது? சேர்ப்பதா விடுவதா?"

இதை அவனுயே முடிவு செய்யட்டும் என்று நான் விலகி வந்து விட்டேன்.

## ஜெயந்தீஸனின்..

கெட்டுவிடப்போகின்றது? இது சுழலும் உலகம், நாங்கள் சுழலலாம், சுழட்டலாம்... Et a lors? (அதற்கு என்னவாம்).

★ ★ ★

கோடை விடுமுறையின் போது எனது "தாயகமான" கனடாவுக்குப் போய்விட்டுத் திரும்பி வந்த நண்பர் ஒருவர் சில சங்கதிகள் சொன்னார். மொன்றியாலில் இருந்து 150 கிலோமீற்றர்களுக்கு அப்பால் உள்ள மலையொன்றில், எங்கடை தமிழர்கள் கோயில் கட்டியிருக்கிறார்களாம்... மலையடிவாரத்திலே கல் வைத்துப் பொங்கல் செய்கின்றார்களாம்.. மொன்றியாலின் ஒரு பகுதியில் தேர் இழுக்கின்றார்களாம்.. இன்னொரு மலையில் உள்ள வேதக் கோயிலுக்கு எம்மவர் முழங்காலில் படிகளில் ஏறிச் செல்வராம் என்பது நான் ஏற்கனவே அறிந்த விஷயம்.. இந்தத் திருக்காட்சிகளை அடுத்த கோடையில் வந்து காணக் கோடி கண்கள் வேண்டும் என்பது என் நேர்த்தி..

## கம்பியூட்டர்..

இவற்றையெல்லாம் ஞாபகத்தில் வைத்திருக்கிறது. உதாரணமாக ... அம்பாள் கோவில் மணி ஐந்து தடவை விட்டு விட்டு அடித்தால் இராணுவம் நாவலர் வீதியை தாண்டுகிறது என்றும் வைத்தீஸ்வரன் கோவில் மணி மூன்று தரம் அடித்தால் பங்கருக்குள் ஒளிக்க வேண்டும் என்றும் எமக்கு முதலிலேயே சொல்லி வைத்தால் நாம் அப்படியே செய்து கொள்வோம் அல்லவா. அது போல கம்பியூட்டரில் இலட்சக்கணக்கான நுண்ணிய இடங்களில் மின்சாரம் மாறி மாறி அமையும் போது அந்தச் சேர்க்கைக்கு ஏற்பு விளைவு அமைகிறது. இது ஆரம்பத்தில் புரிந்து கொள்வதற்காக எழுதினேன். ஆனால் துல்லியமான தொழிற்பாடு இப்படி அல்ல.

Windows லும் பல பதிப்புகள் வந்துவிட்டது. ஆனால் பொதுவாக பலரிடமும் இருப்பது பதிப்பு 3.1 அதன் பின்னர் பதிப்பு 3.11.. ஒரு புறம் இருக்க Windows NT என புதியது ஒன்றும் வந்துள்ளது. Windows ன் பதிப்பு 3.0 ஐ உங்கள் கம்பியூட்டரில் இணைக்க கம்பியூட்டர் சில குறிப்பிட்ட விஷயங்கள் பொருத்தப்பட்டதாக இருக்க வேண்டும். Micro processor, RAM, Hard drive, display card போன்ற விஷயங்கள்தான் அவை. இந்த விபரங்கள் சிலவேளை உங்களுக்கு புரியாமல் இருக்கலாம். பத்திரிகைகளில் இப்படியான சொற்கள் வரும்போது அதன் கருத்தை அறியவேண்டும் என்ற ஆவல் உங்களுக்கு வந்திருக்கும். சில சொற்களின் அர்த்தங்களையும் அவை பற்றிய சில உதாரணங்களையும் அடுத்த வாரம் பார்ப்போம்.

தொடரும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்

'எதையோ எழுத வேண்டும் என்பதற்காக புத்திசாலிகள் எழுதுகிறார்கள்.
எதையாவது எழுத வேண்டுமே என்பதற்காக முட்டாள்கள் எழுதுகிறார்கள்'



## அறு(சு)வை

# 'Sorry' ஸ்கந்தன் எழுதாத யாழ்ப்பணயம்

அறுஞர் பேராசிரியர் கல்லாநிதி கியூறியஸ் ஜி

இப்போது கொஞ்ச நாட்களாக நெடுஞ்சாலைகளிலும் பஸ்களிலும் பாதாள ரயில்களிலும் புலிகளின் படத்தைக் கண்டிருப்பீர்கள். புலிகளுக்கு கனடா அரசு அங்கீகாரம் தந்ததனால் தான் எல்லா இடமும் புலிப் படத்தை ஒட்டியிருக்கிறார்கள் என்று புலி ஆதரவாளர்கள் பெருமிதப்பட்டு, தலைவரின் படம் தான் அடுத்தது என்று கனவும் கண்டிருக்கக் கூடும். விசயம் அதுவல்ல. ரொறன்ரோ மிருகக் காட்சிச்சாலை இம்முறை பல்வேறு பூனை, புலி இனங்களைக் காட்சிக்காக வரவழைத்து கண்காட்சி நடத்துகிறது. இதற்காகத் தான் இத்தனை விளம்பரமும். அதில் புலி தன் வாலினால் எழுதியது போன்று விளம்பரப் பலகைகளில் எழுதியிருக்கும். ஓகே.. ஓகே.. அது வால் இல்லை. பிராண்டல்.

★ ★ ★

முன்பு புலிகள் முதன் முதலாக பத்து 'துரோகிகளை' ஒழித்த பின்னர் வீரகேசரிக்கு தங்கள் கடிதத் தலைப்புடன் உரிமைகோரியிருந்தனர். இது பற்றி பாராளுமன்றத்தில் பேசப்பட்ட போது, யாரோ ஒரு சிங்கள உறுப்பினர் 'அந்தக்கடிதத்தில் கையெழுத்தும் போடப்பட்டிருக்கிறதே' என்று கேட்டபோது அமிர்தலிங்கம் சொன்னார் 'அது புலியின் பிராண்டல்' என்று. கடைசியில் புலி அவரைப் பிராண்டியது வேறு பிரச்சனை.

★ ★ ★

இவ்வாறான பிராண்டல்களில் பல்வேறு விளம்பரங்கள் வந்திருந்தன. புலி என்றதும் கியூறியஸின் கவனம் அதிகமாவதில் ஆச்சரியமில்லையே. இதில் எனக்குப் பிடித்தது ஒரே ஒரு விளம்பரம் தான்.

The reports of our being of Man-eaters is just another example of media's penchant for exaggeration and innuendo. Come and see ,ourself. Journalists are welcome.

இதன் கருத்து: 'மனிதர்களைத் தின்பன' (புலிகளை man eaters என்று சொல்வதுண்டு) என்று எங்களைப் பற்றி வெளிவரும் தகவல்கள் எல்லாம் தொடர்புசாதனங்களுக்கு இருக்கும் மிகைப்படுத்தல்களுக்கும் பொய்யான தகவல்களைத் தருவதற்கும் இருக்கின்ற ருசிக்கான உதாரணங்களில் ஒன்று. நீங்களே நேரில் வந்து கண்டு கொள்ளுங்கள். பத்திரிகையாளர்களும் வரவேற்கப்படுகிறார்கள்.

ஆனால் இதில் உள்ள 'சுவையான' அம்சம் என்னவெனில் Journalists are welcome என்பது முதலில் Journalists are tasty என்று எழுதி, அதில் உள்ள tasty யை வெட்டி பின்னர் welcome எழுதப்பட்டிருக்கிறது. பத்திரிகையாளர்களைக் கடித்தால் ருசியாயிருக்கும் என்ற மாதிரி..

★ ★ ★

இது நம்மூர் புலிகளுக்கும்பொருந்தும். நாங்கள் மக்களைக் கொல்கிறோம், கப்பம்வாங்குகிறோம் என்றுவருகின்ற செய்திகள் எல்லாம் 'இங்கே சில பத்திரிகைகள் சொல்லும் மிகைப்படுத்தலும், பொய்யான தகவலுமாகும். நீங்களே நேரில் வந்து கண்டு கொள்ளலாம். பத்திரிகையாளரும் வரவேற்கப்படுகிறார்கள். (ஆமா, tasty!) என்ற மாதிரி உலகத்தமிழர் தொடக்கம் எல்லா 'நடுநிலை புலி ஆதரவுப் பத்திரிகைகளும்' எழுதி வருகின்றன. கியூறியஸ்க்கும் ஊருக்குப் போய் உண்மை நிலையை நேரில் அறிந்து வர ஆசை தான். பிறகு... ஏன் வம்பு? பத்திரிகையாளன் ருசியாயிருப்பான் என்று போய் அஜீரணமாகி..

போய் வந்து கூட உண்மையை உணர்ந்து கொள்ளாதவர்களை என்ன செய்வது?

வெளிநாட்டில் வாழ்பவர்களுக்கு ஊரில் என்ன நடக்கி றது என்பதை அறிவ தற்கு இருக்கின்ற ஆவல் காரணமாக.. அங்கு நடைபெறும் விடயங்களை வெளிக் கொணர்வது நிச்சயமாக உதவக் கூடியது. ஆனால் பயணக் கட்டுரைகளை பிரசார ஆயுதமாக பாவிப்பது தான் நடைபெறுகிறது. ஒரு பயணக் கட்டுரையில் ஒரு வெளிநாட்டு நிபுணரை எல்லையில் வைத்து பிடித்து 'சில தொழில் நுட்பங்களை' கேட்டறிந்தார்களாம். அதாவது எல்லையில் காவலில் நிற்பவரும் அந்த துறையில் நிபுணர் போலும்.

★ ★ ★

இந்த வகையில் கொஞ்சக் காலத்துக்கு முன் ஒருவர் போய் வந்து இதே மாதிரி... கயிறு திருத்திருக்கிறார். புலிகள் காசு இப்ப வாங்குவதில்லை என்று கனடாவில் சொன்ன போது.. சிலர் நம் மறுத்தார்கள். இவர்கள் நேரில் போய் வந்தால் ஒழிய நம்ப மாட்டார்கள். இவர்கள் கண்மூடித் தனமான எதிர்ப்பாளர்கள். நம்ப மறுப்பது இவர்களுக்கு சந்தோசத்தை தரும். என்னிடமும் நண்பனிடமும் படிவக்காசு நூறு ரூபா தவிர எந்த வித காசும் புலிகள் வாங்கவில்லை என்பது தான் சத்தியம்.. என்றிருக்கிறார். ஆமா.. பெரிய சத்தியவான் அரிச்சந்திரன்.

இவரது யாழ்ப்பயணம் பற்றிய கட்டுரை வந்ததுதான் வந்தது. பலர் கியூறியஸிடம் 'எப்படி, இதற்கு என்ன சொல்லப் போகிறாய்' என்று ஒரு நக்கல். அதாவது இவர் 304 விளையாட்டில் துரும்பு அடித்து விட்டு கம்மாரிசு அடிக்க பெருமிதத்தோடு பார்க்கிறாராம், நாங்கள் சும்மா கையைப் பிசைகிறோமாம். ஆகா..

இங்கே எனக்குத் தெரிந்த பலர் இந்த கட்டுரையில் வந்த விடயங்களை நம்பி புலிகள் காசு வாங்குவ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்

தில்லையாம், உவங்கள் சும்மா எழுதுறாங்கள் என்ற மாதிரி பேசிக் கொண்டார்கள். இதற்கான பதில் ஒன்றை எழுத வேண்டும் என்று மீசை துடிக்க நான் நின்ற போது 'அடக்கு, அடக்கு' என்றவர் ஆசிரியர். இந்த பதிலில் நான் ஆதாரமாக காட்ட வேண்டிய ஒரு குடும்பத்தினர் ஊரில் இருந்த நிலையில்... அவர்கள் கொழும்பு வரும் வரையில் எனக்கு ஆசிரியர் அனுமதி தரவில்லை. எங்கள் கருத்து மோதல் ஒருபுறம் இருக்கட்டும், அவர்கள் பிரச்சனையின்றி வந்து சேர்ந்த பின்னர் தான் நீ அதைப் பற்றி எழுதலாம். நீ எதையாவது எழுதப் போக அது அவர்களுக்கு சிக்கல்களைக் கொடுக்கக் கூடாது என்று சொல்லி 'அடக்கியவர்' அவர். அத்தோடு அன்னாரின் தந்தையார் இறந்த சேதி கேட்டு, அந்த துயரில் இருக்கும்போது எழுதக் கூடாது என்றும் காரணம் சொன்னார்.

★ ★ ★

இவ்வாறான கட்டுரையாளர்கள் எல்லாம் Let's make money out of this s.... கோஷ்டி தான். புலிகளை ஆதரித்தால் வியாபாரம் தங்கு தடையின்றி ஓகோ என்று ஓடும் என்றால் அது தான் அவர்களின் நிலைப்பாடு ஆகி விடும். கிட்டு பற்றி பரபரப்பாக பேசப்பட்டால் ஒரு தொடர் வரும்.. இடையில் மாத்தயா பற்றி பரபரப்பு என்றால் கிட்டு மறக்கப்பட்டு மாத்தயா பற்றி ஒரு தொடர் வரும். கொஞ்ச நாளில் அந்த சந்தடியும் அடங்கியவுடன் இரண்டு தொடர்களும் காரணமில்லாமல் நின்று விடும். இதைப் போன்று தான் இந்த பயண இலக்கியங்களும்.. இதனால் கொஞ்சம் பணம் சம்பாதிக்கலாம் என்றால் புத்தகமாகக் கூட வெளிவரும்.

பலர் இந்தப் பயணக்கட்டுரையை ஏதோ உண்மை மாதிரி படித்துக் கொண்டார்கள். காரணம்.. அவர்கள் எதைக் கேட்க, வாசிக்க விரும்புகிறார்களோ அது அங்கே சொல்லப்பட்டிருக்கிறது. புலிகள் நின்று போராடுகிறார்கள். மக்கள் முழு ஆதரவு, புலிகள் பணம் பறிப்பதில்லை. எல்லோருக்கும் சுதந்திரம் உண்டு என்ற மாதிரி...! தாயகம் தான் விசயம் தெரியாமல் உண்மையைத் தேடி எழுதப் போய் இடறுப்படுகிறது.

★ ★ ★

முதல் யார் இந்த கட்டுரையாளர்? இவரது நம்பகத் தன்மை என்ன? பச்சை இலக்கியம் படைத்தவர் இப்போது பயண இலக்கியம் படைக்க புறப்பட்டிருக்கிறாரே.. மணியன் மாதிரி.. கொலைபேசி கதை வெளிவந்த போது அது ஆபாசமானது என்று பச்சை இலக்கிய விமர்சனம் செய்தவர் இன்று உயிராபத்துக்களை எதிர்த்து துணிந்து போய் வந்திருக்கிறாரே.. உண்மை நிலையை வெளிக் கொணர்ந்திருக்கிறாரே என்று பலர் மெய்சிலிர்க்கலாம். இவர் ஏன் 'சொறி'ஸ்கந்தன் ஆனார்? காரணம் உண்டு. இவர் எந்த விமர்சனம் எழுதினாலும் வெளுத்து வாங்குவார். பிள்ளை அப்பாவை டடி என்று கூப்பிட்டதை 'தமிழ் சாகிறது' என்ற மாதிரி புலம்பியவர், தனக்கு வேண்டப்பட்டவர்கள் ஊரிலேயே தாயை 'மம்மி' என்று கூப்பிடுவதை சொல்லவில்லை. இங்கே வந்த பிள்ளை டடி என்று சொன்னால் மன்னிக்கலாம், ஊரில் அம்மா போய் மம்மி வந்தது எப்படி?

இப்படி இவர் விமர்சனம் எழுதியதும் சம்பந்தப்பட்டவர்கள் இவரைத் தேடிப் பிடித்து (முடிந்தால்) ஏன் அப்படி எழுதியிருக்கிறாய் என்று கேட்டதும் 'சொறி, தான் தெரியாமல் எழுதிப்போட்டன்' என்று மன்னிப்புக் கேட்பவர் தான் இந்த 'சொறி'ஸ்கந்தன். கலை, இலக்கியம் சம்பந்தப்பட்ட இருவரிடம் இவர் வகையாக மாட்டிக் கொண்டதும் மன்னிப்புக் கேட்டதும் தெரியும். அதிலும் ஒருவர் இவரை கதைப்பதற்காக தேடியபோது 'தலைமறைவாகி' விட்டார். பின்னர் அவர்கள் விசயத்தை விளக்கியதும் தான் எழுதுகின்ற விடயங்களில் அவர்கள் பற்றி புகழ்ந்து எழுதி முதுகு 'சொறி'வதிலும் ஈடுபடுவதுண்டு.

இவ்வாறாக நம்பகத்தன்மை அதிகமான இந்த விமர்சகர் நடுநிலையாக பயணக் கட்டுரை எழுதியிருக்கிறார் என்றால்... நம்ப முடியுமா? நாளை யாராவது பிடித்து 'என்ன இப்படி பொய் எழுதியிருக்கிறீர்' என்றால் 'சொறி, தெரியாமல் எழுதிப்போட்டன்' என்று சொல்லி விட்டு முதுகு சொறியத் தொடங்குவார்.

அஃதிருக்க, இவருக்கு சமீபத்தில் வழமை போல் முதுகு சொறிகின்ற ஒருவர் விருது கொடுத்தது தெரிந்திருக்கும்.

★ ★ ★

இந்த விருது விவகார கோமாளிக் கூத்து பற்றி விருது பெற்றவர் ஒருவர் வைபவம் ஒன்றில் மற்றவருக்கு சொல்லிக் கொண்டிருந்த போது காதை எறிந்ததில் கிடைத்தது... ஏதோ பெரும் விருது வைபவம் என்று போனால்.. சுமார் ஐநூறு பேர் மண்டபத்தில் இருந்தார்களாம். பின்னர் விருது பெறுவோர் கீழே செல்லவும் என்றவுடன் ஐநூறுபேரும் இறங்கிச் சென்றார்களாம். ஐநூறு பேரில் தமிழர்கள் தங்களுக்குத் தான் விருது என்று நம்பிப் போனால்.... போனால் சிறிய பதக்கம் ஒன்றை அணிவித்ததும் வாங்கிக் கொண்டு ஏற்கனவே ஆயத்தமாக நிற்கும் பிரமுகர்கள் நடுவில் நின்று ஒரு போட்டோ.. அவ்வளவுதான். விருது கிடைத்தது என்றால்.. ஏதோ ஒஸ்கார் விருது மாதிரி நினைக்காதீர்கள். ஒரு பதினைந்து நிமிடப் புகழ்!

★ ★ ★

அன்னார் தமிழ்ச்சோலை வானொலியில் பணியாற்றியதற்காகவும், நாடகங்கள் நடத்தியதற்காகவும் (எங்கே?) விருது. அதாவது உலகத்தமிழரின் வானொலியான தமிழ்ச்சோலை புலிகளின் பிரசாரங்களை மேற்கொண்டு வருகிறது. அதில புலிகளுக்காக பிரசாரம் செய்து வானொலி நிகழ்ச்சி நடத்தியவர் இன்று நடுநிலையாக ஒரு பயணக்கட்டுரை எழுதுகிறார் என்று நம்ப முடியுமா? அதுசரி.. இவர் முன்பு உலகத்தமிழர் வானொலியில் பணியாற்றிய பின்னர் ஏன் விலகிக் கொண்டார்? அவர் எழுதும் பத்திரிகையின் பாணியில் சொல்வதாயின் 'இவரது வீட்டை புலிகள் பறித்துக் கொண்ட பின்னர் ஒதுங்கிக் கொண்டார் என்று ஒரு கருத்து நிலவுகிறது. முன்பு உலகத்தமிழரில் பணமோசடி செய்தவர்கள் சிலர் விரட்டப்பட்ட போது இவரும் விரட்டப்பட்டார் என்றும் எமது பத்திரிகைக்கு சில முக்கியஸ்தர்கள் விசேடமாகத் தெரிவித்தார்கள். எது உண்மை என்பது போகப் போகத் தான் தெரியும்'.

என்ன நடந்தது என்பது எங்களுக்குப் பிரச்சனையில்லை. ஆனால் இவர் புலிகளுக்காக பிரசாரம் செய்யவில்லை என்று மறுப்பாரா? மொத்தத்தில் புலிகளே இவரை தங்கள் பிரசாரப் பீரங்கியாக பயன்படுத்துகிறார்கள் என்று நாங்கள் நினைக்கக் கூடாது? (மீதி 23 கேள்விகளையும் எழுத இங்கே இடமில்லை)

★ ★ ★

இங்கிருந்து போனவர், எங்காவது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்

ஒரு இடத்தில் தான் 'செந்தாமரையில் எழுதியவர் என்பதைக் குறிப்பிட்டிருக்க மாட்டாரா? அல்லது கனடாப் பத்திரிகைகள் பற்றிய (குறிப்பாக தாயகம் பற்றி) அங்குள்ள மக்களின் அபிப்பிராயத்தை கேட்டிருக்க மாட்டாரா? இவை பற்றி எதுவுமே சொல்லவில்லை. என்ன காரணமாயிருக்கும்? ஒருவேளை அந்த பத்திரிகையின் ஆசிரியருக்கே இப்படி தாக்குதல் நடந்தால் தனக்கு என்ன நடக்கும் என்ற பயமோ?

அல்லது புலிகள் தான் இவர் மேற்படி பத்திரிகையில் எழுதியவர் என்று அறியாமல் தான் இருப்பார்களா? அறிந்ததால் இவர் மனம் கோணாதபடி விசேட கவனிப்புகள் நடந்திருக்கலாம். யார் அறிவார்?

இவர் ஊருக்குப் போகும் தகவல் மிகவும் இரகசியமாகத் தான் வைக்கப்பட்டிருந்தது. ஆனால் கியூறியஸிற்கு அந்த தகவல் உடனடியாக 'சம்பந்தப்படாத வட்டாரங்களிடம்' இருந்து கிடைத்தது. ஒருவேளை தெரிந்தால் அங்கே சொல்லிக் கொடுத்து விடுவார்கள் என்ற பயமாக இருக்கலாம். அவ்வாறான 'எளிய' வேலைகளுக்கு எல்லாம் கியூறியஸ் போவதில்லை.

★ ★ ★

குடும்பத்தினருடன் சென்றவர் கொழும்பில் குடும்பத்தினரை விட்டு விட்டு தனியாக கப்பலில் சென்றாராம். குடும்பத்தினரையும் கூட்டிச் சென்று அவலப்பட வேண்டும் என்பதல்ல.. தனது குடும்பத்தின் மீது இருக்கும் அக்கறை போன்று தான் அங்கு இயக்கத்திற்காக செல்லும் குழந்தைகளின் பெற்றோருக்கும் இருக்கும் என்பதை ஏன் இவர் உணர மறுக்கிறார்? அங்கே குழந்தைகள் உயிரைக் கொடுத்து போராடும்போது தியாகிகள், மாவீரர் என்று போலித்தனமான கொண்டாட்டம், இங்கே தங்களின் பிள்ளைகளின் சொகுசுகளை இழக்கவும் விருப்பமில்லை. 'உலக மக்களை வியக்க வைத்த' (பெய்ருட்டில் குண்டு வைத்தவர்கள் தான் உலகை வியக்க வைத்தவர்கள்!) மில்லரின்(?) தந்தை கூட தன்னை பார்ப்பதற்கு யாரும் இல்லை என்று அழ, தாய் அவரை அதட்டுவதைக் கண்டேன் ஒரு பேட்டியில். அதில் தந்தை சொல்லும் கருத்து சிக்கலில் முடியும் என்ற தாயின் அச்ச உணர்வைத் தான் காண முடிந்தது. இது தான் யதார்த்த நிலை. புதையலுக்காக (தமிழ் ஈழத்திற்காக) பிள்ளைகளைப் பலி கொடுக்கும் நிலையல்ல இது. இயக்கத்தில் சேர்ந்து இறக்கும் யதார்த்தத்தை ஏற்றுக் கொண்டுவாழப் பழகி விட்ட தன்மை. ஒரு சில பெற்றோர் தங்களின் பிள்ளைகளை இயக்கத்தில் சேர்த்தது பற்றி உலகத்தமிழர் புளகாங்கித மடைந்து பிரசாரம் செய்யலாம். ஆனால் முகாம் வாசலில் கண்ணீரும் கம்பலையுமாக நின்ற பெற்றோர்களும் உண்டு.

கியூறியஸின் உறவினர் ஒருவர் ஊரில் புலிகள் எல்லோரையும் அழைத்து தங்கம் கேட்ட போது 'தன்னிடம் கொடுக்க தங்கம் இல்லை' என்று கூறி மகள் ஒருவரைக் கொடுத்தார். மகன் இருந்த போதும் மகளைக் கொடுத்தார்... எல்லோருக்கும் முன்பாக.. தன்னை ஒரு பெரிய மனிதனாகக் காட்டி... ஆனால் அந்தப் பிள்ளை கொஞ்ச நாளில் பங்கர் வெட்ட விட்ட போது திரும்பி வீட்டே வந்து விட்டாளாம். கியூறியஸ் தூக்கி வளர்த்த பிள்ளைகளில் ஒருத்தி அவள். சைக்கிளில் செல்லும் கியூறியஸ் பார்வையால் மிரட்டினால் போதும், அம்மா என்று அழுதபடியே ஓடிச் செல்வாள். இந்த பெண் தந்தையின் விலாசத்துக்காக போய் உயிரைத் தியாகம் செய்தால் இவர் போன்றவர்கள் மாவீராங்களை என்று கொண்டாடுவார்கள். தங்கள் குழந்தைகளை பத்திரமாக வைத்துக் கொண்டு.. இதென்னய்யா நியாயம்?

★ ★ ★

அசல் யாழ்ப்பாணப் புத்தி.. யாரையும் பயன்படுத்துகின்ற குணம்.. இங்கிருந்த போது புலி ஆதரவு.. மற்றக் குழுக்களை அடிவருடிகள், போராட்டத்தை காட்டிக் கொடுக்கிறார்கள் என்று வசை.. அங்கு போனால் பத்திரமாகப் போக வேண்டும் என்பதற்காக ஈ.பி.டி.பி நடத்துகின்ற கப்பல் சேவையில் பாதுகாப்பாக பயணம். அங்கே உயிருக்குப் பயந்து போகும் போது 'இந்த காட்டிக் கொடுக்கும் கும்பல் பற்றி யோசனை வரவில்லையோ'. இது தானய்யா தமிழன்.. நாளை ஈ.பி.டி.பி ஆட்சியமைத்தால் பிளேட்டை மாற்றி குதிரை ஓடுவான் முதுகில். கட்டுரையின் ஆரம்பத்தில் 'கப்பல் ஒன்றில் ஏற்றப்பட்டு' காங்கேசன் துறை சென்றதாகவும் இறுதியில் தான் ஈ.பி.டி.பி நடத்தும் கப்பல் சேவை என்றும் கூறுகிறார். 'இந்தப் பயணம் முழுவதும் புலிகள் காசு கேட்பார்கள், முன்பு பவுண் கொடுத்தீர்களா, வீடு இருக்கிறதா? இருந்தால் எழுத வேண்டி வரும்' என்றெல்லாம் சக பயணிகளால் நச்சரிக்கப்பட்டாராம். சக பயணிகள் எல்லாருமே வெளிநாட்டில் இருந்து வந்தவர்களா? இல்லை, அங்கே வசிப்பவர்களா? விசயம் தெரிந்தவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

★ ★ ★

வீடுகளைப் புலிகள் பறிக்கிறார்கள் என்ற செய்திகளை ஆரம்பத்தில் மறுக்கின்ற இவர் பின்னர் 'புலம் பெயர்ந்தோரின் வீடுகளைப் பொறுப்பேற்று போராளி, மாவீரர் குடும்பங்களுக்கு கொடுக்கிறார்கள்' என்கிறார். முன்பு திசை பத்திரிகையையும் புலிகள் 'கையேற்றுத் தான் கைவிட்டார்கள். இதன் மூலம் பெறப்படும் வாடகைப் பணம் இயக்கத்திற்கு செல்கிறது. உரிமையாளர்கள் நிரந்தரமாகச் சென்றால், கையளிக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் புலிகள் வீடுகளைப் பறிக்கிறார்கள் என்பது உண்மை. இவரது மொழியில் 'கையேற்கிறார்கள்'. இதே நபர் இறுதியில் 'ஒவ்வொரு கல்லும் குடும்பங்களின் ஆயிரமாயிரம் நினைவுகளை அல்லவா சுமந்து கொண்டிருக்கிறது.... எம்மவர்களுக்கு இது வேதனையான அனுபவமே' என்றும் சொல்கிறார். ஒரு வேளை இவரது வீடு ஏற்கனவே ஜப்தி பண்ணப்பட்டு விட்டதோ? 'முன்பு இவரது வீடு ஜப்தி பண்ணப்பட்டதால் மனமுடைந்து ஒதுங்கியதாகக் கூறப்படுவதும் உண்மையோ?'

★ ★ ★

இந்த நேரத்தில் கியூறியஸ் தன் முன்னோருக்கு பெரும் கடப்பாடுடையான். காரணம் கியூறியஸ்க்கு என்று அவர்கள் எதையும் வைக்கவில்லை. வீடோ, நிலமோ கியூறியஸின் பெயரில் இல்லை. என் பெயரில் சொத்து இருக்கப் போய் அதை இழக்க, வேதனைப்பட.... இதெல்லாம் தேவையா என்றெல்லாம் தீர்க்கதரிசனமாக நினைத்தோ என்னவோ என் முன்னோர் எனக்கு எதுவுமே விட்டுச் செல்லவில்லை. இருந்ததும் ஒரு ஓலைக்குடிசை. அதுவும் கால வெள்ளத்தில் கரைந்து விட்டது. . சங்க ஏடுகள் மாதிரி செல்லரித்துப் போய் விட்டது...

★ ★ ★



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அர்ச்சுனு வீதியைத் தேடியலேந்தால் அது ஸ்டேஷன் வீதி என்று தெரிய வந்ததாம். புதிய பெயர்கள் மக்களிடையே புளக்கத்தில் வந்ததாக தெரியவில்லையாம். முன்புதான் செந்தாமரை ஆசிரியர் எங்கள் ஊரில் ஆலடி வீதி, வேம்படி வீதி என்று பெயர்கள் உள்ளன, அவற்றுக்கு மாவீரர் பெயரை வைப்பதில் தப்பில்லை என்று ஆசிரியர் தலையங்கம் எழுதியிருந்தார். அவரிடம் இதை ஞாபகமூட்டலாமே.. நல்லூருக்கு திலீபன் நகர் என்று பெயர் வைத்தும் என்ன? மக்கள் பயன்படுத்தவில்லை யே.. ஆயுத முனையில் எதையும் திணிக்க முடியாது என்பது இதுதான்.

★ ★ ★

பாடசாலைக்கு சென்றவர் தங்கள் அதிபர் இதில் தான் மரணித்திருக்க வேண்டும் என்று நினைவு கூருகிறார். அவரைத் தான் புலிகள் துரோகி என்று சுட்டுக் கொன்றார்களே.. துரோகிகளுக்கு அஞ்சலி செலுத்துவது தவறல்லவா? அதுவும் வடமறவன் கிட்டு தானே அவரது மரணத்துக்கு காரணம்.

★ ★ ★

பாஸ் எடுக்கச் சென்ற போது 'பத்தாயிரம் கேட்பார்கள், லட்சம் கேட்பார்கள். இருட்டறைக்குள் வைக்க வேண்டி வரும்' என்று கனடாவில் கேள்விப்பட்ட கதைகள் நினைவுக்கு வந்ததாம். அவர்கள் எதுவும் கேட்காமல் விசாவைத் தந்த போது தன் கண்களை நம்ப முடியாமல் கையைக் கிள்ளிப் பார்த்துக் கொள்ளாத குறையாக 'நீங்கள் இப்ப காசு வாங்குவதில்லையா?' என்று கேட்ட போது மறுத்ததுடன் வெளிநாட்டில் இருப்போர்கள் இங்கு என்ன நடக்கிறது என்பதை வந்து பார்க்க வேண்டும் என்று கூறப்பட்டதாம்.

இதுதான் இன்னொரு யாழ்ப்பாணப் புத்தி.. தனக்கு பிரச்சனை என்றால் முழு உலகத்துக்கும் பிரச்சனை. தனக்கு நடக்கா விட்டால் ஒருவருக்குமே பிரச்சனை இல்லை. புலிகள் தங்கம் வாங்குவது, பணம் வாங்குவது உண்மை. ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கப்பட்ட குடும்ப அட்டையில் அவர்கள் இயக்கத்திற்கு பணம், தங்கம் கொடுத்த விபரங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. பாஸ் எடுக்கச் செல்லும் போது அவர்கள் ஏற்கனவே திறை செலுத்தியிருந்தால் அவர்களிடம் புதிதாகக் கேட்பதில்லை. மற்றவர்கள் செலுத்த வேண்டும். இது கியூறியஸின் உறவினர்கள் இருவர் சமீபத்தில் ஊர் சென்று கண்ட நிலை. இவரிடம் வாங்கவில்லை என்றால் யாரிடமும் வாங்கவில்லை என்று 'உண்மையைத் தேடி'யும் யதார்த்தத்தை கண்டடையாத இவரை என்ன செய்ய முடியும்? இவர் போன்றவர்கள் நம்ப மறுப்பார்கள். நம்பாமலிருப்பது இவர்களுக்கு சுகம் தரும். இப்போதும் முழுக் குடும்பத்தினரில் மூன்று வயதுப் பிள்ளையை விட்டு மற்றவர்களுக்கு பாஸ் கொடுத்ததும் உண்டு. ஐந்து பிள்ளைகளில் ஒருவரை விட்டு மற்றவர்களுக்கு பாஸ் கொடுத்ததும் உண்டு. காரணம் கொழும்பில் அவர்களுக்கு தூதுவரகம் விசா கொடுத்ததும் பணத்தைக் கொடுத்து மீட்டுச் செல்வார்கள் என்பதால். இவரால் தன்னை மட்டும் தான் உதாரணம் காட்ட முடியும். கியூறியஸால் இப்படி ஆயிரம் உதாரணம் ஆதாரங்களுடன் காட்ட முடியும். கியூறியஸின் தந்தையார் கூட புலிகளால் தங்கம் கேட்டு சிறையில் அடைக்கப்பட்டவர் தான். அங்கே தன்னோடு சுமார் இரண்டாயிரம் பேர் வரை இருந்ததாக சொன்னார். சராசரி அத்தனை பேருக்கும் 25 ஆயிரம் ரூபா பார்த்தால் வருமானம் எவ்வளவு? சும்மா கண்ணை மூடியபடி உலகம் இருண்டு கிடப்பதாக நினைக்காதீங்கப்பா!

★ ★ ★

மண்ணின் பாதுகாவலரிடம் போக, வர அனுமதி பெறுவதில் தனக்கு எந்த மன உழைச்சலும் ஏற்படவில்லையாம். 'போராட்ட காலத்தில்' தனக்கென்ன விதிவிலக்கு என்கிறார். ஆகா.. என்ன பெரிய மனது? 'அவர்கள் இல்லாட்டி நாங்கள் வீட்டிற்கே வந்திருக்க முடியாது' என்கிறார். ஆனால் ஈ.பி.ஆர்.எல்.எப் ஐ ஆதரித்தார்கள் என்பதற்காக ஒரு கிராமத்தினரையே விரட்டி வெளியேற்றியது இவருக்கு தெரிந்திருக்க நியாயமதில்லைத் தான். 86ல் இன்னொரு இயக்கத்திற்கு சாப்பாடு கொடுத்தார்கள் என்பதற்காக அறுபது குடிகள் வாழும் கிராமம் ஒன்றில் இதுவரை ஐந்து பேர் துரோகிகள் என்று கொல்லப்பட்டு நால்வர் சிறையிலும் வைக்கப்பட்டிருப்பதும் அவர்கள் யாரும் வெளியேற முடியாமல் தடுக்கப்பட்டிருப்பதும் இவருக்குத் தெரியாதுதான். ஏதோ உலகம் உங்களைச் சுற்றியிருக்கிற மாதிரி அல்லவா நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். ஏன் சொந்த மண்ணில் வாழ்ந்த முஸ்லிம்களை கொஞ்சநேர அவகாசத்தில் விரட்டியது தெரியாது. உங்களுக்கு பாஸ் போன்ற விடயங்கள் எந்த மன உழைச்சலையும் ஏற்படுத்துவதற்கு காரணம் இல்லைத்தானே. வாழ்நாளில் இனி எப்போது யாழ்ப்பயணம்...? ஒரு தடவை பயணத்தில் கஷ்டம் இருக்காதுதானே.

குடாநாட்டில் பத்து வயது முதல் 24 வயது வரையோர் வெளியேறத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார். அவர்களுக்கும் எந்த மன உழைச்சலும் ஏற்படாது என நம்புவோமாக.. ஏனென்றால் போராட்ட காலத்தில் அவர்களுக்கு என்ன விதிவிலக்கு?

புனிதப் போராளிகளிடம் தான் 'செல்வாக்குப் பாவித்து வருபவர்களும்' இருக்கிறார்கள். விலை உயர்வையும் பதுக்கலகளையும் பதுக்கல்களையும் ஏன் கட்டுப்படுத்தாமல் இருக்கிறார்கள் என்று புரியவில்லையாம்.. ஒண்ணும் தெரியாத பாப்பா.. வியாபாரிகள் தகுந்த திறையை மன்னர்களுக்கு செலுத்தினால் எதையும் செய்யலாம். இந்த சுமையெல்லாம் மக்கள் மேல சுமத்தப்படுவதை கண்டும் காணாமல் இருப்பார்கள்.

★ ★ ★

சிறு தவறு நிகழ்ந்தாலும் தலைவரிடம் அறிவித்தால் சரியாகும் என்று மக்கள் நினைக்கிறார்களாம். மக்களின் குறைபாடுகளைக் கேட்டு தலைவர் நடவடிக்கை எடுப்பதை அறிந்து கொண்டாராம். நல்ல விசயம். முன்பு ஒருமுறை புலிகளின் வதை முகாமில் இருந்து தப்பிச் சென்ற ஒருவருக்கு அடைக்கலம் கொடுத்த ஒருவரை புலிகள் பிடித்துச் சென்றனர். நீண்ட நாட்களாக அவரை தடுத்து வைத்த போது வீட்டார் சென்று கேட்ட போது காட்டவில்லை. அப்போது மகன் தலைவருக்கு கடிதம் எழுதினான்.. உங்களின் பிறந்த நாளின் போது எல்லாருமே கொண்டாடுகிறார்கள், எனது பிறந்த நாளின் போது என் அப்பாவைக் காட்ட அனுமதியுங்கள்' என்று. கடைசியாக தந்தை சித்திரவதையின் போது கொல்லப்பட்ட விடயம் தாயகத்தில் வந்த செய்தி ஒன்றினூடாகத் தான் குடும்பத்தினருக்கு தெரியவந்தது. இந்த துயரங்களை ஞாபகத்தில் வைப்பது நல்லது... மனநீதி காணாத சோழன்!

★ ★ ★



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்

பொம்மைவெளி, புலிகளின் தடைமுகாம் பற்றி கேள்விப்பட்டவை முரணுக இருப்பதால் எழுத முடியவில்லையாம். சாதாரண மக்கள் சுவருக்கும் காது இருக்கும் என்று நம்புகிருர்கள், அரசியல் விசயங்களை கதைப்பதைத் தவிர்க்கிருர்கள் என்று எல்லாம் ஒத்துக் கொள்கிருர். நல்ல விசயம்.

இந்த சனியன் பிடிச்ச சண்டை நிற்காதோ என்று ஏதோ இப்போது தான் தான் கண்டுபிடித்த மாதிரி வேதனைப்படுகிருர். இதைத் தானே நாங்கள் ஐந்து வருடங்களாக சொல்லிக் கொண்டிருக்கிருேம். ஊருக்குப்போய் 'தேடிக்கண்டுபிடித்த உண்மை' இதுதானு? இந்த யுத்தம் முடிவுக்கு வந்து அமைதி திரும்ப வேண்டும் என்பதைத் தானே இவ்வளவு நாள் சொல்லிக் கொண்டிருக்கிருேமே..

★ ★ ★

இந்த பயணக்கட்டுரையில் எத்தனையோ விசயங்களை சொன்னுலும் "இங்கே சில பத்திரிகைகளின் புலிகள் பற்றிய பிரசாரம் 'மனிதர்களைத் தின்பன' என்று எங்களைப் பற்றி வெளிவரும் தகவல்கள் எல்லாம் தொடர்புசாதனங்களுக்கு இருக்கும் மிகைப்படுத்தல்களுக்கும் பொய்யான தகவல்களைத் தருவதற்கும் இருக்கின்ற ருசிக்கான உதாரணங்களில் ஒன்று. நீங்களே நேரில் வந்து கண்டு கொள்ளுங்கள். பத்திரிகையாளர்களும் வரவேற்கப்படுகிருர்கள்" என்ற மாதிரித்தான் என்ற பிரமையை ஏற்படுத்தத் தான் பல இடங்களிலும் முயன்றிருக்கிருர்.

இவர் எழுதாது மறைத்த யாழ்ப்பணயம் இதுதான். பல ஆண்டுகளாக மேல்நாடொன்றில் தன் குடும்பத்தினரைப் பிரிந்து வசித்து வந்த ஒருவர். தனது குடும்பத்தினருடன் இணைய வேண்டும் என்ற ஆவல் நிறைவேற நாட்கள் சென்றன. பின்னர் உறவினர்கள் பிணையில் நிற்க, மனைவியும் மகனும் கொழும்பு வந்து சேர்ந்தனர். கொடுத்த தவணை மூன்று மாதத்தில் திரும்பாமல் தொடர்ந்தும் தங்கியதும், சரியாக மூன்று மாத முடிவில் வீட்டில் வந்து பிணை நின்றவர்களைப் பிடித்து, ஐம்பதாயிரம் ரூபா பணம் பறித்துக் கொண்டார்கள். பின்னர் புதல்வியர் இருவரையும் தந்தை தன்னிடம் அழைப்பதற்கு ஆவன செய்து, தூதுவரகம் எல்லா அனுமதியும் வழங்கிய பின்னரும் 'இந்த பூசாரிகள்' வரம் கொடுக்கவில்லை. தூதுவரகம் கொடுத்த காலை எல்லை முடிந்ததும் மீண்டும் நிலைமை கண்டு மனமிரங்கி நீடிப்பு கொடுத்தது. தங்கள் ஊரிலிருந்து பாஸ் எடுப்பதற்காக வயோதிபப் பேத்தியார் தலைமையகத்திற்கு நடந்து சென்று கேட்ட போது மறுப்பே பதிலாக வந்தது. நான்கு லட்சம் ரூபாவும் நகைகளையும் கொடுத்த போது மறுக்க. . பேத்தியார் அவர்களின் காலில் விழுந்து.. (இது உண்மை) கும்பிட்டு மன்ருட.. நாங்கள் கடவுள் இல்லை என்று தொடர்ந்தும் மறுப்பு. விரக்தியில் பிள்ளைகள் போக மாட்டோம் என்று கூட கூறிக் கொண்டனர். பின்னர் ஆறு லட்சம் ரூபாவும் வீடு, நகைகள் கொடுத்த பின்னரே 'மனமிரங்கி' விசா வழங்கப்பட்டது. வழங்கப்பட்ட அன்றே புறப்பட்டு கொழும்பு வந்து சேர்ந்து மேல் நாடொன்றில் அவர்கள் தந்தையுடன் சேர்ந்துள்ளனர். வேலையில்லாமல் நீண்ட காலம் அரச உதவிப்பணத்தில் தான் தன்னையும் குடும்பத்தினரையும் பராமரித்துக் கொண்டவரை, வெளிநாட்டில் நீண்ட காலமாக இருப்பதாகக் கூறி இவ்வளவு பணத்தையும் பிடுங்கிக் கொண்டார்கள். புலிகளின் இந்த 'மனிதநேயம்' பற்றி இவர் அறிந்திருக்கவில்லை.

இது வழமையான 'தாயகத்தின் பொய்' அல்ல. இது பற்றி சிறிஸ்கந்தனுக்கும் தெரியும். இவர் யாழ்ப்பாணம் சென்ற போது இவர்களை வெளியே கொண்டு வர முயற்சிகளும் எடுத்தார். தோல்வி கண்டார். இதையெல்லாம் முற்ருக அறிந்து கொண்டு இவர் தனது பயணக் கட்டுரையில் எழுதியது இரண்டே வரிகள்... வயது காரணமாக யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேற முடியாமல் வெளிநாட்டில் உள்ள தந்தையுடன் இணைய முடியாமல் தவிக்கும் நண்பனின் இரு பெண் பிள்ளைகள்.. இவ்வாருக பல துயரங்கள்.. என்று எழுதுகிருர்.

இப்படி ஒரு துயரத்தை நேரில் கண்டு, அவர்கள் பணயம் வைத்து பணம் பறித்ததை நேரில் அறிந்த பின்பும், புலிகள் காசு வாங்குவதில்லை, இது சத்தியம் என்று எழுதினுல்..

எழுத்தின் சத்தியம் தெரியாத உங்களுக்கு எல்லாம் எதற்கையா ஒரு பேனை? விருது? தூ!

*This newspaper is published by Georgicka communications.*
*A member of Ethnic Press Council Of Canada.*
*Editor: George R.Ckrhushchev*
இப்பத்திரிகை ஜோர்ஜிக்கா தொடர்பு நிறுவனத்தினுல் வெளியிடப்படுகிறது.
ஆசிரியர்: ஜோர்ஜ் இ. குருஷ்சேவ்

தொடர்புகளுக்கு
*Georgicka communications*
*P.O.Box 1031, Station "F",*
*Toronto, Ont, M4Y 2T7.*
*Tel: (416) 920 9081*
*Fax: (416) 963 5738*
*E mail:71650.3216 @Compuserve.com*

*வாசகர்களின் வசதி கருதி தொலைபேசி பதிவு சேவை ஒன்றை தொடங்கியுள்ளோம். வெளிவந்த ஆக்கங்கள் பற்றிய உங்கள் கருத்துக்கள், முனியின் கேள்வி பதில்களுக்கான கேள்விகள், ஆக்கபூர்வமான கருத்துக்களை வெள்ளி மாலை முதல் ஞாயிறு நள்ளிரவு வரையில் 963 5738 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு ஒலிப்பதிவு செய்யலாம். தொடர்புகளுக்கு உங்கள் தொலைபேசி இலக்கத்தையும் பதிவு செய்ய மறக்காதீர்கள்.*

*உங்கள் ஆக்கங்கள், பத்திரிகை பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்கள் என்பவற்றை வரவேற்கிருேம். உங்கள் கருத்துக்களை எழுத்து மூலமாக அனுப்புங்கள். உங்கள் கருத்துக்கள் எதுவாயினும் பிரசுரிக்க முயற்சிப்போம். ஆக்கங்கள் தரங்கண்டு பிரசுரமாகும். ஆக்கங்களின் கருத்து சிதையாமல் மாற்றங்கள் செய்ய ஆசிரியருக்கு உரிமை உண்டு. ஆக்கங்களுடன் உங்கள் தொலைபேசி இலக்கங்களையும் விலாசங்களையும் குறிப்பிடுங்கள். படைப்புகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பு. படைப்புகளில் வரும் கருத்துகள் ஆசிரியரின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லை*

## தாயகம்
## சந்தா விபரம்

கனடா ஆறுமாதம் $30
வெளிநாடுகள் ஆறு மாதம் US$60
வெளிநாட்டு வாசகர்களின் காசோலைகளின் இலக்கம் encoded செய்யப்பட்டிருக்க வேண்டும். காசோலைகள் அனைத்தும் Georgicka communications பெயருக்கு எழுதப்பட வேண்டும். (தாயகத்தின் பெயருக்கு அல்ல)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்

இலங்கை, இந்திய, கனடிய உணவுப் பொருட்கள்
அனைத்தும் ஒரே இடத்தில்! மலிவு விலைகளில்!!

# அன்ரனி பிறதர்ஸ்

★ உடன் மீன், இறைச்சி, மரக்கறி, பழவகைகள்

★ போட்டோக்கொப்பி, ஃபாக்ஸ் வசதிகள்

★ தமிழ்,ஹிந்தி, மலையாள வீடியோக்கள் வாடகைக்குப் பெறலாம்

★ லேசர் இசைத்தட்டுக்கள் மலிவு விலையில்


★ தமிழக, இலங்கை வாரப்பத்திரிகைகள், சஞ்சிகைகள் அனைத்தும் உடனுக்குடன்

★ முத்திரை, சிகரெட், TTC Tickets, Lottery Tickets

## ANTONY BROTHERS

1472 Queen St West (Queen/Lansdowne)
Toronto, Ont. M6K 1M4
TEL:(416) 588-0733
TEL/FAX:(416) 516 3903

வாரத்தில் 7 நாட்களும்
காலை 9 மணி முதல்
இரவு 11 மணி வரை




## ANTONY BROTHERS FASHION HOUSE

1484 QUEEN ST WEST
Tel:(416) 588 0310

சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஆண்கள், பெண்கள், குழந்தைகளுக்கான உடைகள்,

சுவாமிப் படங்கள், பரிசுப் பொருட்கள், பெண்களுக்கான அலங்காரப் பொருட்கள், எவர்சில்வர் பாத்திரங்கள், ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு நாடாக்கள்

**அனைத்தும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ள**

SIVA'S TRADING CO LTD

ஸ்காபரோ நகரின் தன்னிகரற்ற
தமிழ் வியாபார நிலையம்

# சிவாஸ் ரேடிங் கோ லிமிட்

TRADING CO LTD
SIVA'S
321-2739

★ இலங்கை, இந்திய உணவுப்பொருட்கள்
★ உடன் இறைச்சி, கடலுணவு,
★ பசுமையான மரக்கறி வகைகள்
★ தயாரிக்கப்பட்ட உணவுவகைகள் (இடியப்பம், தோசை, அப்பம்)
★ சமையல் உபகரணங்கள்
★ இலங்கை, இந்திய சஞ்சிகைகள்

அனைத்துப் பொருட்களும் மலிவு விலையில்

3852 FINCH AVE EAST (KENNEDY/FINCH)
TEL:(416) 321 2739

P.S.T.T

வீடியோ ஒலிப்பதிவு நாடாக்கள், இந்திய உணவு வகைகளின் மொத்த விற்பனையாளர்

சகல புதிய, பழைய தமிழ், இந்தி, மலையாளப் படங்கள் வாடகைக்கு கிடைக்கும்

5210 FINCH AVE EAST #23
(FINCH/MIDDLEFIELD)
TEL:609-0141

VIDEO TRANSFER
(ANY SYSTEM)
$8.99